# பி.லிட். – முதலாமாண்டு

## *DJL11* : தாள் - 1, இலக்கணம் - 1, நன்னூல் எழுத்ததிகாரம்

அலகு - 1 - நன்னூல் அறிமுகம் எழுத்ததிகாரம் - எழுத்தியல்

அலகு - 2 - முதல்நிலை நன்னூல் பதவியல்

அலகு - 3 - உயிரீற்றுப் புணரியல் (முதற்பகுதி)

உயிரீற்றுப் புணரியல் (தொடர்ச்சி)

அலகு - 4 - மெய்யீற்றுப் புணரியல் (முதற்பகுதி)

மெய்யீற்றுப் புணரியல் (தொடர்ச்சி)

அலகு - 5 - உருபுப் புணரியல்

# அலகு - 1 : நன்னூல் அறிமுகம் எழுத்ததிகாரம் - எழுத்தியல்

**நன்னூல் அறிமுகம்**

இலக்கண நூலாகிய நன்னூல் தொல்காப்பியத்தை அடியொற்றி படைக்கப்பட்டது. இந்நூலைப் பின்பற்றி பிற்காலத்தில் பல்வேறு இலக்கண நூல்கள் தோன்றின. இதன் சிறப்பினை

**முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினுள்**

**நன்னூலார் தமக்கு எந்நூலாரும்**

**இணையோ என்னும் துணிவே மன்னுக"**

என சுவாமிநாத தேசிகர் தம் இலக்கணக் கொத்து உரையில் புகழ்ந்துரைக்கின்றார். இந்நூலின் சிறப்பினை இதில் அமைந்துள்ள சிறப்புப் பாயிரத்தின் வாயிலாக அறியலாம்.

**ஆசிரியர் அறிமுகம்**

பவணந்தி என்னும் சமண முனிவர் இந்நூலை இயற்றினார். இவர் சண்மதி முனிவரின் மாணவர். தொண்டைநாட்டுச் சனகாபுரத்தைச் சார்ந்தவர். சீயகங்க மன்னனின் நண்பர். மூன்றாம் குலோத்துங்க சோழனின் கீழ் ஆட்சி செய்தவன் சீயகங்கன் (கி.பி – 118) இம்மன்னன் தொல்காப்பியத்தின் கடினத்தையும் அருமையையும் எழுதில் அறியமுடியாத மக்களுக்காக தமிழ் இலக்கணத்தை சுருக்கி விளக்க வேண்டினான். இவ்வேண்டுகோளை ஏற்று பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார். இந்நூல் பழமையை நீக்கி புதுமையைப் புகுத்தி சிறப்பாக வெளிவந்த நூல் ஆகும்.

**நூல் அறிமுகம்**

நன்னூல் ஐந்திலக்கணம் முழுமையையும் குறிப்பிடும் நூல் என அதன் சிறப்புப் பாயிரம் சுட்டுகிறது. ஆயினும் தற்கால நன்னூலில் எழுத்து சொல் ஆகிய ஈறிலக்கணங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. எனவே நன்னூல் எழுத்து, சொல் ஆகிய இரு அதிகாரங்களைக் கொண்டு அமைந்துள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஐந்து இயல்களை உடையது. எனவே இந்நூலில் பத்து இயல்கள் காணப்படுகின்றன. இவை தவிர நூலின் தொடக்கத்தில் பாயிரம் என்னும் பகுதியும் அமைந்துள்ளது. இப்பாயிரம் பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு வகைப்படும். இந்நூலில் 462 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இதில் எழுத்ததிகாரம் 257 நூற்பாக்களை உடையது. இந்நூலுக்கு மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், சிவஞானமுனிவர், ஆண்டி புலவர், இராமானுச கவிராயர், ஆறுமுக நாவலர், விசாகப் பெருமாள் ஐயர், ஜி.யூ. போப் முதலியோர்

உரை எழுதியுள்ளனர். நன்னூல் கட்டமைப்பினை ஓர் அட்டவணை வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

நன்னூல் (462)

- பாயிரவியல் (55)
- எழுத்ததிகாரம் (5 இயல்கள் - 202)
- சொல்லதிகாரம் (5 இயல்கள் - 205)

எழுத்ததிகாரம்

- எழுத்தியல் (72)
- பதவியல் (23)
- உயிரீற்றுப் புணரியல் (53)
- மெய்யீற்றுப் புணரியல் (36)
- உருபு புணரியல் (18)

## பாயிரம்

தமிழ் மொழியில் எழுத்து, சொல், யாப்பு, அணி என ஐவகை இலக்கண அமைப்புகள் உள்ளன. இவற்றில் முதல் இரண்டையும் நன்னூல் ஆசிரியர் இந்நூலில் விளக்குகிறார். இதற்குமுன் பாயிரம் என்னும் பகுதியை அமைத்துள்ளார். இதில் அவர் வழங்கும் செய்திகள் பொதுவானவை. 'பாயிரம்' என்பதற்கு விளக்கம் தரும் வகையில்

**முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம்,**

**புறவுரை, தந்துரை, புனைந்துரை பாயிரம்**

எனும் முதல் நூற்பா அமைந்துள்ளது.

முகவுரை என்னும் சொல்லின் வழி, நூலுக்கு முன், தொடக்கத்தில் சொல்லப்படுவது பாயிரம் என்றும் நூன்முகம் என்னும் சொல்லின் வழி, நூலின் முகப்பில் முகம் போல் முதன்மை பெற்று விளங்குவது பாயிரம் என்றும் அறியலாம். எல்லா நூல்களுக்கும் பொதுவாக அமைவது பொதுப்பாயிரம். நன்னூல் என்னும் ஒரு நூலுக்கு மட்டும் உரியதாய் அமைவது சிறப்புப்பாயிரம் ஆகும். எனவே பாயிரம் இருவகைப்படும். இதனை

பாயிரம்

- பொதுப்பாயிரம்
- சிறப்புப்பாயிரம்

என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம்.

**பாயிரம் பொதுச் சிறப்பு என இருபாற்றே (நன் : 2)**

என்னும் நன்னூல் நூற்பா பாயிரத்தின் வகைகளுக்கு இலக்கணம் தருகிறது.

**பொதுப் பாயிரம்**

பொதுப்பாயிரம் ஐந்து கூறுகளை உடையது. அவை நூலின் வரலாறு, கற்பிக்கும் ஆசிரியரின் வரலாறு, மாணவர்க்குக் கற்பித்தலின் வரலாறு, மாணாக்கர் வரலாறு, மாணவர் கற்றலின் வரலாறு ஆகியனவாகும்.

**நூலே நுவல்வோன் நுவலும் திறனே**

**கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்**

**எல்லா நூற்கும் இவைப் பொதுப்பாயிரம் ( நன் : 1 )**

என்னும் நூற்பா பொதுப்பாயிரத்திற்கு இலக்கணம் வகுக்கிறது.

நூல் - படிக்கப்போகும் நூல்

நுவல்வோன் - பாடம் நடத்தும் ஆசிரியர்

நுவலும் திறன் - பாடம் நடத்தும் முறை

கொள்வோன் - மாணவன்

கோடற்கூற்று - படிக்கும் முறை

என இவ்ஐந்தினையும் விளங்கிக் கொள்ளலாம். இவை நூல் - ஆசிரியர்- மாணவர் என்னும் மூன்று பிரிவுகளில் உள்ளடங்கி அமைவதைக் காணலாம்.

**1. நூலின் வரலாறு**

நூலின் இயல்பு, நூலின் வகை, நூலின் பயன், நூலின் கொள்கை (மதம்), நூலின் குற்றம், நூலின் அழகு, நூலின் உத்தி, நூலின் பகுப்பு, புகுப்பின் அலகு, நூலின் உரை, நூலின் பெயர்க்காரணம் ஆகியவற்றை விளங்கிக் கொள்வதன் வாயிலாக நூலின் வரலாற்றினை அறிந்து கொள்ளலாம். இதனை,

**நூலின் இயல்வே நுவலின் ஒரிரு**

**பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்**

**நூற்பொருட் பயத்தோடு எழுமதம் தழுவி**

**ஐயிரு குற்றமும் அகற்றி அம்மாட்சியோடு**

**எண்ணான்கு உத்தியின் ஒத்து படலம்**

**என்னும் உறுப்பினில் சூத்திரம் காண்டிகை**

**விருத்தி ஆகும் விகற்பநடை பெறுமே (நன் : 4)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**நூலின் இயல்புகள்**

1. இருவகைப் பாயிரங்களை உடையது.
2. மூவகைகளில் ஒன்றாய் அமைவது.
3. நால்வகைப் பயன்களை அளிக்கவல்லது.
4. எழுவகை மதங்களைத் தழுவியது.
5. பத்துவகைக் குற்றங்கள் இல்லாதது.
6. பத்துவகை அழகுகளைப் பெற்ற விளங்குவது.
7. முப்பத்திரண்டு வகை உத்திகளை உடையது.
8. ஓத்து - படலம் எனும் பிரிவுகளை உடையது.
9. சுருக்கமான நூற்பா அமைப்புடையது.
10. காண்டிகை - விருத்தி எனும் இருவகை உரைகளை உடையது.


இவையே நூலின் வரலாறு ஆகும். நூல் என்பது இலக்கண நூலாகும் நூற்பா என்பது நூலுக்குரிய பா ஆகும்.

**2. நூலின் வகை**

ஒரு நூல் முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என மூன்று வகைப்படும். இதனை

**முதல், வழி, சார்பென நூல் மூன்று ஆகும் (நன் : 5)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.



என்னும் அட்டவணை தெளிவுபடுத்துகிறது. இவற்றை எடுத்துக்காட்டுகள் வாயிலாக விளங்கிக் கொள்ள முடியும்.

**முதல் நூல்**

**அவற்றுள்**

**வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**

**முனைவன் கண்டது முதல் நூல் ஆகும். (நன் : 6)**

என்னும் நூற்பா முதல் நூலின் இயல்பை விளக்குகிறது. இயல்பாகவே நல்வினை – தீவினைகளில் இருந்து நீங்கி, விளங்கிய அறிவினை உடைய கடவுளும், அவரை வழிபட்டுத் தலைமை பெற்றவரும் செய்வது முதல் நூல் ஆகும்.

எ.கா - அகத்தியம்

**வழி நூல்**

**முன்னோர் நூலின் முடிவு ஒருங்கு ஒத்துப்**

**பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி**

**அழியா மரபினது வழி நூல் ஆகும் (நன் : 7)**

என்னும் நூற்பா வழிநூலின் இலக்கணத்தை இயம்புகிறது. முதல் நூலின் முடிவுகளை முழுவதும் உடன்பட்டு, இன்றியமையாத மாற்றங்களையம் சேர்த்து அழியாது நிலைபெறுமாறு செய்யப்படுவது வழி நூல் ஆகும்.

எ.கா - தொல்காப்பியம்

**சார்பு நூல்**

**இருவர் நோக்கும் ஒருசிறைத் தொடங்கித்**

**திரிபுவேறு உடையது புடைநூல் ஆகும் (நன் : 8)**

என்னும் நூற்பா சார்பு நூலின் இயல்பினை விவரிக்கிறது. முதல் நூல் - வழி நூல் ஆகியவற்றின் முடிவுகளை ஓரளவே உடன்பட்டு, பெரும்பான்மை மாறுபட்டு விளங்குமாறு செய்யப்படுவது சார்பு நூல் ஆகும்.

**வழிநூல் - சார்பு நூல் பொதுவிதி:**

முதல்நூல் ஆசிரியர்களின் கருத்துகளை மட்டுமின்றி அவர்களின் சொற்களையும் பொன்னைப்போல் ஏற்றுக் கொள்வோம் என உலகிற்குக் காட்டவும் முதல் நூலினின்று வேறுபட்ட வழிநூல் அல்லது சார்புநூலையே செய்தோம். எனினும் முன்னோர் மொழியாகிய மேற்கோள் நூலில் இல்லை எனும் குறையை நீக்கும் பொருட்டு அவர்கள் இயற்றிய நூற்பாக்களை ஆங்காங்கு எடுத்துரைப்பது சிறப்புக்குறியதாகும். நன்னூல் இலக்கண விளக்கம் முதலிய நூல்களில் தொல்காப்பிய நூற்பா மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளன.

எ.கா - வினையின் நீங்கி விளங்கிய அறிவின்

முனைவன் கண்டது முதல் நூல் ஆகம். ( தொல் பொருள் : 640)

**முன்னோர் மொழிபொருளே அன்ற அவர் மொழியும்**

**பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும் முன்னோரின்**

**வேறுநூல் செய்துமெனும் மேற்கோள்இல் என்பதற்கும்**

**கூறுபழஞ் சூத்திரத்தின் கோள் (நன் : 9)**

ஏன்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம். இப்பண்பு வழிநூலுக்கும் சார்பு நூலுக்கும் பொதுவாக விளங்குவதைக் காணலாம்.

**3. நூலின் பயன்**

நூல் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப்பொருட்களைப் பயனாகத் தருகிறது. இதனை

**அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே (நன் :10)**

என்னும் நூற்பா எடுத்துக்காட்டுகிறது.

**4. எழு வகை மதம்**

மதம் என்னும் சொல்லின் பொருள் கொள்கை ஆகும். ஆசிரியர், தனது நூலில் பின்பற்றும் கொள்கைகள் மதம் எனப்படுகிறது. இது ஏழு வகையாகும். இதனை

**எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்**

**பிறர்தம் மதம்மேற் கொண்டு களைவே**

**தாஅன் நாட்டித் தனாது நிறுப்பே**

**இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே**

**பிறர்நூல் குற்றம் காட்டல் ஏனைப்**

பிறிதொரு படாஅன் தன்மதம் கொளவே (நன் : 11)

என்னும் நூற்பா விரித்துரைக்கிறது. இதன்படி

1. உடன்படல்: பிறர் கருத்தை ஏற்றல்

2. மறுத்தல்: பிறர் கருத்தை மறுத்தல்

3. பிறர் தம் மதம் மேற்கொண்டு களைவே: பிறர் கருத்தை முதலில் ஏற்றுப் பின்பு மறுத்தல்.

4. தாஅன் நாட்டித் தனாது நிறுப்பு: தானே ஒரு கருத்தை முன்மொழிந்து அதனை நிறுவுதல்.

5. இருவர் மாறுகோள் ஒரு தலை துணிவு இரு கருத்துகளுள் ஒன்றை மறுத்து மற்றதை ஏற்றல்.

6. பிறர் நூல் குற்றம் காட்டல்: பிறர் எழுதிய நூல்களில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டுதல்

7. பிறிதொடு படாஅன் தன்மதம் கொளல்: பிறர் கருத்து கலவாமல் தன்கொள்கை வலியுறுத்தல்.

ஆகிய எழுவகை கொள்கைகளையும் தெளிவாகிக் கொள்ளலாம்.

**5. பத்துவகைக் குற்றம்**

ஒரு நூலில் பத்துவகை குற்றங்கள் அமைவதுண்டு. இவற்றைக் களைந்து குற்றமற்ற நூலினை உருவாக்குவது நூலாசிரியரின் கடமையாகும். ஐயிறு குற்றமும் அகற்றி நூல் செய்திட வேண்டும் என்பது நன்னூலார் கருத்து. இதனை,

**குன்றக்கூறல் மிகைபடக்கூறல்**
**கூறியதுகூறல் மாறுகொளக்கூறல்**
**வழூஉச்சொல் புணர்த்தல் மயங்க வைத்தல்**
**வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்**
**சென்று தேய்ந்து இறுதல் நின்று பயன் இன்மை**
**என்றுஇவை ஈரைங்குற்றம் நூற்கே** (நன் : 12)

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம். இதன்படி அகற்ற வேண்டிய பத்து குற்றங்களாக,

1. **குன்றக் கூறல்:** உரிய அளவை விட, குறைவாகச் சொல்லுதல் (முத்தமிழ் பற்றி எழுதத் தொடங்கி இயல், இசை எனும் இரண்டை மட்டும் விளக்கி முடித்தல்)
2. **மிகைபடக் கூறல்:** உரிய அளவை விட, அதிகமாகச் சொல்லுதல் (இரட்டைக் காப்பியங்கள் பற்றி எழுதத் தொடங்கி ஐம்பெரும் காப்பியங்கள் பற்றியும் எழுதுதல்)

3. **கூறியது கூறல்:** சொன்னதையே திரும்பவும் சொல்லுதல்.

4. **மாறுகொளக் கூறல்:** முன்னுக்குப் பின் முரண்படக் கூறுதல்.

5. **வழூவுச் சொல் புணர்த்தல்:** இலக்கண நூல்களால் குற்றம் உடையவை எனப்பட்ட சொற்களைச் சேர்த்துக் கூறுதல் (ஆட்டுப்பாகன் வந்தான் என்பது போன்று)

6. **மயங்க வைத்தல்:** பொருள் குழப்பம் ஏற்படுமாறு பேசுதல் மற்றும் எழுதுதல்.

7. **வெற்றெனத் தொடுத்தல்:** பொருளற்ற வெற்றுச் சொல் அடுக்குகளாகப் பேசுதல் மற்றும் எழுதுதல்.

8. **மற்றொன்று விரித்தல்:** கூற வந்ததை விடுத்து வோறொன்றினை விளக்குதல் (சுகம் பற்றிக் கூறத் தொடங்கி – பின்பு – புறம் பற்றிக் கூறுதல்.

9. **சென்று தேய்ந்து இறுதல்**: தொடக்கத்தில் இருந்த சிறப்பு (செறிவு) குறைந்து கொண்டே வருதல்.

10. **நின்று பயன் இன்மை:** சொற்கள் இருந்தும் பயன் இல்லாமல் அமைதல்.

முதலியவற்றைக் குறிப்பிடுகிறார் நன்னூல் ஆசிரியர்.

**6. பத்துவகை அழகு.**

ஒரு நூலிற்குச் சிறப்பை வழங்கும் இயல்புகள் அழகு எனப்படுகிறது. அவை பத்து வகைப்படும். இதனை,

**சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்**
**நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்**
**ஓசை உடைமை ஆழம் உடைத் தாதல்**
**முறையின் வைப்பே உலகம்மலை யாமை**
**விழுமியது பயத்தல் விளங்குஉதா ரணத்தது**
**ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே (நன் : 13)**

என்னும் நன்னூல் நூற்பா விவரிக்கின்றது. இதன்படி பின்வரும் பத்து இயல்புகளையும் நூலின் சிறப்பிற்கு அழகாகக் கொள்ளலாம்.

1. **சுருங்கச் சொல்லல்:** சொற்களைத் தேவையின்றிப் பெருக்காமல், சுருக்கமாகச் சொல்லுதல்

2. **விளங்க வைத்தல்:** சுருங்கச் சொல்வதால் ஐயம் ஏற்படாதபடி விளக்கமாகச் சொல்லுதல்.

3. **நவின்றோர்க்கு இனிமை:** படிப்பவர்க்கு இன்பம் வருமாறு சொல்லுதல்/ எழுதுதல்

4.**நன்மொழி புணர்தல்:** நல்ல சொற்களைச் சேர்த்துச் சொல்லுதல் (வாழ்க வளமுடன்; நாடங்கும் வாழக் கேடொன்றும் இல்லை; குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தீ என்பன போலச் சொல்லுதல்.

5. **ஓசை உடைமை:** சந்த இன்பம் உடையதாகச் சொல்லுதல் (அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் எனச் செய்யுள் ஓசைகள் இருப்பதை அறிக).

6. **ஆழமுடைத்தாதல்:** பொருளாழம் உடையதாகச் சொல்லுதல்

7. **முறையின் வைப்பு:** வரிசை முறை மாறாமல் சொல்லுதல் ( அறம், பொருள், இன்பம், இயல், இசை, நாடகம்; எழுத்து சொல் பொருள் என்பன).

8. **உலக மலையாமை:** உயர்ந்தோர் வழக்கிற்கு மாறாக உலகம் மலைக்கும்படிக் கூறாமை (நெருப்பு ஆற்றில் மயிர்ப் பாலத்தில் நடந்தேன் என்பது உலக மரபு).

9. **விழுமியது பயத்தல்:** சிறந்த கருத்தை வெளிப்படுத்துதல் (யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது போல)

10. **விளங்கு உதாரணத்தது ஆதல்:** உரிய உதாரணம் தந்து ஒரு கருத்தை விளக்குதல் (அகர முதல எழுத்தெல்லாம்……)

**7. உத்திகள் முப்பத்திரண்டு**

நூல் இயற்றும் ஆசிரியர் தன் கருத்தை விளக்குவதற்கு மேற்கொள்ளும் முறைகள் உத்தி எனப்படும். 'புத்தி நுட்பம் -> உத்தி' என்று உரையாசிரியர் குறிப்பிடுவர். அழகு – மதம் என்பன போலவே உத்தி முறைகளும் நூலின் அமைப்பிற்கும், பொருள் புலப்பாட்டிற்கும் துணைபுரியும். உத்திகள் முப்பத்திரண்டு வகைப்படும். இதனை

**நுதலிப் புகுதல் ஒத்துமுறை வைப்பே**
**தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்**
**முடித்துக்காட்டல் முடிவிடம் கூறல்**
**தான்எடுத்து மொழிதல் பிறன்கோள் கூறல்**
**சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொல் புணர்த்தல்**
**இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்**
**ஒப்பின் முடித்தல் மாட்டெறிந்து ஒழுகுதல்**
**இறந்தது விலக்கல் எதிரது போற்றல்**

**முன்மொழிந்து கோடல் பின்அது நிறுத்தல்**

**விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்**

**உரைத்ததும் என்றல் உரைத்தாம் என்றல்**

**ஒருதலை துணித்தல் எடுத்துக் காட்டல்**

**எடுத்த மொழியின் எய்த வைத்தல்**

**இன்னது அல்லது இதுஎன மொழிதல்**

**எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்**

**பிறநூல் முடிந்தது தான்உடன் படுதல்**

**தன்குறி வழக்கம் மிகஎடுத்து உரைத்தல்**

**சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்**

**ஒன்றென முடித்தல் தன்னினம் முடித்தல்**

**உய்த்துஉணர வைப்புஎன உத்திஎண் ணான்கே.** **(நன் : 14)**

என்னும் நூற்பா வரையறை செய்கிறது. நுதலிப்புகுதல் என்பது சொல்லப்போவது யாது என்பதை முன்னரே கூறித் தொடங்குதல் ஆகும். இவ்உத்திகளை பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்.

1. ஓத்து முறை வைப்பு - இயல்களை முறைப்படி அமைத்தல்.
2. தொகுத்துச் சுட்டல் - தொகுத்துக் கூறுதல்.
3. வகுத்துக் காட்டல் - விரிவாக வகைப்படுத்தி விளக்குதல்.
4. முடித்துக் காட்டல் - கருத்து முடிவு கூறுதல்
5. முடிவிடம் கூறல் - கருத்து முடிவுக்குரிய இடம் காட்டுதல்.
6. தானெடுத்து மொழிதல் - தன் கருத்தை எடுத்துக் காட்டுதல்.
7. பிறன்கோட் கூறல் - பிறர் கருத்தைச் சொல்லுதல்.
8. சொற்பொருள் விரித்தல் - சொல்லின் பொருளை விரித்துரைத்தல்.
9. தொடர்ச்சொல் புணர்தல் - தொடர்களில் சொற்களைச் சேர்த்துக் கூறுதல்.
10. இரட்டுற மொழிதல் - இரு பொருள்படச் சொல்லுதல்.
11. ஏதுவின் முடித்தல் - காரணம் காட்டி முடிவு கூறுதல்.
12. ஒப்பின் முடித்தல் - ஒப்புமை காட்டி, ஒப்பானவற்றை ஒன்று சேர்த்துக் கூறுதல்.
13. மாட்டெறிந்து ஒழுகல் - ஒரே இலக்கணத்தைப் பிரிதொன்றிற்கும் சேர்த்துக் கூறுதல்.
14. இறந்தது விலக்கல் - வழக்கத்தில் இல்லாததை விட்டுவிடுதல்
15. எதிரது போற்றல் - புதிய மரபை ஏற்றுக் கொள்ளுதல்.
16. முன் மொழிந்து கோடல் - முன்னர் சொன்னதைப் பின்னரும் ஏற்றல்.

17. பின்னது நிறுத்தல் - ஒரு கருத்தைப் பின்னே வைத்தல்

18. விகற்பத்தின் முடித்தல் - பல வேறுபாடுகள் காட்டிச் சிறப்பாக விளக்குதல்.

19. முடித்து வைத்தல் - விளக்கி முடித்ததைத் தொகுத்தல்.

20. உரைத்தும் என்றால் - இதனைப் பின்னர் கூறுவோம் எனல்.

21. உரைத்தாம் என்றல் - ‘இதனை முன்னர் கூறினோம் எனல்.

22. ஒருதலை துணிதல் - இருவேறு கருத்துகளில் ஒன்றை ஏற்றல்.

23. எடுத்துக்காட்டு - இலக்கிய எடுத்துக்காட்டைத் தருதல்.

24. எடுத்த மொழியான் எய்த வைத்தல் - எடுத்துக்காட்டை முக்காலத்துடன் பொருத்துதல்

25. இன்னது அல்லது இது என மொழிதல் - இது தான் என முடிவு கூறுதல்.

26. எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல் - சொல்லாது விட்டதற்கும் இலக்கணம் கூறுதல்.

27. பிறநூல் முடிந்தது தானுடன் படுதல் - பிறர் கருத்தை ஏற்பது

28. தன்குறி வழக்கம் மிக எடுத்துரைத்தல் - தன் கருத்தை மிகவும் விளக்குதல்.


29. சொல்லின்முடிவில் அப்பொருள் முடித்தல் -சொல்முடிவில் அப்பொருளையும் முடித்தல்

30. ஒன்றென முடித்தல் - ஒரே இனமானதைச் சொல்லுதல்.

31. நன்னின முடித்தல் - கற்பவர் ஆராய்ந்து உணருமாறு கருத்துக்களைக் கூறுதல்.

**8. நூல் பகுப்புமுறை**

நூலின் உட்பிரிவு இருவகைப்படும். அவை ஓத்து, படலம் என்பவையாகும். இதனை




என்னும் அட்டவணை வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

**ஓத்து (இயல்)**

ஓர்இன மணிகளை வரிசையாகப் பதித்து வைத்தது போல், ஒரே வகையான கருத்துக்களைச் சேர்த்துச் சொல்வது ‘ஓத்து’ அல்லது ‘இயல்’ எனப்படும். இதனை

**நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு**

**ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது**

**ஓத்துளன மொழிப உயர்மொழிப் புலவர் ( நன் : 16)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம். ஓத்து என்பது இயல் ஆகும்.

எ.கா – நேர் இனம் - ஒரே இனம்

**படலம்**

ஒரு வழிப்படாமல், பல்வகைப் பொருட்களும் கலந்து நிற்கப் பொதுவகையால் கூறுவது படலம் ஆகும். இதனை

**ஒருநெறி இன்றி விரவிய பொருளால்**

**பொதுமொழி தொடரின் அதுபடலம் ஆகும். (நன் : 17)**

என்னும் நூற்பா உணர்த்துகிறது. இது அதிகாரம் என்னும் பொருளை உணர்த்துகிறது.

எ.கா – எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் (எழுத்து, சொல், பொருள்)

**9. சூத்திரம்**

சில எழுத்துக்களால் ஆன சொற்களால் பல வகைப் பொருள்களைத் திட்ப நுட்பமாகக் கூறுவது சூத்திரம் ஆகும். அது பெரிய உருவங்களைத் தன்னுள் அடக்கிக் காட்டுகின்ற கண்ணாடி போன்றது. பகுப்பின் அடிப்படை அலகு சூத்திரம் ஆகும். இது நான்கு நிலைகளை உடையது. இதனை,

**சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச்**

**செல்வன் ஆடியில் செறித்து இனிது விளக்கித்**

**தீட்ட நுட்பம் சிறந்தன சூத்திரம் (நன் : 18)**

என்னும் நூற்பா தெளிவுபடுத்துகிறது. சூத்திரம் என்பது நூற்பா எனவும் வழங்கப்படும்.

**சூத்திர நிலை**

சூத்திரம் நான்கு நிலைகளை உடையது. அவற்றை

அ) ஆற்றொழுக்கு – நீரோட்டம் போல், இயல்பானது.

ஆ) அரிமா நோக்கு – சிங்கம் போல் முன்னும் பின்னும் நோக்குவது.

இ) தவளைப் பாய்த்து - இடையிடை விட்டுத் தொடர்பு படுவது.

ஈ) பருந்தின் வீழ்வு – பருந்து வீழ்வது போல. பொருள் அமைப்புடையது. (இடைவெளி அதிகமாகித் தொடர்புபடுவது)

என விளங்கிக்கொள்ளலாம்.

**சூத்திர வகை**

சூத்திரம் ஆறு வகைப்படும். அவை

**பிண்டம் தொகைவகை குறியே செய்கை**

**கொண்டுஇயல் புறனடைக் கூற்றன சூத்திரம்** ( நன் : 19)

என்னும் நூற்பா வாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது. இதனை பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்.

1. பிண்டச் சூத்திரம் - பல்திரப்பொருட்களை ஒருங்கு திரட்டிக் கூறுவது

2. தொகைச் சூத்திரம் - பல்திரப் பொருட்களைப் பல தொகுதியாக்கிக் கூறுவது

3. வகைச் சூத்திரம் - தொகுத்துக் கூறியவற்றைப் பல வகையாக்கிக் கூறுவது

4. குறிச் சூத்திரம் - இவை உயிர், இவை மெய் எனப் பெயரைச் சூட்டுவது

5. செய்கைச் சூத்திரம் - புணர்ச்சி முடிவுகளைக் கூறுவது

6. புறநடைச் சூத்திரம் - இவ் ஐந்து வகையின் புறத்தே அமைந்து புறம்பான செய்திகளைக் கூறுவது

**10. உரை**

ஒரு நூலுக்கு கூறப்படும் பல்வேறு வகை விளக்கம் உரை ஆகும். இது 14 உறுப்புகளை உடையது. இதனை

**பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்**

**தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்**

**விரவுஅதி காரம் துணிவு பயனொடு**

**ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே** (நன் : 21)

என்னும் நூற்பா விவரிக்கிறது. இதன்படி

1. மூலபாடத்தைக் கூறுதல்

2. திரண்ட கருத்தை உரைத்தல்

3. சொற்களைப் பிரித்துக் கூறுதல்

4. சொற்களுக்குப் பொருள் கூறுதல் (பதவுரை)

5. பொருளைத் தொகுத்துக் கூறுதல் (பொழிப்புரை)

6. எடுத்துக்காட்டுத் தருதல்

7. வினாவுதல்

8. வினாவிற்கு விடை தருதல்

9. சூத்திரத்தின் உட்பொருள் தொடர்புடைய விளக்கமளித்தல் (விசேட உரை)

10. சொற்களின் பொருளை விரித்துரைத்தல் (விரிவுரை)


11. அதிகாரத்துடன் பொருத்திப் பொருள் கூறுதல் (அதிகார உரை)

12. இதுவே பொருள் எனத் துணிந்துரைத்தல்

13. பயன் இது எனக் கூறுதல்

14. முன்னோர் நூல்களினின்று மேற்கோள் சூத்திரம் காட்டுதல்

என்னும் 14 உறுப்புக்களையும் அறிந்து கொள்ளலாம். இவ்வுரை இருவகைப்படும். அவை காண்டிகை உரை, விருத்தியுரை என்பவையாகும். இதனை




என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம்.

**காண்டிகை உரை**

காண்டிகை – சுருக்கமும் எளிமையும் உடைய உரை. அதாவது சூத்திரத்தின் மையக் கருத்து அதனுடன் தொடர்புடைய அனைத்துப் பொருட்களும் விளங்குமாறு உரைப்பது காண்டிகை உரை ஆகும். இதனை

**கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்**

**அவற்றொடு வினாவிடை ஆக்கலானும்**

**சூத்திரத்து உட்பொருள் தோற்றவ காண்டிகை (நன் : 22)**

என்னும் நூற்பா விவரிக்கிறது. இக்காண்டிகை உரையானது கருத்துரை, பதிவுரை, உதாரணம். வினா-விடை என்னும் அமைப்பு நிலைகளில் பொருள் விளக்கம் தருவது

**விருத்தி உரை**

விருத்தி – விரிவும் செறிவும் உடைய உரை. மேற்கோள் காட்டுதல் மற்றும் காண்டிகை உரை கூறுகள் ஐந்தையும் அவற்றுடன் தொடர்புடைய அனைத்து விளக்கங்களையும் வழங்கி, தன் உரையாலும், பிற நூல் மேற்கோள்களாலும் ஐயம் அகற்றுவது. இதனை

**சூத்திரத்து உட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு**

**இன்றி யமையா யாவையும் விளங்கத்**

**தன்உரை யானும் பிறநூ லானும்**

**ஐயம் ஆகலஜங் காண்டிகை உறுப்பொடு**

**மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி (நன் : 23)**

எனும் நன்னூல் நூற்பா விவரிக்கிறது.

**11. நூல் பெயர்க்காரணம்**

நூல் (புத்தகம்) என்பது பஞ்சு நூலுடன் ஒப்பிடப்பட்டு விளக்கப்படுகிறது. நூலாசிரியரின் சொற்கள் பஞ்சாகவும் பாக்கள் (செய்யுள்) இழையாகவும் (நூல்) சொல்வளமிக்க ஆசிரியன் நூற்கும் பெண்ணாகவும் குறைவில்லா வாயே நூற்கும் கையாகவும் அறிவே நூற்கும் கதிராகவும் அமைந்து குற்றமற்ற கல்விநூல் (புத்தகம்) உருவாகிறது. குல்வி நூலுக்கு பஞ்சுநூல் உவமையாகு பெயராக எடுத்தாளப்பட்டுள்ளது. இதனை

**பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்**

**செஞ்சொற் புலவனே சேயிழையா – எஞ்சாத**

**கையேவா யாகத் கதிரே மதியா**

**மையிலா நூல் முடியும் ஆறு (நன் : 24)**

என்னும் நூற்பாவால் அறியலாம். உடலில் உள்ள அறிவு வளத்தை அதிகமாக்கித் தீமையாகிய அறியாமையைப் பெரிதும் ஒழித்து மரத்தினது கனத்தால் அமையும் கோணலைப் போக்கப் பயன்படும் எற்று நூல்போன்று மனத்தின் கோணலைப் போக்கி செம்மைப்படுத்தும் வல்லமை உடையது நூல் ஆகும். இதனை

**உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்**

**புரத்தின் வளம்முருக்கிப் பொல்லா – மரத்தின்**

**கனக்கோட்டம் தீர்க்கும்நூல் அ∴தேபோல் மாந்தர்**

**மனக்கோட்டம் தீர்க்கும்நூல் மாண்பு (நன் : 25 )**

என்னும் நூற்பாவால் அறியலாம். கதிர் என்பது நூல் நூற்பதற்குரிய இரும்புக் கருவியையும் உரம் என்பது அறிவையும் புரம் என்பது உடம்பையும் குறிக்கும்.

**II ஆசிரியர் வரலாறு**

பொதுப் பாயிரத்தின் இரண்டாம் நிலையாக அமைவது ஆசிரியனது வரலாறு ஆகும். இப்பகுதி நல்லாசிரியரின் இலக்கணம் கூறுகிறது. அதோடு ஆசிரியர் ஆகாதோரின் இலக்கணத்தையும் எடுத்துரைக்கிறது. ஆசிரியரின் பொதுப் பண்புகளாக உயர் குடிப்பிறப்பு, கருணை, இறை வழிபாடு, கொள்கை மேம்பாடு, கலைகளில் தெளிவான புலமை, எடுத்துரைக்கும் திறம், நிலம், மலை, தராசுகோல், மலர், ஆகியவற்றைப் போன்ற பண்பு, உலகியல் அறிவு, உயர் குணங்கள் ஆகியவற்றை நன்னூலார் குறிப்பிடுகிறார். இதனை

**குலன்அருள் தெய்வம் கொள்மை மேன்மை**

**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**

**நிலம்மலை நிறைகோள் மலர்நிகர் மாட்சியும்**

**உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்**

**அமைபவன் நூல்உரை ஆசிரி யன்னே (நன் : 26)**

என்னும் நூற்பாவால் விளங்கிக் கொள்ளலாம்.

**நிலம்**

நல்லாசிரியர் ஒருவர் நிலம்போல் விளங்க வேண்டும். கண்டு கணக்கிட முடியாத உருவப் பரப்பின் பெருமை, தாங்கும் வலிமை, பொறுமை, பருவத்தில் உழைப்புக்குத் தக்க பலன் தரும் பண்பு முதலியன போன்று நல்லாசிரியர் திகழ்வதால் அவர் நிலம் போன்றவர். இதனை

**தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்**

**பருவ முயற்சி அளவில் பயத்தலும்**

**மருவிய நன்னில மாண்புஆ கும்மே (நன் : 27)**

என்னும் நூற்பா விவரிக்கின்றது.

**மலை**

நல்லாசிரியர் மலை போன்று இருக்க வேண்டும். அதன் இயல்பான அளக்க முடியாத அளவு, பல் பொருள் வளம், அசைக்க முடியாத தோற்றம், வறட்சியிலும் வளம் தரும் பண்பு முதலானவற்றை நல்லாசிரியர் பெற்றிருப்பதால் மலை போன்றவர். இதனை

**அளக்கல் ஆகா அளவும் பொருளும்**

**துலக்கல் ஆகா நிலையும் தோற்றமும்**

**வறப்பினும் வளம்தரும் வண்மையும் மலைக்கே (நன்: 25)**

என்னும் நூற்பாவினால் அறியலாம்.

**நிறைகோல்**

நல்லாசிரியர் நிறைகோல் போன்று திகழ வேண்டும். பொருளின் உண்மை அளவைத் துல்லியமாகக் காட்டுவதும் இரு தட்டுகளுக்கிடையே நடுவில் நின்று உண்மையாக அமைவதும் தராசுகோலின் இயல்பு ஆகும். அவ்வாறே நல்லாசிரியரும் ஐயம் இன்றிப் பொருளைப் புலப்படுத்துதல், நடுவு நிலைமையுடன் செயல்படுதல் என்னும் பண்புகளுடன் விளங்குவதால் தராசு (நிறைகோல்) போன்றவர். இதனை

**ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்**

**மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே (நன் : 29)**

என்னும் நூற்பாவால் அறியலாம்.

**மலர்**

நல்லாசிரியர் மலர்போல் திகழ வேண்டும். இது மங்கல நிகழ்வுகளில் முதன்மை பெறுதல், அனைவராலும் விரும்பப் படுதல், உரிய நேரத்தில் மலர்ச்சி, இன்றியமையாமை முதலான பண்புகளுடையது. இப்பண்புகளை நல்லாசிரியர் பெறுவதால் அவர் மலர் போன்றவர். இதனை

**மங்கலம் ஆகி இன்றி யமையாது**

**யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்**

**பொழுதின் முகமலர்வு உடையது பூவே (நன் : 30)**

என்னும் நூற்பா தெளிவுபடுத்துகிறது.

**ஆசிரியர் ஆகாதவர் இலக்கணம்**

பாடம் சொல்லும் குணம் இன்மை, இழிந்த குண இயல்பு, பொறாமை, பொருட்பற்று, உண்மைப் பொருளை உணர்த்தாத வஞ்சக நெஞ்சம், அச்சப்படுதல், பிறரை அச்சமுறச் செய்தல், கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை (குடுவை), முடத்தெங்கு ஆகிய நான்கிற்கும் ஒப்பான மாறுபாடுடைய மனத்தை உடையோர் ஆசிரியராக விளங்கும் தகுதி இல்லாதவர் ஆவர். இதனை

**மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்**

**அழுக்காறு அவாவஞ்சம் அச்ச மாடலும்**

**கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை**

**முடத்தெங்கு ஒப்புஎன முரண்கொள் சிந்தையும்**

**உடையோர் இலர் ஆசிரியர்ஆ குறவே** (நன் : 31)

என்னும் நூற்பாவால் அறியலாம்.

**கழற்குடம்**

கழற்குடம் போன்று திகழ்பவர் நல்லாசிரியர் ஆக மாட்டார். உள்ளே இட்ட முறைக்கு மாறாகத் தலைகீழாகக் கவிழ்க்கும் நிலையில் கழற்சிக் காய்களை வெளியே விடுவது கழற்குடம் ஆகும். அவ்வாறே கற்ற முறையினை மாற்றிச் சொல்லும் இயல்புடையவர் ஆசிரியர் ஆகும் தகுதியற்றவர். இதனை

**பெய்த முறையன்றிப் பிறழ் உடன்தரும்**

**செய்தி கழற்பெய் குடத்தின் சீரே** நன் : 32)

என்னும் நூற்பா அறியத்தருகிறது.

**மடற்பனை**

மடற்பனை போன்று திகழ்பவர் நல்லாசிரியர் ஆவதில்லை. தானே தந்தால் அன்றிப் பிறர் ஏறி வந்து பழம் பெற இடம் கொடாதது பனைமரம், அவ்வாறே அவராக நினைத்தால் மட்டுமே போதிப்பவர் ஆசிரியர் ஆகார். இதனை

**தானே தரக்கொழின் அன்றித் தன்பால்**

**மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை** (நன் : 33)

என்னும் நூற்பா விவரிக்கின்றது.

**பருத்திக் குண்டிகை**

பருத்திக்குண்டிகை போன்ற இயல்புடையவர் ஆசிரியர் தகுதி அற்றவர் ஆவார். ஒரு குடுக்கையில் பஞ்சினை அடைப்பதும் கடினம், வெளியே எடுப்பதும் கடினம். ஆவ்வாறே படிக்கும் போதும் துன்புற்றுப் பாடம் நடத்தும் போதும் துன்பமாக நினைப்பவர் ஆசிரியர் ஆகமாட்டார். இதனை

**அரிதிற் பெயக் கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு**

**எளிதுஈ வில்லது பருத்திக் குண்டிகை (நன் : 34)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**முடத்தெங்கு**

இது போன்ற இயல்புடையவர் ஆசிரியர் தகுதி அற்றவர் ஆவார். நீர்ப் பாய்ச்சி உரமிட்டு வளர்த்த மனிதனை விடுத்து பிறருக்கு காய் முதலான பொருட்களை தரும் வேலியின் புறத்தே நிற்கும் வளைந்த முடத்தெங்கினைப் போன்றவர்கள் நல்லாசிரியர் ஆகமாட்டார். இவர்கள் உற்றுழி உதவி வழிபட்டு நிற்கும் மாணவனை விட்டுவிட்டு பிறருக்குப் பயிற்றுவிப்பவர் ஆவார். இதனை

**பல்வகை உதவி வழிபடு பண்பின்**

**அல்லோர்க்கு அளிக்கும் அதுமுடத் தெங்கே (நன் : 35)**

என்னும் நூற்பா அறியத்தருகிறது.

**III. கற்பித்தல் வரலாறு**

கற்பித்தல் வரலாறு என்பது ஆசிரியர் மாணவர்க்கு பாடம் கற்பித்தலின் இயல்பையும் முறையையும் விவரிக்கின்றது. இது பாடம் சொல்லுதலின் வரலாறு, நுவலும் திறன், ஈதல் இயல்பு என பல சொற்றொடர்களால் குறிப்பிடப் பெற்றுள்ளது. இதனை நன்னூலார்

**ஈதல் இயல்பே இயல்பும் காலைக்**

**காலமும் இடனும் வாலிதீன் நோக்கிச்**

**சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி**

**உரைக்கப் படும்பொருள் உள்ளத்து அமைத்து**

**விரையான் வெகுளான் விரும்பி முகம்மலர்ந்து**

**கொள்கோள் கொள்வகை அறிந்துஅவன் உளங்கொளக்**

**கோட்டம்இல் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப (நன் : 36)**

என்னும் நூற்பாவால் விளக்குகிறார். இதன்படி கற்பிக்கும் ஆசிரியர் மேற்கொள்ள வேண்டியன:

அ) காலத்தையும் இடத்தையும் நன்கு ஆராய்தல்

ஆ) நல்ல இடத்தில் இருந்து, வழிபடு தெய்வத்தைத் துதித்தல்.

இ) சொல்லப் போகும் பாடத்தை மனதில் பதிய வைத்து நினைவு கூர்தல்

ஈ) விரைவு, சினம் இல்லாமல் முகமலர்ச்சியுடன் இருத்தல்.

உ) மாணவனது தன்மை அறிந்து நடத்துதல்.

ஊ) மாணவன் தெளிவடையுமாறு மாறுபாடற்ற மனத்துடன் கற்பித்தல்

**IV. மாணாக்கர் (கொள்வோன்) வரலாறு**

பொதுப்பாயிரத்தின் நான்காம் பிரிவு மாணாக்கர் வரலாறு கூறுவதாகும்.


ஓர் ஆசிரியன் தன் மகன், தன் ஆசான், மன்னன் மகன், பொருள் கொடுப்பவன், வணங்கி நிற்பவன், உரைப்பதை உணரும் திறன் மிக்கவன் என அறுவகைப்பட்டவர்க்குப் பாடம் கற்பிக்கலாம். இவ் அறுவரே மாணவர் (கொள்வோர்) ஆவார். இதனை நன்னூலார்

**தன்மகன் ஆசான் மகனே மன்மகன்**
**பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே**
**உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே (நன் : 37)**

என்னும் நூற்பா மூலம் விவரித்துள்ளார்.

**மாணாக்கர் வகை**

மாணாக்கர்களை தலை மாணாக்கர், இடை மாணாக்கர், கடை மாணாக்கர் என மூன்று வகையினராகக் கண்டார் நன்னுலார். இதனை




**அன்னம் ஆவே மண்ணொடு கிளியே**
**இல்லிக் குடம்ஆடு எருமை நெய்யரி**
**அன்னர் தலை இடை கடைமா ணாக்கர் (நன் : 38)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தலை மாணாக்கர்**

அன்னமும் பசுவும் போன்றவர் தலை மாணாக்கர்.

அன்னப் பறவை பாலையும் நீரையும் பிரித்தறியும் ஆற்றலுடையது. அவ்வாறே நன்மை தீமையைப் பிரித்து அறிபவர் தலை மாணாக்கர்.

பசு இரை கிடைத்தவழி உண்டு பின்பு அசை போடும் இயல்புடையது. அவ்வாறே வாய்த்த வழி. பாடம் கேட்டுப் பின்பு நினைத்துப் பார்த்துத் தெளிவு பெறுபவர் தலை மாணாக்கர்.

**இடை மாணாக்கர்**

மண்ணும் கிளியும் போன்றவர் இடை மாணாக்கர்.

மண் தோண்டிய முயற்சி அளவே பலன் தருவது. அவ்வாறே ஆசிரியர் தூண்டிய அளவே அறிவு பெறுபவர் இடை மாணாக்கர்.

கிளி சொன்னதை மட்டமே சொல்லும் இயல்புடையது. அவ்வாறே திகழ்பவர் இடை மாணாக்கர்.

**கடை மாணாக்கர்**

இல்லி(ஓட்டை)க் குடம், ஆடு எருமை, நெய்யரி (பன்னாடை) எனும் நான்கினையும் ஒத்தவர் கடை மாணாக்கர்

எதையும் மனதில் தங்க வைக்காத தன்மையில் ஓட்டைக் குடம் போலவும், அங்கும் இங்கும் மேம்போக்காகப் படிப்பதில் ஆடு போலவும், எதையும் குழப்புவதில் எருமை போலவும் நல்லதை விடுத்து அல்லதைத் தேக்கிக் கொள்வதில் நெய்யறி (பன்னாடை) போலவும் இருப்பவர் கடை மாணாக்கர் ஆவார்.

**மாணாக்கர் ஆகாதோர்**

குடிகாரன், சோம்பேறி, அகங்காரி, காமுகன், திருடன், நோயாளி, அறிவில் ஏழை, மாறுபாடுடையவன், சினத்தன், அதிகமாகத் தூங்குபவன், மந்த புத்தி உள்ளவன், நூல்களின் பரப்பைக் கண்டு பயந்து தடுமாறுபவன், தீவினை செய்வோன், பாவி, பொய் சொல்பவன் முதலானவர் மாணவர் ஆகார். இத்தகையோருக்கு ஆசிரியர் பாடம் கற்பிப்பதில்லை. எனவே இத்தகையோர் மாணவர்க்குரிய தகுதியற்றவர் ஆவர். இதனை

**களிமடி மானி காமி கள்வன்**

**பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்**

**துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்**

**தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி**

**படிறன்இன் னோர்க்கு பகரார் நூலே (நன் : 39)**

என நன்னூலார் வரையரை செய்கிறார்.

**V. கற்றல் (பாடம் கேட்டல்) வரலாறு**

மாணாக்கர் பாடம் கற்றலின் இயல்பையும் முறையையும் கற்றல் வரலாறு என்பார் நன்னூலார். இது பாடம் கேட்டலின் வரலாறு, கோடல் மரபு என்னும் பெயர்களில் வழங்கப்படுகிறது. இதனை நன்னுலார்,

**கோடல் மரபே கூறும் காலைப்**

**பொழுதொடு சென்று வழிபடல் முனியான்**

**குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து**

**இருஎன இருந்து சொல்எனச் சொல்லிப்**

**பருகுவன் அன்னஆர் வந்தன் ஆகிச்**

**சித்திரப் பாவையின் அந்தகவு அடங்கிச்**

**செவியா யாக நெஞ்சுகள னாகக்**

**கேட்பவை விடாது உளத்து அமைத்துப்**

**போஎனப் போதல் என்மனார் புலவர் (நன் : 40)**

என்னும் நூற்பா வாயிலாக விவரிக்கின்றார். இதன்படி பாடம் கேட்கத் தொடங்கும் மாணவன் பின்பற்ற வேண்டியவை:

அ) உரிய நேரத்திற்குச் செல்லுதல்

ஆ) வழிபாடு நிகழ்த்துதல்

இ) ஆசிரியரின் குணமறிந்துப் பழகி, அவரது குறிப்பறிந்து நிற்றல்.

ஈ) ஆசிரியர் இரு என்றால் இருத்தல், சொல் என்றால் சொல்லுதல் என்னும் பண்பு

உ) நீர் வேட்கை உடையவன் போல் ஆர்வமாகவும், சித்திரப் பாவை போல் அடக்கமாகவும் விளங்குதல்.

ஊ) செவி – வாயாகவும், நெஞ்சம் - வயிறாகவும் விளங்குமாறு பாடங்களைக் கேட்டு உள்ளே செலுத்துதல்.

எ) பாடத்ததை மறந்து விடாமல் மனதில் பதிய வைத்தல்

ஏ) ஆசிரியர் போ என்ற பின்பு திரும்புதல்.

**பாடம் கற்கும் (பயிலும்) முறை**

மாணாக்கர் பாடம் கற்கும் முறையினை இப்பகுதி விவரிக்கிறது. பாடம் கேட்டு முடிந்த பின்பு பயிற்சி செய்தல் முக்கியமானது. சிந்தித்தல், மீண்டும் கேட்டல், நல்ல மாணவர்களுடன் பழகுதல், ஐயம் வரும்பொழுது வினாவுதல், தன்னை வினவிய பொழுது விடை கூறுதல் என்பன பயிற்சியின் படிநிலைகள் ஆகும். இதனை

**நூல்பயில் இயல்பே நுவலின்வழக்கு அறிதல்**
**பாடம் போற்றல் கேட்பவை நினைத்தல்**
**ஆசான் சார்ந்து அவை அமைவரக் கேட்டல்**
**அம்மாண்பு உடையோர் தம்மொடு பயிறல்**
**வினாதல் வினாயவை விடுத்தல் என்றுஇவை**
**கடனாக் கொளினே மடல்நனி இகக்கும்** **(நன் : 41)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம். இதன்படி நூல்களைக் கற்கும் முறையினை பின்வருமாறு அறியலாம்.

அ) உலக வழக்கு, செய்யுள் வழக்கு எனும் இருவகை வழக்கினை அறிதல்.

ஆ) மூலபாடத்தை மனதில் பதித்தல்

இ) ஆசிரியரிடம் கற்ற பாடத்தை பலமுறை நினைவூட்டல்

ஈ) ஆசிரியர் அருகில் அமர்ந்து மனதில் பதியுமாறு பாடம் கேட்டல்.

உ) தலை மாணாக்கருடன் பழகிப் பாடத்தைப் பயிற்சி செய்தல்

ஊ) ஐயம் தீர்க்குமாறு வினாதல்

எ) வினவியதற்கு உரிய விடை அளித்தல்.

இருமுறை பாடம் கேட்டால் - பிழை இன்றி அறியலாம்

மூன்று முறை பாடம் கேட்டால் - தானே பிறருக்குச் சொல்லும் திறன் பெறலாம்.

ஆசிரியரிடம் கற்கும் பொழுது கால் பங்கும்,

திறனுடைய மாணவருடன் பழகுப்பொழுது கால் பங்கும்,

தன் சார்புடையவர்க்குப் பயிற்றுவிக்கும் பொழுது அரை பங்கும் என முழுமை அறிவு பெறலாம்.

இவற்றைக் கடமையாகக் கொண்டால் மாணவனின் அறியாமை மிகுதியாகவும் உறுதியாகவும் அகலும்.

**ஆசிரியரை வழிபடும் முறை**

ஆசிரியரை எவ்வாறு வழிபடுவது என்பதை நன்னூலார் மாணாக்கர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். அந்தவகையில் நெருப்பில் குளிர் காய்பவன் நெருங்காமலும் விட்டு நீங்காமலும் இருப்பான். அவ்வாறே ஆசிரியரிடமும் பழகி – வழிபட வேண்டும் . நிழலைப் போன்று பின்தொடர வேண்டும். ஆசிரியருக்கு எது மகிழ்வைத் தருமோ அதற்கு மாறுபாடாமல் திகழ வேண்டும். இதனை

**அழலனின் நீங்கான் அணுகான் அஞ்சி**

**நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு**

**எத்திரத்து ஆசான் உவக்கும் அத்திரம்**

**அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே** **(நன் : 46)**

என நன்னூலார் விவரிக்கின்றார். இவ்வாறு ஆசிரியர் மனம் மகிழும்படி மாணாக்கர் நடந்துகொள்வதே அறத்தின் வழிச் செய்யும் ஆசிரிய வழிபாடாகும்.

## சிறப்புப் பாயிரம்

குறிப்பிட்ட ஒரு நூலுக்கென்று தனியாக அமையும் விளக்கப் பகுதி சிறப்புப் பாயிரம் ஆகும். ஆக்கியோன் பெயர், வழி, எல்லை, நூற் பெயர், யாப்பு, நுதலிய பொருள், கேட்போர், பயன் என்னும் எண்வகைப் பொருளை தெளிவாக விளக்குவது சிறப்புப் பாயிரம் ஆகும்.

**ஆக்கியோன் பெயரே வழியே எல்லை**

**நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே**

**கேட்போர் பயனொடு ஆயெண் பொருளும்**

**வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே** **(நன் : 47)**

என்னும் நன்னூல் நூற்பா சிறப்புப் பாயிரத்தை வரையறை செய்கிறது. மேலும் நூல் இயற்றப்பட்ட காலம், அரங்கேற்றப்பட்ட அவை (களன்) இயற்றப்பட்டதற்கான காரணம் எனும் மூன்றையும் சேர்த்து சிறப்புப் பாயிரத்தின் பண்புகளாகக் கூறுவாரும் உண்டு. இதனை

**காலம் களனே காரணம் என்றுஇம்**

**மூவகை ஏற்றி மொழிநரும் உளரே (நன் : 48)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம். குறிப்பிட்ட ஒரு நூலைப் பற்றிய செய்திகளை மட்டுமே தருவதால் இது சிறப்புப் பாயிரம் எனப்படுகிறது. இதனை நன்னூலுக்குப் பொருத்திப் பார்க்கலாம்.

1. ஆக்கியோன் பெயர் - பவணந்தி முனிவர்
2. வழி – தொல்காப்பிய வழி
3. எல்லை – கீழ்க் கடல், கன்னியாகுமரி, குடகு நாடு, திருவேங்கட மலை
4. நூல்பெயர் - நன்னூல்
5. யாப்பு – நூற்பா (நூல்) – தொகை, வகை, விரி
6. நுதலிய பொருள் - எழுத்து சொல், பொருள் யாப்பு, அணி (ஐந்திலக்கணம்)
7. கேட்போர் - யாவரும் (நிகண்டு கற்று இலக்கியப் பயிற்சி பெற்றர்)
8. பயன் - மொழித் திறன் பெறுதல் (முட்டு அறுத்தல்)
9. காலம் - சீய கங்க மன்னன் காலம்
10. களன் - சீய கங்கன் அவை
11. காரணம் - சீய கங்கன் வேண்டிக் கொண்டது.

**2. நூலுக்குப் பெயரிடும் வகை**

**முதல் நூல் கருத்தன் அளவு மிகுதி**

**பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்**

**வினாதல் வினாயவை விடுத்தல் என்றுஇவை**

**இடுகுறி யானும்நூற்கு எய்தும் பெயரே (நன் : 49)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம். முதல்நூல், இயற்றியவன், நூலினளவு, அதில் சொல்லப்பட்ட பொருள், அதனை இயற்றத் தூண்டியவன், அதன் பண்பு முதலிய காரணங்களாலும் இடுகுறியாலும் ஒரு நூலுக்குப் பெயரிடப்படும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா | முதல் | - | பாரதம் |
| | கருத்தன் | - | தொல்காப்பியம் |
| | அளவு | - | நாலினி நானூ |
| | மிகுதி | - | களவியல் (இறையனார் அகப்பொருள்) |

| | | |
|---|---|---|
| பொருள் | - | அகப்பொருள் விளக்கம் |
| செய்வித்தோன் | - | வீரசோழியம் |
| தன்மை | - | நன்னூல் |
| இடுகுறி | - | கலைக்கோட்டுத்தண்டு |

**3. நூல் யாப்பு**

**தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு**
**எனத்தகு நூல்யாப்பு ஈறிரண்டு என்ப நன் : 50)**

பிறநூல்களில் விரிவாக கூறப்பட்டவற்றை விரிவாகச் செய்தல், சிலவற்றைத் தொகுத்து வேறு சிலவற்றை விரிவாகச் செய்தல், வேறு மொழியில் பெயர்த்துச் செய்தல் என்று நூலின் யாப்பு நான்கு வகைப்படும். நூல் யாப்பு என்பது நூலில் செய்திகளை விளக்கும் முறை ஆகும்.

**4. சிறப்புப் பாயிரம் செய்ய தகுதியுடையோர்**

**தன்ஆ சிரியன் தன்னொடு கற்றோன்**
**தன்மா ணாக்கன் தகும்உரை காரன்என்று**
**இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே (நன் : 51)**

என்னும் நூற்பா சிறப்புப் பாயிரம் செய்தற்கு தகுதியுடையோரை வரையறை செய்கிறது. தன்னுடைய ஆசிரியன், தன்னோடு கற்றவன், தன்னுடைய மாணாக்கன், அந்நூலுக்கு உரை எழுதியவன் எனும் இந்நால்வரில் ஒருவர் சிறப்புப் பாயிரம் எழுதலாம்.

**2. சிறப்புப் பாயிரம் பிறர் எழுதுதல்**

**தோன்றா தோன்றித் துறைபல முடிப்பினும்**
**தான்தற் புகழ்தல் தகுதி அன்றே (நன் : 52)**

என்னும் நூற்பா வாயிலாக சிறப்புப் பாயிரம் எழுதுபவரை அறியலாம். பிறர்க்குத் தோன்றா நுட்பமான பொருட்களை எல்லாம் தோன்றச் செய்யும் பல துறைச் செய்திகளைக் கொண்ட அரிய நூலை இயற்றிய போதிலும் தன்னைத் தானே புகழ்ந்துரைத்தல் தக்கதன்று. எனவே சிறப்புப் பாயிரத்தைப் பிறரே எழுதுதல் வேண்டும்.

**3. தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்கள்**

**மன்னுடை மன்றத்து ஓலைத் தாக்கினும்**

**தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்**

**மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்**

**தன்னை மறுதலை பழித்த காலையும்**

**தன்னை புகழ்தலும் தகும்புல வோற்கே (நன் : 55)**

என்று தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்களை நன்னூலார் குறிப்பிடுகின்றார். அரசன் அவைக்கு எழுதும் சீட்டுக் கவியிலும் தனது புலமையை அறியாதவரிடத்திலும் அவையில் பிறருடன் புலமைப் போட்டியில் ஈடுபடும் பொழுதும் எதிரியாகிய புலவன் தன்னை இகழ்ந்துரைக்கும் பொழுதும் தன்னைத் தானே புகழ்ந்து பேசுதல் புலவனுக்குத் தகும்.

**4. பாயிரத்தின் இன்றியமையாமை**

**ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்**

**பாயிரம் இல்லது பனுவல் அன்றே**

**மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்**

**ஆடுஅனைத்தோள் நல்லார்க்கு அணியும்போல் - நாடிமுன்**

**ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்**

**பெய்துயையா வைத்தார் பெரிது (நன் : 54)**

என்று நன்னூலார் பாயிரத்தின் இன்றியமையாமையை குறிப்பிடுகின்றார். ஆயிரம் உறுப்புகளால் ஆன விரிந்த நூலாயினும் பாயிரம் இல்லாதது நூலாகாது. மாளிகைக்கு அழகிய ஓவியங்களும் மாநகரத்திற்கு நுழைவாயிற் கோபுரமும் நாட்டிய மங்கைக்கு அணிகலன்களும் அழகு சேர்த்தல் போன்று பாயிரம் நூலுக்கு அழகு சேர்ப்பதனால் அதனை எல்லாவகை நூல்களுக்கும் முதலில் பெரியோர் சேர்த்து வைத்தனர்.

## எழுத்தியல்

### எழுத்திலக்கணப் பாகுபாடு

தமிழ் மொழியின் இலக்கணம் ஐந்து பெரும் பிரிவுகளை உடையது. அவற்றுள் முதலாவது எழுத்து இலக்கணம் ஆகும். எழுத்து இலக்கணங்கள் யாவும் எழுத்ததிகாரம் என்னும் பிரிவில் நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவரால் விளக்கப்பட்டுள்ளன. எழுத்தியலை எழுத்ததிகாரம் ஐந்து இயல்களை உடையது. அவை, எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுப் புணரியல் என்பவையாகும். இதனை

எழுத்ததிகாரம்
- எழுத்தியல்
- பதவியல்
- உயிரீற்றுப் புணரியல்
- மெய்யீற்றுப் புணரியல்
- உருபுப் புணரியல்

என்னும் அட்டவணை வாயிலாகவும் அறியலாம். எழுத்திலக்கணத்தை அகத்திலக்கணம், புறத்திலக்கணம் எனும் இரு வகைகளில் அடக்கலாம். அகத்திலக்கணத்தில் எழுத்தியலும் புறத்திலக்கணத்தில் ஏனைய இயல்களும் அடக்கப் பெற்றுள்ளன. எழுத்ததிகாரத்தின் முதல் இயல் எழுத்தியல் ஆகும். அது எழுத்து தொடர்பான எல்லா இலக்கணப் பகுப்புகளையும் தொகுத்து விளக்குவதாக அமைகிறது. இவ்வியலை நன்னூல் ஆசிரியர் அருகதேவனை வணங்கி தொடங்குகிறார்.

**பூமலி அசோகினள் புனைநிழல் அமர்ந்த**

**நான்முகன் தொழுதுநன்கு இயம்புவன் எழுத்தே (நன் : 56)**

என்னும் நூற்பாவினால் கடவுளை வணங்கி எழுத்தியலைத் தொடங்குகிறார் ஆசிரியர். இவ்வியல் 12 பிரிவுகளை உடையது. அவற்றை விளக்குவதே இப்பகுதியின் நோக்கமாகும்.

**எழுத்திலக்கணத்தின் பாகுபாடு**

நன்னூலின் முதல் பிரிவு எழுத்ததிகாரம் ஆகும். அதில் முதல் இயல் எழுத்தியல் ஆகம். அப்பகுதியில் இடம் பெறும் இலக்கணச் செய்திகள் பன்னிரண்டு ஆகும். அவையே எழுத்திலக்கணத்தின் பாகுபாடுகள் ஆகும்.

**எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை,**

**முதல்ஈறு இடைநிலை போலிஎன்றா**

**புதம் புணர்ப்பு எனப்பன் னிருபாற் றதுவே (நன் : 57)**

என்னும் நூற்பா எழுத்திலக்கணப் பகுப்புகளை விளக்குகிறது. எழுத்தின் எண்ணிக்கை, பெயர், நெடுங்கணக்கு வரிசை, பிறப்பு, வரிவடிவம், ஒலி அளவு, சொல்லின் முதலில் நிற்றல், சொல்லின் இறுதியில் நிற்றல், சொல்லின் மத்தியில் நிற்றல், எழுத்துப்போலி, பதம் (சொல்), எழுத்துப் புணர்ச்சி ஆகிய 12 கூறுகளையும் மேற்குறித்த நூற்பா வாயிலாக அறியலாம்.

**1. எண்**

எண் என்பது தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும். அடிப்படையாக முதல் எழுத்து, சார்பு எழுத்து என்னும் இரண்டு பிரிவாக அமையும். ஒலிவடிவம், வரிவடிவம் ஆகிய இருவகை வடிவங்களில் எழுத்தின் ஒலிவடிவத்தை

**மொழிமுதல் காரணம் ஆம்அணுத் திரள்ஒலி**

**எழுத்துஅது முதல்சார்பு என இருவகைத்தே (நன் : 58)**

என்னும் இந்நூற்பா விளக்குகின்றது.

**முதல் எழுத்து**


தாமே தனித்து இயங்கும் தன்மை உடையது முதல் எழுத்து எனப்படும்.

உயிர் எழுத்துக்கள் 12

மெய் எழுத்துக்கள் 18

என, இரு நிலைகளில் அமையும் 30 எழுத்துக்கள் முதல் எழுத்து ஆகும்.

தமிழ் எழுத்துக்கள் இரு வகைப்படும். அவை, முதலெழுத்துக்கள், சார்பெழுத்துக்கள் ஆகும்.




அட்டவணை வாயிலாக தமிழ் எழுத்துக்களின் வகைகளை அறியலாம்.

**முதலெழுத்துக்கள்**

மொழிக்கு அடிப்படையாக அதாவது முதலாக விளங்கும் எழுத்துக்கள் ‘முதலெழுத்துக்கள்’ ஆகும். தமிழில் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் முதல் எழுத்துக்களாக அமைகின்றன.

தொல்காப்பியர் அகரம் முதல் னகரம் இறுதியாக உள்ள உயிரும் மெய்யுமாகிய 30 எழுத்துக்களும் முதல் எழுத்துக்கள் என்கிறார். தொல்காப்பியத்தின் வழிநூலான நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர்

**உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே (நன் : 59)**

என்கிறார். உயிரிருந்தால்தான் உடல் இயங்கும். உயிரெழத்துக்கள் இணைந்தால்தான் மெய்யெழுத்துக்கள் இயங்கும். உயிர் (ஆவி), மெய் (உடம்பு) என எழுத்துக்களுக்கு அறிவியல் அடிப்படையில் பெயரிடப்பட்டுள்ளது.

முதலெழுத்து (30)

உயிரெழுத்து (12) | மெய்யெழுத்து (18)

இவ் அட்டவணை வாயிலாக முதலெழுத்தின் வகையினை விளங்கிக் கொள்ளலாம்.

**உயிரெழுத்து (12)**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, என்னும் 12 எழுத்துக்களும் உயிரெழுத்துக்களாகும். இவற்றை இரு வகைகளாகக் கொள்ளலாம். அவை, குற்றெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் ஆகும். இதனை

உயிரெழுத்துக்கள் (12)

குற்றெழுத்துக்கள் (5) | நெட்டெழுத்துக்கள (7)

என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம். இவ் எழுத்துக்கள்

1. குற்றெழுத்துக்கள் - அ, இ, உ, எ, ஒ (ஒரு மாத்திரை அளவு ஒலிப்பன)
2. நெட்டெழுத்துக்கள் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ (இரு மாத்திரை அளவு ஒலிப்பன)

என்பனவாகும். இவை மொழிக்கு உயிராக (ஆவி) திகழ்வதால் உயிர் எழுத்துக்கள் ஆகும்.

**சார்பெழுத்து**

தனித்து இயங்கும் ஆற்றலின்றி முதல் எழுத்துக்களான உயிர், மெய்யெழுத்துக்களை சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்து எனப்படும். முப்பது முதலெழுத்துக்களும் மொழியில் வரும்போது பல்வேறு வகையாகத் திரிந்து ஒலிக்கின்றன.

எழுத்துக்கள் ஒன்றொடன்று சேரும்போதும்

எழுத்துக்களின் ஒலி நீளும் போதும்

எழுத்துக்களின் ஒலி குறையும் போதும்

ஏற்படும் ஒலித் திரிபிற்கேற்ப உருவாகும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் ஆகும். எனவே, உயிரும் மெய்யும் 'தனிநிலை எழுத்து' என்றும் அவற்றைச் சார்ந்து வரும் எழுத்து 'சார்பெழுத்து' என்றும் கொள்ளப்படும்.

**சார்பெழுத்தின் வகைகள்**

தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் மூவகை எழுத்துக்களை மட்டுமே சார்பெழுத்துக்கள் என்பார் நன்னூலார் 10 வகைகளைக் குறிப்பிடுகிறார். இதனை

**உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு**
**அஃகிய இஉ ஐஔ மஃகான்**
**தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும் (நன் : 60)**

என்னும் நூற்பா வாயிலாக அறியத் தருகிறார். அவை

| | |
|---|---|
| 1. உயிர்மெய் | 6. குற்றியலுகரம் |
| 2. ஆய்தம் | 7. ஐகாரக் குறுக்கம் |
| 3. உயிரளபெடை | 8. ஔகாரக் குறுக்கம் |
| 4. ஒற்றளபெடை | 9. மகரக் குறுக்கம் |
| 5. குற்றியலிகரம் | 10. ஆய்தக் குறுக்கம் - என்பனவாகும். |

**சார்பெழுத்தின் விரிவு (369)**

| | | |
|---|---|---|
| 1. உயிர் மெய் | - | 216 |
| 2. ஆய்தம் | - | 8 |
| 3. உயிர் அளபெடை | - | 21 |
| 4. ஒற்றளபெடை | - | 42 |
| 5. குற்றியலிகரம் | - | 37 |
| 6. குற்றியலுகரம் | - | 36 |
| 7. ஐகாரக் குறுக்கம் | - | 3 |
| 8. ஔகாரக் குறுக்கம் | - | 1 |
| 9. மகரக் குறுக்கம் | - | 3 |
| 10.ஆய்தக் குறுக்கம் | - | 2 |

உயிர் ஆய்தம் = ஆய்தம் = முற்றாய்தம், எழுபான் = எழுபது

**உயிர்மெய் இரட்டுநூற்று எட்டுஉயர் ஆய்தம்**
**எட்டுஉயிர் அளபுஎழு மூன்றுஒற் றளபெடை**
**ஆறேழ் அ..ஃகும் இம்முப் பானேழ்**
**உகரம் ஆறாறு ஐகான் மூன்றே**
**ஔகான் ஒன்றே ம..ஃகான் மூன்றே**
**ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்து உறுவிரி**
**ஒன்றுஒழி முந்நூறு எழுபான் என்ப (நன் : 61)**

என்னும் நூற்பா வாயிலாக நன்னூலார் சார்பெழுத்து விரியினை அறியத்தருகிறார்.

**2. பெயர்**

எழுத்துக்களுக்கு நம் முன்னோர் இட்டு வழங்கும் பெயர்கள் பல. அவை அடிப்படையாக இரண்டு நிலைகளை உடையன. அவை இடுகுறி, காரணம் என்பனவாகும்.

1. இடுகுறிப் பெயர்: காரணம் இன்றி ஒரு பொருளுக்கு இட்டு வழங்கப்படுவது.

2. காரணப் பெயர்: ஏதேனும் ஒரு காரணத்தின் அடிப்படையில் வழங்கப்படும் பெயர்.

இவ்விருவகைப் பெயர்களும் பல பொருள்களுக்குப் பொதுவான பெயராகியும் ஒரு பொருளுக்கே உரிய சிறப்புப் பெயராகியும் வரும். எனவே பொருள்களுக்குப் பெயரிடுதல் முறை நான்கு வகையாக அமையும். ஆவை,

1. இடுகுறிப் பொதுப்பெயர் : ஏ்கா - மரம்
2. இடுகுறிச் சிறப்புப்பெயர் : எ.கா - பலா
3. காரணப் பொதுப் பெயர் : எ.கா - வளையம்
4. காரணச் சிறப்புப் பெயர் : எ.கா - வளையல்

என்பனவாகும். இதனை

**இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின (நன் : 62)**

என்னும் நன்னூல் நூற்பா விவரிக்கின்றது. இதற்கு மற்றொரு பொருள் கூறும் வழக்கும் உள்ளது. பெயர்கள் இடுகுறி, காரணம் என்னும் இரண்டிற்கும் பொதுவாகியும் இடுகுறிக்கே உரிய சிறப்பாகியும் காரணத்திற்கே உரிய சிறப்பாகியும் வருவதுண்டு. அதாவது காரண இடுகுறிப்பெயர்,

இடுகுறிப்பெயர், காரணப் பெயர் என பெயர்கள் மூவகைப்படும் என்பதே இரண்டாம் கருத்தாக அமைகிறது.

மேலும் ஒரு பெயரினை இருபொருள்படக் கூறுவதை இரட்டுற மொழிதல் என்னும் உத்தியாகக் கொள்வர். அவ்வகையில் பெயர்களை சான்றுகளுடன் அறிவது அவசியமாகும்.

1. காரண இடுகுறிப்பெயர்: அந்தணர், முள்ளி(காரணமும் இடுகுறியும் பொருந்தி அமைந்த பெயர்)

2. இடுகுறிப் பெயர் : பொன், தமிழ் (ஒரு காரணமும் இன்றி தொடக்கத்தில் இடும் பெயர்)

3. காரணப் பெயர் : பொன்னன், தமிழன் (ஒரு காரணத்தால் இடப்படும் பெயர்)

அந்தணர் எனும் பெயர் அறவாளர் அனைவருக்கும் பொருந்துவதால் காரணப் பெயராகவும் பிராமணர் எனும் பெயர் ஓர் இனத்தாரை மட்டும் குறிப்பதால் இடுகுறிப் பெயராகவும் அமைகின்றன. எனவே இது காரண இடுகுறிப் பெயர் எனப்படுகிறது. முள்ளி என்பது முட்களுடைய செடிகள் அனைத்திற்கும் பொதுவான காரணப் பெயராகவும் முள்ளி என்னும் ஒருவகைச் செடிக்கு இடுகுறிப் பெயராகவும் அமைந்து காரண இடுகுறிப் பெயர் ஆயிற்று.

**எழுத்துக்களின் பெயர்கள்**

அகர முதல் ஔகாரம் ஈறாக உள்ள பன்னிரண்டு எழுத்துக்களையும் உயிர் என்னும் ககர முதல் னகரம் ஈறாக உள்ள பதினெட்டு எழுத்துக்களையும் மெய் என்றும் அறிவுடையோர் கூறினர்.

உயிர் - உயிர் போன்ற உயிரைச் சார்ந்து இயங்கவல்லது

மெய் - மெய் (உடம்பு) போன்று உயிரைச் சார்ந்து இயங்கவல்லது.

**உயிரும் - மெய்யும்**

மொழிக்கு அடிப்படையாக அதாவது முதலாக விளங்கும் எழுத்துக்கள் ‘முதலெழுத்துக்கள்’ ஆகும். தமிழில் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் முதல் எழுத்துக்களாக அமைகின்றன.

**அம்முதல் ஈறாறு ஆவி கம் முதல்**
**மெய்ம் மூவாறு என விளம்பினார் புலவர்’ (நன் : 63)**

என்னும் நன்னூல் நூற்பா ‘அ’ முதல் 12 உயிரெழுத்துக்கள், ‘க’ முதல் 18 மெய்யெழுத்துக்கள் என 30 எழுத்துக்கள் முதலெழுத்துக்கள் ஆகும். முதலெழுத்துக்களான உயிரும் மெய்யும் சேர்ந்து பிற எழுத்துக்கள் பிறக்கக் காரணமாவதால் அவை முதலெழுத்துக்கள் ஆகும்.

**உயிரெழுத்து (12)**

உயிரெழுத்துக்களை குற்றெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் ஆகும்.

1. குற்றெழுத்துக்கள் - அ, இ, உ, எ, ஒ (ஒரு மாத்திரை அளவு ஒலிப்பன)
2. நெட்டெழுத்துக்கள் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ (இரு மாத்திரை அளவு ஒலிப்பன)

என்பனவாகும். இவை மொழிக்கு உயிராக (ஆவி) திகழ்வதால் உயிர் எழுத்துக்கள் ஆகும்.

**அ, இ, உ, எ, ஒ க்குறில் ஐந்தே (நன் : 64)**

**ஆஈ ஊஏ ஐஓ ஔ நெடில் (நன் : 65)**

என்னும் நன்னூல் நூற்பாக்கள் வாயிலாக நன்னூலார் குறில் நெடில் பற்றி விவரிக்கின்றார்.

**மெய்யெழுத்துக்கள்**

மெய்யெழுத்துக்களில் வல்லொலியாக ஒலிப்பவை வல்லினம் ஆகும். மெல்லொலியாக ஒலிப்பவை மெல்லினம் ஆகும். இரண்டிற்கும் இடைப்பட்ட ஒலியுடன் ஒலிப்பவை இடையினம் ஆகும். இவ்வாறு ஒலிக்கும் தன்மையால் மெய்யெழுத்துக்கள் மூவகைப்படும். மெய்யெழுத்து அரை மாத்திரையாக ஒலிக்கும்.

**வல்லினம்**

க, ச, ட, த, ப, ற எனும் ஆறும் வல்லினம் எனப்படும். வன்மையான ஓசை உடையன. இதனை,

**வல்லினம் கசடத பறஎன ஆறே (நன் : 68)**

என நன்னூலார் விளக்குகிறார்.

**மெல்லினம்**

ங, ஞ, ண, ந, ம, ன எனும் ஆறும் மெல்லினம் எனப்படும். மெல்லினம் மென்மையான ஓசை உடையன. இதனை,

**மெல்லினம் ஙஞணந மனஎன ஆறே (நன் : 69)**

என நன்னூலார் விளக்குகிறார்.

**இடையினம்**

ய, ர, ல, வ, ழ, ள எனும் ஆறும் இடையினம் ஆகும். வல்லினத்திற்கும் மெல்லினத்திற்கும் இடைப்பட்ட ஓசை உடையன. இதனை,

**இடையினம் யரலவ ழளஎன ஆறே (நன் : 70)**

என நன்னூலார் விளக்குகிறார்.

**இனவெழுத்துக்கள்:**

பிறப்பாலும் முயற்சியாலும் வடிவாலும் ஒத்த எழுத்துக்களை இன எழுத்துக்கள் என்பர்.

உயிரெழுத்துக்களில் 1. அ, ஆ 2. இ, ஈ 3. உ, ஊ 4. ஏ, ஏ 5. ஐ, இ 6. ஒ. ஓ 7. ஔ, உ என ஏழு இனங்கள் உள்ளன.

மெய்யெழுத்துக்களில் 1. க் ங் 2. ச் ஞ் 3. ட் ண் 4. த் ந் 5. ப் ம் 6. ற் ன்
7. ய் ர் ல் வ் ழ் ள் - என ஏழு இனங்கள் உள்ளன.

முதலெழுத்துக்கள் இரண்டிரண்டு ஓரின எழுத்துக்களாகி வழங்குதல் தொன்று தொட்டு வரும் முறையாகும். ஐகார, ஔகாரங்களுக்கு முறையே இகரமும் உகரமும் இனவெழுத்துக்களாகும்.

ஐகார, ஔகாரங்களுக்கு ஏனைய நெடில்களுக்கு குறில் இனவெழுத்தாகுதல் போன்று இனவெழுத்து இல்லை. எனினும் ஈகார, ஊகாரங்களின் இனமாகிய இகர, உகரங்கள் முறையே அவைகளுக்கு இனவெழுத்தாக வரும். இடையின எழுத்துக்களுக்குத் தனியாக இனவெழுத்து இல்லை. இதனை,

**ஐஔ இஉச் செறிய முதலெழுத்து**
**இவ்விரண்டு ஓர்இன மாய்வரல் முறையே (நன் : 71)**

என்னும் நூற்பா வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**இனம் - பெயர்க்காரணம்**

பிறப்பிடம். பிறப்பிற்கான முயற்சி, மாத்திரை, பொருள், ஒலியும் வரியுமாகிய உருவம் ஆகியவற்றின் சில இயல்புகளால் ஒத்திருத்தல் இனம் எனப்படும். பிறப்பிடம் முதலியவற்றின் அடிப்படையில் இனம் பிரித்து அறியப்படும் என்பது இதன் கருத்து.

எ.கா - தானத்தாலும் முயற்சியாலும் ஒத்தவை - உயிரெழுத்துக்கள்

முயற்சியாலும் அளவாலும் ஒத்தவை - வல்லினம், மெல்லினம்

பொருளால் ஒத்தவை - உயிர், வல்லினம், மெல்லினம்

(அங்கு, ஆங்கு, குளக்கரை, குளங்கரை ஓரெழுத்திற்குப் பதிலாக அதன் இனவெழுத்து வரினும் பொருள் மாறாது)

வடிவால் ஒத்தவை – அ, ஆ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ

**தானம் முயற்சி அளவு பொருள் வடிவு**

**ஆனஒன்று ஆதிஓர் படைஒப்பு இனனே. (நன் : 72)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறிந்து கொள்ளலாம்.

**சுட்டெழுத்து**

அ, இ, உ எனும் மூன்றும் சொல்லுக்கு முதலிலும் தனித்தும் சுட்டுப் பொருளை உணர்த்தினால் சுட்டெழுத்துக்களாகும். சுட்டெழுத்துக்கள் சொல்லின் உறுப்பான (அகத்து) அமைதல் அகச்சுட்டாகும். அவை சொல்லினின்று வேறாகி (புறத்து) அமைதல் புறச்சுட்டாகும்.

எ.கா

அவன்,
இவன், } சொல்லுக்கு முதலில் வந்த சுட்டெழுத்துக்கள் (அகச்சுட்டு)
உவன்

அச் சிறுவன் } தனியே வந்த சுட்டெழுத்துக்கள் (புறச்சுட்டு)
இச் சிறுவன்
உச் சிறுவன்

அகரம் தொலைவிலுள்ள பொருளைச் சுட்டுவதால் சேய்மைச் சுட்டு எனப்படும். இகரம் அண்மைப் பொருளைச் சுட்டுவதால் அண்மைச்சுட்டு எனப்படும். உகரம், நடு, பின் மேலிடங்களிலுள்ளவற்றைச் சுட்டும் இடைச்சுட்டாகும். இதனை

**அ இ உம் முதல் தனிவரின் சுட்டே (நன் : 66)**

என நன்னூலார் விவரிக்கின்றார்.

**வினா எழுத்து**

எ, யா ஆகிய இரண்டும் சொல்லுக்கு முதலிலும் ஆ, ஓ ஆகிய இரண்டு சொல்லுக்கும் இறுதியிலும் ஏகாரம் சொல்லுக்கு முதல் இறுதி எனும் ஈரிடத்தும் வினாப்பொருளை உணர்த்தினால் வினாவெழுத்துக்களாகும்.

அகவினா, புறவினா என வினா இருவகைப்படும். வினா எழுத்துக்கள் சொல்லின் உறுப்பாக அகத்து அமைதல் அகவினா, அவை சொல்லினின்று வேறாகி புறத்து அமைதல் புறவினா.

எ.கா -

| | |
|---|---|
| எவன்<br>யார்<br>எவன்<br>எவ்வீடு | எ, யா, ஏ முதலில் வந்தன. (அகவினா) |
| பாண்டியனா<br>பாண்டியனோ<br>பாண்டியனெ | ஆ, ஓ, ஏ ஈற்றில் வந்தன (புறவினா) |

ஈற்று வினா புறவினாவாக மட்டுமே வரும். இதனை நன்னூலார்

**எயா முதலும் ஆஓ ஈற்றும்**
**ஏஇரு வழியும் வினாஆ கும்மே (நன் : 68)**

எனும் நூற்பா வாயிலாக விவரிக்கிறார்.

மேற்குறித்த செய்திகள் வாயிலாக பெயர்கள் பொதுவாக இடுகுறி, காரணம் என இரு வகைப்படும் என்றும் தமிழ், மொழியில் எழுத்துக்களுக்கு வழங்கப்படும் பெயர்கள்

1. உயிர் - அ முதல் ஔ வரை (12)
2. மெய் - க் முதல் ன் வரை (18)
3. குறில் - அ, இ, உ, எ, ஒ (5)
4. நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ (7)

5. சுட்டு - அ, இ, உ (3)

6. வினா - எ, யா ( முதலில் வரும்) - 5

ஆ, ஓ ( இறுதியில் வரும்) - 5

ஏ இரண்டிடத்தும் வரும் - 5

7. வல்லினம் - க், ச், ட், த், ப், ற் (6)

8. மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன் (6)

9. இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள் (6)

என்றும் சுருக்கமாக விளங்கிக் கொள்ளலாம்.

**முறை**

தமிழ் எழுத்துக்களை வழங்கி வரும் முறை ஒன்று நடைமுறையில் உள்ளது. சிறப்பு கருதியும், ஒன்றுக்கு ஒன்று இனம் என்னும் காரணம் கருதியும் எழுத்துக்களை 'அ'கரம் முதலாக வழங்குவதே 'முறை' ஆகும். தனித்து இயங்கும் சிறப்பினால் உயிர்கள் மெய்களுக்கு முன்பு வைக்கப்பட்டுள்ளன. இயல்பான ஓசை உடைய குறில்கள் அவற்றின் நீட்சியாக (விகாரமாகிய) நெடில்களுக்கு முன்பும் வலிய ஓசை உடைய வல்லினம் மெல்லினத்திற்கு முன்பும் வைக்கப்பட்டுள்ளன.

குறில்களுக்குப் பின்பு நெடில்களும் வல்லினத்திற்குப் பின்பு மெல்லினமும் இனம் எனும் காரணத்தால் லைக்கப்பட்டுள்ளன. (குறிலுக்கு நெடில் இனம் :வல்லினத்திற்கு மெல்லினம் இனம்,

எ.கா (அ-ஆ, இ-ஈ, …க்-ங், ச்-ஞ் …)

வலிய ஓசையும் மெலிய ஓசையும் உணர்ந்த பின்னரே அவற்றிற்கு இடைப்பட்ட இடையின ஓசையை உணர முடியும். எனவே இடையினம் மெய் வரிசையில் பின்பு வைக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்களான ழ, ற, ன ஆகியன ஈற்றில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் எழுத்துக்களின் முறை : அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ∴

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ற், ன் - என்பதாகும்.

**சிறப்பினும் இனத்தினும் செறிந்து ஈண்ட இம்முதல்**

**நடத்தல் தானே முறைமை யாகும்மே (நன் :73)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை நன்னூலார் விவரிக்கின்றார்.

**பிறப்பு**

பிறப்பு மொழிக்கு முதற்காரணமாகிற அணுக் கூட்டத்தின் காரியமே ஒலியாகும். இவ்வொலியே எழுத்து ஆகிறது.

நிறைந்த உயிரினது முயற்சியால், உள் நின்ற காற்றானது எழுப்ப எழுகின்ற அணுக் கூட்டம் வெவ்வேறு எழுத்து ஒலியாகத் தோன்றும். இவ்வொலி அணுத்திரள் மார்பு, கழுத்து, தலை, மூக்கு எனும் நான்கும் இடங்களாகவும் அமைய ; உதடு, நாக்கு, பல், கண்ணம் எனும் நான்கு உறுப்புகளும், முயற்சிப்பதால் வெவ்வேறு எழுத்தொலிகள் தோன்றுகின்றன. இவையே எழுத்துக்களின் பிறப்பாக கருதப்படுகிறது. இக்கருத்துக்களை

**நிறை உயிர் முயற்சியின் உள்வளி துரப்ப**
**எழும் அணுத் திரள் உரம், கண்டம், உச்சி**
**மூக்குஉற்று இதழ்நாப் பல்அண்த் தொழிலின்**
**வெவ்வேறு எழுத்தொலியாய் வரல் பிறப்பே (நன் : 74)**

என்னும் நூற்பா விவரிக்கின்றது.

**முதலெழுத்துக்களின் பிறப்பு**

**1. இடப்பிறப்பு**

மேற்குறிய நெறியால் பிறக்குங்கால் உயிரெழுத்துக்களும் இடையெழுத்துக்களும் பிறக்குமிடம் கழுத்தாகும். மெல்லினம் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும். வல்லினம் நெஞ்சினைப் பிறப்பிடமாகக் கொண்டு பிறக்கும். இதனை,

**அவ்வழி**
**ஆவி இடையை இடம்மிடறு ஆகும்**
**மேவும் மென்மைமூக்கு உரம்பெறும் வன்மை. (நன் : 75)**

என்னும் நூற்பா விவரிக்கிறது.

**2. முயற்சியின் சிறப்பு**

1. உயிரெழுத்துக்கள்:

அ, ஆ எனும் இரு எழுத்துக்களும் வாயைத் திறப்பதனால் பிறக்கும்.

**அவற்றுள்**

**முயற்சியுள் அ, ஆ அங்காப்பு உடைய (நன் : 76)**

எனும் நூற்பாவால் இதனை அறியலாம். அங்காத்தல் என்பது வாயைத் திறத்தல் ஆகும்.

இ, ஈ, எ, ஏ, ஐ எனும் ஐந்தும் வாயைத் திறந்து, மேற்கடைவாய்ப் பற்களை முதல் நாக்கில் விளிம்பு பொருந்துவதால் பிறக்கும்.

**இஈ எஏ ஐஅங் காப்போடு**

**ஆண்பல் முதல் நா விளிம்புஉற வருமே (நன் : 77)**

எனும் நூற்பாவால் இதனை அறியலாம். விளிம்பு என்பது ஓரம் ஆகும்.

உ, ஊ, ஒ, ஓ, ஔ எனும் ஐந்தும் உதடுகள் இரண்டையும் குவிப்பதால் பிறக்கும்.

**உஊ ஒஓ, ஔஇதழ் குவிவே (நன் : 78)**

எனும் நூற்பாவால் இதனை அறியலாம்.

**2. மெய்யெழுத்துக்கள்**

க, ங, ச, ஞ, ட, ண

க, ங இரண்டும் முதல் நாக்கு முதல் அண்ணத்தைப் பொருந்துவதால் பிறக்கும்.

ச, ஞ இரண்டும் இடைநாக்கு இடை அண்ணத்தைப் பொருந்துவதால் பிறக்கும்.

ட, ண இரண்டும் நுனிநாக்கு நுனி அண்ணத்தைப் பொருந்துவதால் பிறக்கும்.

**கஙவும் சஞவும் முதல்இடை**

**நுனிநா அண்ணம் உறமுறை வருமே (நன் : 79)**

எனும் நூற்பாவால் இதனை அறியலாம்.

| | | |
|---|---|---|
| முதலண்ணம் | - | மெல்லண்ணம் |
| இடையண்ணம், நுனியண்ணம் | - | வல்லண்ணம் |

**த, ந**

த, ந எனும் இரண்டும் மேற்பல்லின் அடிப்பாகத்தை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கும்.

**அண்பல் லடிநா முடிஉறத் தநவரும் (நன் : 80)**

எனும் நூற்பாவால் இதனை அறியலாம்.

**ப, ம**

ப, ம இரண்டும் மேலுதடும் கீழுதடும் பொருந்துவதால் பிறக்கும்.

**மீகீழ் இதழ்உறப் பம்மப் பிறக்கும்** (நன் : 81)

எனும் நூற்பாவால் இதனை அறியலாம்.

**ய**

முதல் நாக்கு முதலண்ணத்தைப் பொருந்துவதால் யகரம் பிறக்கும்

**அடிநா அடிஅணம் உறய தோன்றும்** (நன் : 82)

எனும் நூற்பாவால் இதனை அறியலாம்.

**ர, ழ்**

ரகரமும் ழ்கரமும் நுனி நாக்கு நுனியண்ணத்தைத் தடவுவதால் பிறக்கும்

**அண்ணம் நுனிநா வருட ரழ்வரும்** (நன் : 83)

எனும் நூற்பாவால் இதனை அறியலாம்.

**ல, ள**

மேற்பல்லின் அடிப்பாகத்தை நாக்கின் விளிம்பு தடித்து ஒற்றுவதால் லகரம் பிறக்கும். அண்ணத்தை நாக்கின் விளிம்பு தடித்து தடவுவதால் ளகரம் பிறக்கும்.

**அண்பல் முதலும் மண்ணமும் முறையின்**
**நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்**
**லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும்** (நன் : 84)

எனும் நூற்பாவால் இதனை அறியலாம்.

**வ**

மேற்பல்லைக் கீழுதடு பொருந்துவதால் வகரம் பிறக்கும்

**மேபல் இதழ்உற மேவியும் வவ்வே** (நன் : 85)

எனும் நூற்பாவால் இதனை அறியலாம்.

**ற, ன**

நுனிநாக்கு நுனியண்ணத்தை நன்க பொருந்துவதால் (அழுத்துவதால்) றகரமும் னகரமும் பிறக்கும்.

**அண்ணம் நுனிதா நனிஉறின் றனவரும்** **(நன் : 86)**

எனும் நூற்பாவால் இதனை அறியலாம்.

**3. சார்பெழுத்துக்களின் இடம், முயற்சிப் பிறப்பு**

ஆய்தம் தலையைப் பிறப்பிடமாகக் கொண்டு வாயைத் திறப்பதால் பிறக்கும். மற்றச் சார்பெழுத்துக்கள் ஒன்பதும் தத்தம் முதலெழுத்துக்களை ஒத்த பிறப்பினை உடையன.

**ஆய்தக்கு இடம் தலை அங்கா முயற்சி**

**சார்பெழுத்து ஏனவும் தம்முதல் அனைய** **(நன் : 87)**

எனும் நூற்பாவால் இதனை அறியலாம். எழுத்துக்கள் பிறக்கும் இடங்களை பின்வரும் அட்டவணை வாயிலாக எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

| எழுத்து வகை | பிறக்கும் இடம் |
|---|---|
| உயிர் | கழுத்து |
| ஆய்தம் | தலை |
| வல்லினம் | மார்பு |
| மெல்லினம் | மூக்கு |
| இடையினம் | கழுத்து |
| சார்பெழுத்து | முதல் எழுத்துப் பிறக்கும் இடமே |

எழுத்துக்கள் (முதல்,சார்பு) பிறக்கும் முயற்சிகளை பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகிறது.

மேல் குறிப்பிடப்பட்டது இடப் பிறப்பு ; இனி குறிப்பிடப்படுவது முயற்சிப் பிறப்பு ஆகும்.

| **எழுத்துக்கள்** | **பிறப்பு முயற்சிகள்** |
|---|---|
| அ, ஆ | அங்காத்தல் எனும் வாய் திறத்தல் |
| இ, ஈ, எ, ஏ, ஐ | அங்காத்தலுடன், மேல் வாய்ப்பல்லை அடி நாக்கின் ஓரமானது பொருந்துதல் |
| உ, ஊ, ஒ, ஓ. ஔ | இதழ் குவிதல் |

| | |
|---|---|
| க், ங் | நாக்கின் அடியும் மேல் வாயின் அடியும் பொருந்துதல் |
| ச், ஞ் | நாக்கின் நடுவும் மேல் வாயின் நடுவும் பொருந்துதல் |
| ட், ண் | நாக்கின் நுனியும் மேல் வாயின் கடையும் பொருந்துதல் |
| த், ந் | மேல் வாய்ப் பல்லின் அடியை நாக்கு நுனி பொருந்துதல் |
| ப், ம் | இதழ் (உதடுகள் இயைந்து பிறக்கும் சேர்ந்து) |
| ய் | நாக்கின் அடி மேல் வாயின் இடியைப் பொருந்துதல் |
| ர், ழ் | மேல் வாயை நான்கின் நுனியானது தடவுதல் |
| வ் | மேல் வாய்ப் பல்லோடு கீழ் உதடு பொருந்துதல் |
| ற், ன் | மேல் வாயை நாக்கு நுனி மிகப் பொருந்துதல் |
| ஆய்தம் | அங்காத்தல் |
| சார்பு | முதல் எழுத்துப் பிறப்பது போலவே |

**பிறப்புக்குப் புறனடை**

ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்களின் பிறப்பு ஒருங்கே சேர்த்து மேலே கூறப்பட்டன. எனினும் உயர்த்தி ஒலித்தல். தாழ்த்தி ஒலித்தல், நடுத்தரமாக ஒலித்தல் எனும் ஒலிப்பு முயற்சி வேறுபாடு காரணமாக, ஒருங்கே சேர்க்கப்பட்ட எழுத்துக்களுள் ஒன்றிலிருந்து இன்னொன்று சிறிது பிறப்பு அடையதாகும். (ஒவ்வொரு எழுத்தும் தனித்தனிப் பிறப்பினை உடையது என்பது இதன் கருத்து)

நடுத்தரமாக ஒலித்தல் எனும் ஒலிப்பு முயற்சி வேறுபாடு காரணமாக ஒருங்கே சேர்க்கப்பட்ட எழுத்துக்களுள் ஒன்றிலிருந்து இன்னொன்று சிறிது பிறப்புடையதாகும். (ஒவ்வொரெழுத்தும் தனித்தனிப் பிறப்பினை உடையது என்பது இதன் கருத்து) இதனை,

**எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பின்**

**திரிபும் தத்தமில் சிறிதுஉள ஆகும். (நன் : 88)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம். இடப்பிறப்பினை ஒலிப்பிடம் என்றும் முயற்சிப் பிறப்பினை என்றும் மொழியியலார் குறிப்பிடுவர். நன்னூல் குறிப்பிடும் எழுத்துக்களின் பிறப்புச் செய்திகளை

மொழியியலார் ஒலியியல் என குறிப்பிடுவர். முன் குறிப்பிடப்பட்டவை ஒலிப்பு ஒலியியல் கருத்துக்கள் ஈகும்.

**சார்பெழுத்துக்கள்**

**உயிர்மெய்**

மெய்யும் உயிரும் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்தாகும். உயிர் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்களுடன் கூடும்போது, மெய்யெழுத்துக்கள் தமக்குரிய புள்ளியை விட்டுவிடும். அவ்வாறு விட்ட வடிவமே தமக்குரிய வடிவமாக நிற்கும்.

எ.கா - க் + ஆ = கா ச் + இ = சி ப் + அ = ப

உயிர்மெய்யெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களின் மாத்திரையினை இழந்து உயிரெழுத்துக்குரிய மாத்திரை கொண்டு ஒலிக்கும். மெய்யெழுத்துக்களுடன் உயிரெழுத்துக்கள் வரும்பொழுது உயிர் மெய்யின் மீது ஏறி உயிர்மெய்யாக மாறிவிடும். இதனை

**‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ (நன் : 204)**

என்னும் நன்னூல் நூற்பா தெளிவுபடுத்துகிறது. 12 உயிரும் 18 மெய்யின் மேல் தனித் தனியே ஏறி வருவதால், (18×12) 216 உயிர் மெய் எழுத்துக்கள் தோன்றுகின்றன. உயிர்மெய் உயிரின் மாத்திரை அளவே ஒலிக்கும். உயிரின் வடிவத்தை நீக்கும் மெய்யோசை முன்னும் உயிரோசை பின்னுமாக ஒலிக்கும்.

**புள்ளி விட்டு அவ்வொடு முன்உருபு ஆகியும்**
**ஏனை உயிரோடு உருவு திரிந்தும்**
**உயிரளவு ஆய்அதன் வடிவுஒழித்து இருவயின்**
**பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய் (நன் : 89)**

என்னும் நூற்பா உயிர்மெய்யின் ஒலிப்பு முறையினை விவரிக்கின்றது.

புள்ளி நீங்கிய வடிவம் - க் + அ = க, ய் + அ = ய

உருபு திரிந்த வடிவம் - க் + ஆ = கா, க் + உ = கு

மெய்யின் அரை மாத்திரை ஒழிந்து உயிர்மெய்க் குறில் ஒரு மாத்திரையாகவும் உயிர்மெய் நெடில் இரு மாத்திரையாகவும் ஒலிக்கும். இதனையே நன்னூலார் உயிரளவு ஆய் எனக் குறிப்பிடுகிறார்.

**ஆய்தம் (முற்றாய்தம்)**

தமிழ் நெடுங்கணக்கில் ஆய்த எழுத்து உயிரெழுத்துக்களின் வரிசையில் இறுதி எழுத்தாக உள்ளது. இது தொல்காப்பியர் குறிப்பிடும் குற்றியலிகரம், குற்றியலுகரத்துடன் சார்பெழுத்தாகும் பெருமை பெற்றது. இ஼து இரண்டன் மேல் ஒன்று அடுக்கிய புள்ளி வடிவமாக எழுதப்படுகிறது. இதன் வடிவம் ∴ என்பதாகும்.

இ஼து உயிரெழுத்தும் இல்லை. மெய்யெழுத்தும் இல்லை. உயிரெழுத்தோடும் மெய்யெழுத்தோடும் சேராமல் தனி நிலையாக நிற்பதால் இ஼து தனிநிலை என்றும் அழைக்கப்படுவதுண்டு.

எ.கா – அ஼றிணை

இ஼து மெய்யெழுத்தைப் போன்று அரை மாத்திரை அளவு உடையது. இது மெய்யெழுத்தைப் போன்று உயிருடன் சேர்ந்து உயிர்மெய்யாக மாறுவதில்லை.

அடுத்துவரும் சொல் உயிராக வந்தால், அதன் முன்வரும் சுட்டு ஆய்தம் பெற்று அமையும்.

எ.கா – அ஼து என்ன? இ஼து ஒன்று இ஼து உலகம்.

இவ்வாய்தம் குற்றெழுத்தின் பின்னும், உயிர் ஏறிய க் ச் ட் த் ப் ற் என்னும் ஆறு வல்லின உயிர் மெய்களின் முன்னும் வரும்.

எ.கா – அ஼து எ஼கு, க஼சு, ப஼றி.

இன்று ஆய்த எழுத்து பயன்பாட்டில் இல்லை. பிற மொழிச் சொற்களில் உரசொயாக வரும். (எ-கா) ஷபேசன், ஷபேமஸ், ஷபெவிகால், இதனை

**குறிஅதன் முன்னர் ஆய்தப்புள்ளி**


**உயிரொடு புணர்ந்த வல்லாரன் மிசைத்தே (நன் : 90)**

என்னும் நூற்பாவால் அறியலாம். இதன்படி

| | | |
|---|---|---|
| ஆய்தம் | - | மொத்தம் 8 இவற்றில் |
| வல்லின வகையால் வருவன | - | 6 |
| புணர்ச்சி விகாரத்தால் வருவது | - | 1 (அவ் + கடிய = அ஼கடிய) |
| செய்யுள் விகாரத்தாள் வருவது | - | 1 (செய்வது – செய்வ஼து ) |
| | | அது – அ஼து (விரித்தல்) |

## அளபெடை

தமிழ் எழுத்துக்களை அதற்குரிய மாத்திரை கால அளவிலிருந்து சூழலுக்கேற்ப நீட்டி ஒலிப்பது மொழி வழக்கில் இயல்பான நிகழ்வாகும். இவ்வாறு நீட்டி ஒலிக்கப்படும் எழுத்துக்களுக்கு அளபெடை என பெயர். உயிர், மெய் எனும் இருவகை எழுத்துக்களும் அளபெடையாக வரும். இதன் அடிப்படையில் அளபெடையை இரு வகைப்படுத்தலாம். அவை, உயிரளபெடை, ஒற்றளபெடை என்பனவாகும். இதனை




என்னும் அட்டவணை வாயிலாக விளங்கிக்கொள்ளலாம்.

**உயிரளபெடை**:

செய்யுளில் சொல்லின் முதலிலும் இடையிலும் நிற்கும் உயிர் நெடில் எழுத்துக்கள் ஏழும், தன் மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலிப்பது உயிரளபெடை ஆகும். ஒலிப்புக் கால அளவு நீண்டு வருவதால் அதாவது அளபெடுப்பதால் அளபெடை எனப்படுகிறது. அளபெடைக்கு அடையாளமாக, அளபெடுத்த நெடில் உயிருக்கு இனமான குறில் உயிர்கள் தொடர்ந்து வரும். இவ் உயிரளபெடை 21 ஆகும் என்கிறார் நன்னூலார்.

உயிர் + அளவு + எடை = உயிர் + மாத்திரை + நீட்சி

எ.கா - ஓஒதல், யாஅதும் (சொல் முதல் அளபெடை)

தொழாஅர், வரூஉம் (சொல் இடை அளபெடை)

மரூஉ, நசைஇ (சொல் இறுதி அளபெடை)

உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை இன்னிசை அளபெடை, இசைநிறை (செய்யுளிசை)அளபெடை, சொல்லிசை அளபெடை என்பனவாகும். இதனை

உயிரளபெடை

- இன்னிசை அளபெடை
- இசைநிறை (செய்யுளிசை)அளபெடை
- சொல்லிசை அளபெடை

இவ் அட்டவணை வாயிலாக அறியலாம். இதனை,

**இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்**

**அளபுஎழும் அவற்றுஅவற்று இனக்குறில் குறியே (நன் : 91)**

என்னும் நூற்பா விவரிக்கிறது. இதன்படி

| | | |
|---|---|---|
| முதல் இடை கடை | - | 18 |
| ஔகாரம் முதல் | - | 1 |
| இன்னிசை அளபெடை | - | 1 |
| சொல்லிசை அளபெடை | - | 1 |

என உயிரளபெடை மொத்தம் 21 ஆகும். ஔகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வராது. பிற ஆறு நெடில்கள் முதல் இடை கடையில் அளபெடுக்கும்.

**இன்னிசை யளபெடை**

செய்யுளில் சீர், தளை உள்ளிட்ட யாப்பிலக்கணம் செம்மையாக அமைந்த போதிலும், இனிய ஓசை (இசை) தருவதற்காக குறில் நெடிலாக மாறி அளவெடுப்பது இன்னிசையளபெடை ஆகும்.

எ.கா - கொடுப்ப**தூஉ**ம், எடுப்ப**தூஉம்,** படுப்ப**தூஉம்**

இதில் கொடுப்பதும், எடுப்பதும், படுப்பதும் என்னும் சொற்களே அளபெடுத்துள்ளன. இந்நிலைகளிலும் வெண்பாவிற்குரிய செப்பலோசை குன்றவில்லை. ஆயினும் இன்னிசையை நிறைக்கவே குறில் நெடிலாகி அளபெடுத்துள்ளது. எனவே இது இன்னிசைஅளபெடை எனப்படும்.

**இசைநிறை (செய்யுளிசை) அளபெடை**

செய்யுளில் சீரும் தளையும் சிதையும் பொழுது, குன்றிய ஓசையை நிறைத்துச் செம்மையாக்க உயிர் நெட்டெழுத்து அளபெடுக்கும். செய்யுள் இலக்கணத்தை நிறைக்க அளபெடுப்பதால் செய்யுளிசை அல்லது இசைநிறை அளபெடை எனப்படுகிறது.

எ.கா – ஓஒதல் , தொழாஅர், வாஅதம்

**சொல்லிசை அளபெடை**

செய்யுளில் ஒருவகைச் சொல்லை மற்றொரு வகைச் சொல்லாக மாற்றுவதற்கு உயிரெழுத்து அளபெடுக்கும். இவ்வாறு உயிர் நீண்டு ஒலிப்பது சொல்லிசையளபெடை எனப்படுகிறது.

எ.கா – நசைஇ, அசைஇ, ஓரீஇ

**ஒற்றளபெடை**

ஒற்றெழுத்துக்கள் அளபெடுத்து வருவது ஒற்றளபெடை ஆகும். செய்யுளில் இசை குன்றிய இடங்களில் இசையை ஏற்படுத்துவதற்காக ஒற்றெழுத்துக்கள் (மெய்) அளபெடுத்து வருவதுண்டு. பேச்சு வழக்கிலும் இத்தகைய ஒற்றளபெடை பெருவழக்காக உள்ளது. இது ஒரு குறிலை அடுத்தும் இருகுறில்களை அடுத்தும் அமைந்து வரும்.

எ.கா – சங்ங்கு, முத்த்தம், செல்ல்லம், கண்ண்ணு, எல்ல்லாம் - தனிக்குறிலை அடுத்து ஒற்றளபெடை வந்துள்ளது.

எ.கா - இலங்ங்கு, எழுந்ந்து, படித்த்து, பழக்க்கம், வணக்க்கம் - இணை குறில்களை அடுத்து ஒற்றளபெடை வந்துள்ளது.

**ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்** என்னும் 10 ஒற்றெழுத்துக்களும் அளபெடுக்கும். இவற்றுடன் ஆய்த எழுத்தும் அளபெடுக்கும். எனவே 11 எழுத்துக்கள் ஒற்றளபெடையாக வரும். ஆய்தம் சொல்லின் இடையில் மட்டுமே அளபெடுக்கும்.

எ.கா – எஃஃகு, இஃஃது,

நன்னூலார் ஒற்றளபெடை 42 என வரையறை செய்துள்ளார்.

குறில்இணைக் கீழ் இடை, குறிற்கீழ் இடை - 2

குறில்இணைக் கீழ் இடை, குறில் இணைகீழ் கடை, குறில் கீழ் இடை, குறில் கீழ் கடை – 40

இலங்ங்கு – குறில் இணைக் கீழ் இடை அளபெடை

விடங்ங் – குறில் இணைக் கீழ் கடை அளபெடை

எங்ங்கிறைவன் - குறில் கீழ் இடை அளபெடை

அங்ங் - குறில் கீழ் கடை அளபெடை

**நஞுண நமன வயலள ஆய்தம்**

**அளபுஆம் குறில்இணை – குறிற்கீழ் இடைகடை**

**மிகலே அவற்றின் குறியாம் வேறே (நன் : 92)**

எனும் நூற்பா வாயிலாக நன்னூலார் ஒற்றளபெடையினை விவரிக்கின்றார்.

**குற்றியலிகரம்**

**'யகரம் வரக் குறள் உத் திரி இகரமும்**

**அசைச் சொல் மியாவின் இகரமும் குறிய (நன் : 93)**

என்னும் நூற்பா குற்றியலிகரத்தை விவரிக்கின்றது. நிலைமொழியில் குற்றியலுகரம் அமைந்து வருமொழியில் யகரம் முதலாக அமைந்த சொல் வரும் நிலையில் நிலைமொழியில் உள்ள உகரம் இகரமாகி அதன் மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் ஆகும்.

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்

குறுகிய ஓசையை உடைய இகரம் என்பது இதன் பொருள். குற்றியலிகரம் 36 என பொதுப்படக் கூறினாலும், மியாவுடன் சேர்ந்து 37 என்பது நன்னூலின் கருத்தாகும்.

எ.கா –
- நாகு + யாது = நாகியாது
- பாடு + யார் = பாடியார்
- கொக்கு + யான் = கொக்கியான்
- நந்து + யானை = நந்தியானை

'மியா' என்னும் அசைச் சொல்லில் மகரத்தின் மேலுள்ள இகரமும் (ம் + இ) குற்றியலிகரம் ஆகும் என்கிறார் நன்னூலார்.

எ.கா – கேண் + மியா = கேண்மியா

பழங்காலத்தில் செய்யுள் வழக்கில் இருந்த குற்றியகரம் இன்று வழக்கில் இல்லை. யா என்னும் எழுத்தின் முன் இக்குற்றியலிகரம் தோன்றும்.

நாடு + யாது = நாடியாது

என ஒரே சொல்லாக ஒலிக்கும் போது இகரம் மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பதைத் தொல்காப்பியர் இனம்கண்டார். இது குற்றியலிகரமாக ஒலித்தால்தான் 'நாடு' என்றும் இல்லையெனில் 'நாடி' என்றும் பொருள் தரும். எனவே, ஒலியாலும் பொருளாலும் வேறுபடும் இகரத்தைக் குற்றியலிகரமாக்கிச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாகக் கொண்டார் தொல்காப்பியர்.

**குற்றியலுகரம்**

**நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலி இடைத்**

**தொடர்மொழி இறுதி வன்மை ஊர் உகரம்**

**அலிகும் பிறமேல் தொடரவும் பெறுமே (நன் : 94)**

என்னும் நன்னூல் நூற்பா குற்றியலுகரத்தை விவரிக்கிறது. ஒரு சொல்லின் இறுதியில், க், ச், ட், த், ப், ற் என்னும் 6 வல்லின மெய்களில் ஏதேனும் ஒன்றின் மீது ஏறி வரும் உகரம் குற்றியலுகரம் ஆகும். எனவே கு, சு, டு, து, பு, று என்னும் 6 வல்லின உகர எழுத்துக்களும் குறுகி ஒலிக்கும் இயல்புடையன.

குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்

குறுகி ஒலிக்கும் உகரம் என்பது பொருளாகும். குறில் உகரத்திற்கு ஒரு மாத்திரை அளவாகும். குற்றியலுகரம் ஆகும் போது உகரம் ஒரு மாத்திரைக்கும் குறைந்து ஒலிக்கும். வல்லின உகரத்திற்கு முன் வரும் எழுத்துக்களாக.

| | |
|---|---|
| தனி நெட்டெழுத்துக்கள் | 7 |
| ஆய்தம் | 1 |
| ஔ தவிர உயிர் | 11 |
| வல்லினம் | 6 |
| மெல்லினம் | 6 |
| வ தவிர இடையினம் | 5 |

மொத்தம் 36 எழுத்துக்கள் வரும். இவற்றில் ஏதேனும் ஒன்று அமைந்து தொடர்ந்து வல்லின உகரம் வந்தால் அது குற்றியலுகரமாக ஒலிக்கும் என்பார் நன்னூலார். இக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை,

1. உயிர்த் தொடர் குற்றியலுகரம் - உயிரெழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்

   எ.கா – வரகு (வர்அகு), அரசு (அர்அசு), அலகு (அல்அகு), அருகு (அர்உகு)
2. நெடிற்றொடர் குற்றியலுகரம் - நெடில் எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்.

   எ.கா – நாடு. காது, சோறு, யாது, பேசு
3. வன்றொடர் குற்றியலுகரம் - வல்லின எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்.

   எ.கா – எட்டு. பத்து, பாக்கு, பேச்சு, கோப்பு, போற்று
4. மென்றொடர் குற்றியலுகரம் - மெல்லின எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்.

   எ.கா – சங்கு, பஞ்சு, வண்டு, பந்து, செம்பு, என்று
5. இடைத்தொடர் குற்றியலுகரம் - இடையின எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்.

   எ.கா – சால்பு, மார்பு
6. ஆய்தத் தொடர் குற்றியலுகரம் - ஆய்த எழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரம் அமையும்.

   எ.கா – எ.்.கு, அ.்.து, க.்.சு


தொல்காப்பியர் ஓரிடத்தில் மொழிமுதல் குற்றியலுகரம் வரும் என்பார். எ.கா – நுந்தை

‘முருக்கு’ என்னும் சொல் முற்றியலுகரமாக ஒலிக்கும். இந்நிலையில் அது ஏவுதற்பொருளிலும், குற்றியலுகரமாக ஒலிக்கும் போது தின்பண்டப் பெயராகவும் வரும்.

ஓலி வேறுபாடும் பொருள் வேறுபாடும் புணர்ச்சி வேறுபாடும் வருவதால் குற்றியலுகரம் தனி எழுத்தாம் தன்மை பெறுபவை. இதனை உணர்ந்தே சார்பெழுத்தாக்கியுள்ளார் தொல்காப்பியர்.

**குறுக்கங்கள்**

எழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறுகி ஒலிப்பது குறுக்கம் ஆகும். இக்குறுக்கம் உயிரெழுத்துக்களிலும் மெய்யெழுத்துக்களிலும் ஆய்த எழுத்திலும் அமைவதுண்டு. உயரெழுத்துக்களில் இ, உ, ஐ, ஒள, ஆகிய நான்கும் குறுகி ஒலிக்கும். இவற்றில் இகரக்குறுக்கம் குறிறியலிகரம் என்றும் உகரக்குறுக்கம் குற்றியலுகரம் என்றும் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள ஐ, ஒள இரண்டும் குறுக்கம் என விவரிக்கப்படுகிறது. அந்த வகையில் ஐகாரம் குறுகி ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் என்றும் ஒளகாரம் குறுகி ஒலிப்பது ஒளகாரக் குறுக்கம் என்றும் வழங்கப்படுகின்றது. மெய்யெழுத்துக்களில் ‘ம்’ மட்டுமே குறுகி ஒலிக்கும். எனவே அது மகரக்குறுக்கம் எனப்படுகிறது. ஆய்த எழுத்து குறுகி ஒலிப்பது ஆய்தக் குறுக்கம் ஆகும். இதனை




என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம்

**தற்சுட்டு அளபுஒழி ஐம்மூவழியும்**
**நையும் ஒளவும் முதல் அற்று ஆகும்** (நன் : 95)

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கிறது. இவற்றை சான்றுகளுடன் அறிவது அவசியம்.

**ஐகாரக் குறுக்கம்:**

தன்னைக் குறித்தல். அளபெடுத்தல் என்னும் இரு இடங்களைத் தவிர **ஐ** என்னும் உயிர் நெட்டெழுத்து சொல்லின் முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும்பொழுது தனக்குரிய இரு மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிப்பது ஐகாரக் குறுக்கம் ஆகும்.

எ.கா – **ஐ**யம், இ**டை**யர், யா**னை**

தற்சுட்டு – ஆ ஈ ஊ ஏ ஒளநெடில்

அளபெடை- உரனசைஇ, வெளஉ

ஐகாரக் குறுக்கம் - 3 (சொல்லின் முதல், இடை, கடை)

**ஔகாரக் குறுக்கம்**

தன்னைக் குறித்தல், அளபெடுத்தல் என்னும் இரு இடங்களைத் தவிர **ஔ** என்னும் உயிர் நெட்டெழுத்து, சொல்லின் முதலில் வரும்பொழுது தனக்குரிய இரு மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும். அவ்வாறு குறைந்து ஒலிப்பது ஔகாரக் குறுக்கம் ஆகும். ஔகாரம் என்பது மொழி முதலில் தான் வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

எ.கா – வௌவால் (வவ்வால்), ஔவை (அவ்வை), ஔடதம் (அவ்டதம்)

ஔகாரக் குறுக்கம் - 1 (சொல்லின் முதலில் மட்டும்)

**மகரக் குறுக்கம்:**

செய்யுளில் லகர ளகரங்கள் முறையே னகர ணகரமாகத் திரியும். அவற்றிற்குப் பக்கத்தில் வரும் **ம்** தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். எனவே இது மகரக் குறுக்கம் எனப்படும்.

எ.கா – போன்ம், மருண்ம், வரும் வளவன்

மனம், பணம், தினம், அன்னம், கன்னம், வண்ணம் (தற்கால வழக்கு)

இவற்றிலுள்ள **ம்** குறுகி ஒலித்து மகரக் குறுக்கமாக அமைந்துள்ளது. மகரம் 3 இடங்களில் குறுகும்.

**ணன முன்னும் வஃகான் மிசையும்மக் குறுகும் (நன் : 96)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இக்குறுக்கத்தை அறியலாம்.

**ஆய்தக் குறுக்கம்**

**ல்,ள்** என்னும் எழுத்துக்கள் புணர்ச்சி இலக்கணத்தின்படி ஆய்த எழுத்தாகும். அவ்வாறு வரும் ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும். எனவே இது ஆய்தக் குறுக்கம் எனப்படும்.

எ.கா – அல் + திணை = அஃறிணை

முள் + தீது = முஃடீது

பல் + துளி = பஃறுளி

**லளஈற்று இயைபின்ஆம் ஆய்தம் அஃகும் (நன் : 97)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விளக்குகிறது. ஆய்தக் குறுக்கம் 2 ஆகும்.

**உருவம்**

தமிழ் எழுத்துக்களின் வரி வடிவம் பற்றிய இலக்கணம் ‘உருவம்’ எனப்படுகிறது.

எல்லா எழுத்துக்களும் தொன்று தொட்டு வழங்கப்படும் பல்வேறு வடிவங்களை உடையன. சிலவற்றுக்கு மட்டும் நன்னூலில் விளக்கம் தரப்பெற்றுள்ளன. எ கர, ஒ கர உயிர்களும் மெய்யெழுத்துக்களும் புள்ளி பெறும் வடிவம் உடையன.

1. எகர உயிர் புள்ளி பெறும் (எ – குறில்)
2. ஒகர உயிர் புள்ளி பெறும் (ஒ – குறில்)
3. 18 மெய்யும் புள்ளி பெறும் (க், ங், ச்,ஞ்……)
4. 18 மெய்களுடன் அகரம் சேரும் போது புள்ளி நீங்கி – உயிர் மெய் எழுத்தாகும்

   (க்+அ = க)
5. 18 மெய்களுடன் பிற உயிர்கள் சேரும் போது உருவ மாற்றங்கள் ஏற்படும்

   (க் + ஆ = கா, க் + இ = கி)

உருவம் என்பது வரிவடிவம் ஆகும்.

**தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு**
**எய்தும் எகர ஒகரமெய் புள்ளி (நன் : 98)**

என்னும் நூற்பா வாயிலாக எழுத்தின் உருவம் தொடர்பான விளக்கத்தைப் பெறலாம்.

முற்காலத்தில் புள்ளி பெற்ற வடிவம் குறிலாகவும் புள்ளி பெறாதன நெடிலாகவும் வழங்கப்பட்டன. இக்காலத்தில் புள்ளி பெறாத ஏ, ஓ குறிலாகவும் கீழ் கால்நீட்டியும் ( ஏ) சுழித்தும் (ஓ) வருபவை நெடிலாகவும் வழங்குகின்றன. உயிர் மெய்யில் ஒற்றைக் கொம்பு குறிலுக்கும் (கெ, பொ) இரட்டைக் கொம்பு நெடிலுக்கும் (கே, போ) வழங்கப்பட்டு வருகின்றன.

**மாத்திரை**

தமிழ் எழுத்துக்களை ஒலிக்கும் கால அளவை ‘மாத்திரை’ என்பர். இயல்பாகக் கண் இமைக்கும் நேரமும் கை நொடிக்கும் நேரமும் ஒரு மாத்திரை அளவாகும். இதனை,

**இயல்பு எழு மாந்தர் இமை நொடி மாத்திரை (நன் : 100)**

என்னும் நூற்பா விளக்குகிறது. உயிர்மெய்யின் இலக்கணம் கூறுமிடத்து (நன் : 89) மாத்திரை குறிப்பிடப்பட்டதால் இங்கு உயிர்மெய்க்கு மாத்திரை குறிப்பிடப்படவில்லை.

மாத்திரை என்பது எழுத்து ஒலிக்கும் கால அளவு (ஒலி அளவு) ஆகும்.

எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளை

**மூன்றுஉயிர் அளபுஇரண்டு ஆம்நெடில் ஒன்றே**

**குறிலோடு ஐஔக் குறுக்கம் ஒற்றளபு**

**அரைஒற்று இஉக் குறுக்கம் ஆய்தம்**

**கால்குறள் ம∴கான் ஆய்தம் மாத்திரை (நன் : 99)**

என நன்னூலார் விவரிக்கின்றார்.

| | | |
|---|---|---|
| குறில் | 1 | மாத்திரை |
| நெடில் | 2 | மாத்திரை |
| உயிரளபெடை | 3 | மாத்திரை |
| ஐகாரக் குறுக்கம் | 1 | மாத்திரை |
| ஔகாரக் குறுக்கம் | 1 | மாத்திரை |
| ஒற்றளபெடை | 1 | மாத்திரை |
| மெய்யெழுத்து | ½ | மாத்திரை |
| ஆய்த எழுத்து | ½ | மாத்திரை |
| குற்றியலிகரம் | ½ | மாத்திரை |
| குற்றியலுகரம் | ½ | மாத்திரை |
| மகரக் குறுக்கம் | ¼ | மாத்திரை |
| ஆய்தக் குறுக்கம் | ¼ | மாத்திரை |

**மாத்திரைக்குப் புறனடை**

இசை, விளி, பண்டமாற்று முதலியவற்றின் போது உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் தமக்குரிய மாத்திரையைக் கடந்து நீண்டு ஒலித்ததும் உண்டு.

**ஆவியம் ஒற்றும் அளவுஇறந்து இசைத்தலும்**

**இசைவிளி பண்டமாற்ற ஆதியின் (நன் : 101)**

என்னும் நூற்பா வாயிலாக மாத்திரை தொடர்பான புறனடைச் செய்தியினை அறியலாம்.

# அலகு – 2

## முதல் நிலை நன்னூல் பதவியல்

ஒரு மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களை விவரிக்கும் இலக்கணப் பகுதி முதல் நிலை எனப்படுகிறது.

நன்னூல் விதிப்படி 12 உயிர் எழுத்துக்களும் க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங் என்னும் 10 மெய்யெழுத்துகளும் சேர்ந்து 22 எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரும். மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்தோடு சேர்ந்து உயிர்மெய்யாக வருமேயன்றி தனியாக மொழி முதலில் வருவதில்லை.

எ.கா – அன்பு, ஆற்றல், இன்பம், ஈகை, உரல், ஊக்கம், எறும்பு, ஏணி, ஐந்து, ஒன்று, ஔவை, கனி, சனி, தாய், நிலை, புலி, மீன், வான், யாழ், ஞாயிறு, (அங்) ஙனம்.

**பன்னீர் உயிரும் கசதந பமவய**

**ஞஙஈர் ஐந்துஉயிர் மெய்யும் மொழிமுதல்** (நன் : 102)

எனும் நூற்பா மொழி முதல் நிலையை விவரிக்கின்றது.

**வகர உயிர்மெய்**

வ கரம் உ, ஊ, ஒ, ஓ அல்லாத 8 உயிரெழுத்துக்களோடும் சேர்ந்து (வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ) மொழிக்கு முதலில் வரும்)

எ.கா – வளம், வாய்மை, வினை, வீடு, வெற்றி, வேலை, வையம், வௌவால்

**உஊஒஓ அளவொடு வம்முதல்** (நன் : 103)

எனும் நூற்பா இதனை அறியத் தருகிறது.

**யகர உயிர்மெய்**

யகரம் அ, ஆ, உ, ஊ ஒ, ஔ எனும் 6 உயிர்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

எ.கா – யவனர், யாழ், யுகம், யூகம், யோகம், யௌவனம்

**அஆஉஊ ஓஔ யம்முதல்** (நன் : 104)

எனும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**ஞகர உயிர்மெய்**

ஞ கரம் அ, ஆ, எ, ஒ எனும் 4 உயிர்களோடும் சேர்ந்து மொழி முதலில் வரும்.

எ.கா – ஞமலி, ஞாலம், ஞெண்டு, ஞொள்கல்

**அஆஎ ஒவ்வொடும் ஆகும் ஞம்முதல்** **(நன் : 105)**

எனும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**ஙகர உயிர்மெய்**

ங கரம் சுட்டு, யாகார வினா, எகர வினா, எழுத்துகளுக்குப் பின்னர் அகரத்தோடு சேர்ந்து மொழி முதலாகும்.

எ.கா – அங் ஙனம், இங் ஙனம், உங் ஙனம், யாங் ஙனம், எங் ஙனம்

**சுட்டியா எகர வினாவழி அவ்வை**

**ஒட்டி ஙவ்வும் முதல்ஆ கும்மே** **(நன் : 106)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

வ. ய, ஞ, ங ஆகிய 4 மெய்களும் குறிப்பிட்ட சில உயிர்களோடு மட்டும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் என நன்னூல் குறிப்பிடுகின்றது. எனவே எஞ்சிய க, ச, த, ந, ப, ம எனும் 6 மெய்களும் 12 உயிர்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் என்பது அறியத்தக்கது.

**ககர உயிர்மெய்**

எ.கா - கனி, காய், கிளை, கீற்று, குடை, கூடை, கெண்டை, கேள்வி, கைதி, கொடை, கோடை, கௌதாரி.

**சகர உயிர்மெய்**

எ.கா - சந்தனம், சாந்து, சிறுமி, சீதை, சுத்தம், சூது, செய்தி, சேவை, சைவம், சொல், சோலை, சௌக்கியம்.

**தகர உயிர்மெய்**

எ.கா - தந்தை, தாய், திங்கள், தீர்வு, துணை, தூண், தென்னை, தேன், தையல், தொழில், தோழி, தௌவை

**நகர உயிர்மெய்**

எ.கா - நரி, நாய், நிலம், நுரை, நூல், நெல், நேயம், நைதல், நொடி, நோய், நௌவி

**பகர உயிர்மெய்**

எ.கா - பட்டு, பாட்டு, பிடி, பீடு, புகழ், பூண், பெண், பேண், பையன், பொன், போர், பௌவம்

**மகர உயிர்மெய்**

எ.கா - மண், மான், மின், மீன், முயல், மென்மை, மேன்மை, மைந்தன், மொழி, மோனை, மௌலி

(யவனர் = சோனகர், துருக்கர், யௌவனம் = இளமை, ஞமலி = நாய், ஞெண்டு = நண்டு, ஞொள்கல் = மெலிதல், சௌக்கியம் = சௌபாக்கியம், மிகுந்தவளம், தௌவை = தமக்கை)

**ஈற்று நிலை**

ஒரு மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களை விவரிக்கும் இலக்கணப் பகுதி ஈற்று நிலை எனப்படுகிறது. தனித்தும் மெய்யோடு சேர்ந்தும் வரும் 12 உயிர்களும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள எனும் 11 மெய்களும், குற்றியலுகரமும் சேர்ந்து 24 எழுத்துக்கள் மொழிக்கு இறுதியில் வரும்.

1. உயிர் தனித்து மொழி இறுதியில் வருதல்.

எ.கா - அம்மாஅ, அம்மாஆ, தோழீஇ, தோழீஈ, தூஉ, தூஊ

அன்பேஎ, அன்பேஏ, அன்பைஐ, போஒ, போஓ

இவற்றில் உயிர்க்குறில் அளபெடையில் ஈறாக வருவதைக் காணலாம்.

2. உயிரெழுத்துக்கள் மெய்யுடன் சேர்ந்து மொழி இறுதியில் வருதல்.

எ.கா - பல, பலா, புலி, தீ, புது, பூ, சே, பனை, நொ, போ, வௌ

3. மெய்யெழுத்துக்கள் தனியாக மொழி இறுதியில் வருதல்.

எ.கா - உரிஞ், பெண், வெரிந், வளம், தேன், மெய், வேர், வேல், எவ், யாழ், வாள்,

4. குற்றியலுகரம் மொழி இறுதியில் வருதல்

எ.கா – அளபு, நாடு, நாற்று, பஞ்சு, சால்பு, எஃகு

**ஆவி ஞணநமன யரலவ ழளமெய்**

**சாயும் உகரம் நாவாறும் ஈறே (நன் : 107)**

என்னும் நூற்பா மொழி ஈற்றுநிலையை விவரிக்கின்றது.

**சிறப்பு விதிகள்**

குறில் உயிர் ஐந்தும் அளபெடையில் மொழிக்கு ஈறாக வரும். எகரம் மெய்யோடு சேர்ந்து ஈறாக வராது. ஒகரம் நகர மெய்யோடு மட்டுமே சேர்ந்து ஈறாகும். ஔகாரம் க, வ எனும் இரு மெய்களோடு சேர்ந்து மட்டுமே ஈறாகும். (ஔகாரம் தனி உயிராக ஈறாகாது)

எ.கா - கௌ, வௌ

ஆ = பசுமாடு, ஊ = இறைச்சி, ஏ = அம்பு, ஐ = அழகு, தலைவன்,

ஓ = மதகு, சே = எருது, சேமரம், நொ = வருந்து, வௌ= கொள்ளையிடு,

உரிஞ் = உரிஞ்சுதல், வெரிந் = முதுகு, அவ் = அவை, கௌ = கவ்வு (வாயால் பற்று)

**குற்றுயிர் அளவின் ஈறான் எகரம்**

**மெய்யொடுஏ லாதுஒந் நவ்வொடு ஆம்ஔ**

**ககர வகரமொடு ஆகும் என்ப (நன் : 108)**

என்னும் நூற்பா மேற்குறித்த கருத்தினை விவரிக்கிறது.

**உயிர்மெய்யின் முதலும் ஈறும்**

மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலிக்கும் முறையே உயிர்மெய் எழுத்துக்களுக்கு முதலும் ஈறுமாகும். உயிர்மெய் எழுத்துக்களுக்கு மெய் முதல், உயிர் ஈறு அதாவது க, கா என்பனவற்றில் ககர மெய் ஒலித்த பின்னரே (க் + அ, க் + ஆ ) அகர, ஆகார உயிர்கள் ஒலிக்கின்றன என அறியலாம்.

கண்ணகி - இச்சொல் மெய்ம்முதல் சொல் ஆகும். இதில் உயிர் ஈற்றில் அமைந்துள்ளது. எனவே இது. மெய்ம்முதல், உயிரீற்றுச் சொல் ஆகும்.


**நின்ற நெறியே உயிர்மெய் முதல் ஈறே (நன் : 109)**

எனும் நூற்பா இதனை உணர்த்துகிறது. நின்ற நெறி என்பது மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒலித்து நிற்கும் முறையைக் குறிக்கும்.

## இடை நிலை

ஒரு சொல்லின் இடையில் இடம்பெறும் எழுத்துக்கள் தொடர்பான இலக்கணத்தை இடை நிலை என்றும் மெய்ம்மயக்கம் என்றும் கூறுவர். மொழியின் இடையில் மெய்யெழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று மயங்கி வருவதால் இடைநிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

க, ச, த, ப அல்லாத 14 மெய்களும் பிற மெய்களோடு சேர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகும். ர, ழ, அல்லாத 16 மெய்களும் இரட்டித்து வருவது உடனிலை மெய்ம்மயக்கமாகும். இவ்வகை மொழிகளின் இடையில் வரும் உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறை இல்லை. இம்மயக்கம் இரு வகைப்படும். இதனை,




என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம்.

வேற்றுநிலை மெய்ம்மயக்கம் = வெவ்வேறு மெய்கள் சேர்ந்து வருதல்

உடனிலை மெய்ம்மயக்கம் = தனக்கு முன் தான் நிற்றல் அதாவது இரட்டித்தல்

தனிமொழி = ஒரு சொல்,

புணர்மொழி = இரு சொற்கள் சேர்ந்த தொடர்

உயிரும் மெய்யும் மயங்குவதற்கு வரையறை இல்லாததால் மெய்ம்மயக்கம் மட்டுமே இடைநிலை எனும் பகுதியில் விவரிக்கப்படுகின்றது. இதனை,

**கசதப ஒழிந்துஈ ரேழன் கூட்டம்**
**மெய்ம்மைக்கு உடனிலை ரழஒழித்து ஈரெட்டு**
**ஆகும் இவ்விருபால் மயக்கும் மொழியிடை**
**மேவும் உயிர்மெய் மயக்கு அளவு இன்றே** **(நன் : 110)**

என நன்னூலார் விவரிக்கிறார். இதன்படி இருவகை மெய்ம்மயக்கங்களையும் விளங்கிக் கொள்வது அவசியம்.

**வேற்று நிலை மெய்ம்மயக்கம்**

மொழியின் இடையில் ஒரு மெய் எழுத்தின் பின் வேறு மெய் எழுத்து சேர்ந்து வருவதை வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பர். க்-ச்-த்-ப் என்னும் 4 மெய் எழுத்துகளுக்குப் பக்கத்தில் பிறமெய்கள் வருவதில்லை. அவை தவிர எஞ்சிய 14 எழுத்துக்களின் பின்னும் பிற மெய் எழுத்துக்கள் சேர்ந்து வரும்.

1. ஙகரத்தில், முன்னே ககரம் மயங்கும், வகரத்தின் முன்னே யகரம் மயங்கும்.

எ.கா - ங்க் - தங்கம், வ்ய் - தெவ்யாது

**ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே (நன் : 111)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

**2.** ஞகரத்தின் முன்னே சகரம், யகரம் இரண்டும் மயங்கும். நகரத்தின் முன்னே தகரம், யகரம் இரண்டும் மயங்கும்.

எ.கா - ஞ்ச் - பஞ்சு, ஞ்ய் -உரிஞ்யாது, ந்த் - பந்து, ந்ய் - வெரிந்யாது

**ஞநமுன் தம்இனம் யகரமொடு ஆகும். (நன் : 112)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

**3.** டகர, றகரங்களின் முன்னே ககரம், சகரம், பகரம் மூன்றும் மயங்கும்

எ.கா - ட்க் - வெட்கம், ட்ச் - மாட்சி, டப் - நடப்பு, ற்க் - கற்க, ற்ச் - முயற்சி, ற்ப் - கற்பு

**டறமுன் கசப மெய்யுடன் மயங்கும் (நன் : 113)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

**4.** ணகரத்தின் முன்னே ட, க, ச, ஞ, ப, ம, ய, வ எனும் 8 மெய்களும் மயங்கும்.

எ.கா - ண்ட் - வண்டு, ண்க் - உண்கும், ண்ச் - வெண்சோறு

ண்ஞ் - வெண்ஞாயிறு, ண்ப் - நண்பன், ண்ம் - வெண்மை, ண்ய் - பெண்யார்

ண்ச் - பெண்சிங்கம், ன்ற் - நன்று, ன்க் - நன்கு, ன்ச் - நன்செய், ன்ஞ் - பொன்ஞாண்

ன்ப் - அன்பு, ன்ம் - நன்மை, ன்ய் - பொன்யாழ், ன்வ் - பொன்வண்டு

**ணன முன் இனம்கச ஞபமய வவ்வரும் (நன் : 114)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

**5.** மகரத்தின் முன்பு பகரம், யகரம், வகரம் என்னும் மூன்று மெய்களும் மயங்கும்.

எ.கா – ம்ப் - நம்பு, ம்ய் - நல்லம்யான், ம்வ் - பணம்வலிது

**மம்முன் பயவ மயங்கும் என்ப (நன் : 115)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

**6.** யகரம், ரகரம், ழகரம் என்னும் மூன்று மெய்களின் முன்பு மொழிக்கு முதலில் வரும் க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ எனும் பத்து மெய்களும் மயங்கும்.

எ.கா – ய்க் - செய்க, ய்ச் - தாய்சேய், ய்ஞ் - தாய்ஞண்டு, ய்த் - செய்து

ய்ந் - செய்நர், ய்ப் - செய்பு, ய்ம் - வாய்மை, ய்வ் - வாய்வு

ர்க் - சேர்க்க, ர்ச் - யார்ச்செயல், ர்ஞ் - நேர்ஞெகிழி, ர்த் - நேர்தல்

ர்ந் - சேர்நர், ர்ப் - மார்பு, ர்ம் - நேர்மை, ர்ய் - போர்யானை

ர்வ் - ஆர்வம், ழ்க் - வாழ்க, ழ்ச் - வீழ்சிலை, ழ்ஞ் - வீழ்ஞாயிறு

ழ்த் - வாழ்தல், ழ்ந் - வாழ்நர், ழ்ப் - சூழ்ப, ழ்ம் - ஏழ்மை,

ழ்ய் - யாழ்யாது, ழ்வ் - வாழ்வு

யகரத்துடன் யரகம் மயங்குவது உடனிலை மெய்ம்மயக்கம் ஆகும். எனவே அது இங்கு விடுக்கப்பட்டுள்ளது. ஙகரம் மயங்குவதற்குச் சான்று இலக்கியங்களிலும் இல்லை. எனவே அதற்கு சான்று தரப்படவில்லை.

**யாழ முன்னர் மொழி முதல் மெய்வரும் (நன் : 116)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

7. லகர, ளகர மெய்களின் முன்னே க, ச, ப, வ, ய எனும் ஐந்து மெய்களும் மயங்கும்.

எ.கா – ல்க் - வெல்க, ல்ச் -வல்சி, ல்ப் - சால்பு, ல்வ் - செல்வம்,

ல்ய் - கொல்யானை, ள்க் - கொள்க, ள்ச் - நீள் சிறப்பு,

ள்ப் - கொள்வ, ள்வ் - கேள்வி, ள்ய் - வெள்யானை,

**வளமுன் கசப வயஒன் றும்மே (நன் : 117)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

**உடனிலை மெய்ம்மயக்கம்**

சொல்லின் இடையில் ஒரு மெய் எழுத்தின்பின், அதே எழுத்து சேர்ந்து வருவதை அதாவது இரட்டித்து வருவதை உடனிலை மெய்ம்மயக்கம் என்பர். ரகரம், ழகரம் என்னும் இரு மெய்யெழுத்துக்கள் தவிர எஞ்சிய 16 மெய்யெழுததுக்களும் தம்முள் தாம் சேர்ந்து வரும்.

எ.கா - க்க் - காக்கை, ங்ங் - அங்ஙனம், ச்ச் - பச்சை, ஞ்ஞ் - மஞ்ஞை

ட்ட் - பட்டு, ண்ண் - வண்ணம், த்த் - பத்து, ந்ந் - வெந்நீர், ப்ப் - அப்பா

ம்ம் - அம்மா, ய்ய் - மெய்யன், ல்ல் - பல்லி

வ்வ் - நவ்வி, ள்ள் - பள்ளம், ற்ற் - பற்று, ன்ன் - கன்னி,

**ரழ அல்லன தம்முன் தாம்உடன் நிலையும் (நன் : 118)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

**ஈரொற்று மயக்கம்**

உடனிலை மெய்ம்மயக்கத்தின் ஒரு பகுதியாக ஈரொற்று மயக்கம் அமைகிறது. இரு ஒற்று எழுத்துக்களைக் கொண்ட மயக்கம் ஆதலால் இது ஈரொற்று மயக்கம் ஆகும். ஒரே வகை ஒற்றெழுத்துக்கள் இரண்டு உடன்பட்டு மயங்கி நிற்பதால் இதுவும் உடனிலை மெய்ம்மயக்கம் ஆகும்.

ய, ர, ழ எனும் 3 மெய்யெழுத்துக்களின் முன் ச, த, ப, ங, ஞ, ந, ம எனும் 8 மெய்களும் இரண்டாம் புள்ளியுடைய எழுத்துக்களாகி மயங்கும். மொழியின் இடையில் ரகரமும் ழகரமும் தனிக் குற்றெழுத்தை அடுத்து சேர்ந்து வராது. இம்மயக்கத்திலுள்ள மூன்றும் மெய்யெழுத்துகளுள் முந்தைய இரண்டு (ஒற்று) பெற்ற தனி மெய்களாகவும் மூன்றாவது உயிர்மெய்யாகவும் அமையும்

மெய்கள் எட்டும் இரட்டித்தோ தம்தம் இனவெழுத்துக்களோடு சேர்ந்தோ மயங்கும். இது வேற்று நிலையும் உடனிலையும் கலந்த மயக்கமாகும். ரகரமும், ழகரமும் அர், அழ், அர்க்கு, அழ்க்கு என்றாற் போன்று குற்றொற்றாகிச் சொல்லாதல் இல்லை. (அர், இர் எனும் விகுதிகள் ஒட்டுச் சொற்களாதலால் இங்குக் கொள்ளப்படவில்லை)

எ.கா - ய்க்க் - வாய்க்கும், ய்ங்க் - வேய்ங்குறை, ய்ச்ச் - பாய்ச்சல்

ய்ஞ்ச் - வேய்ஞ்செடி, ய்த்த – பாய்த்து, ய்ந்த் - காய்ந்தது, ய்ப்ப – வாய்ப்பு

ய்ம்ப் - மொயம்பு

ர்க்க - ஈர்க்கு, ர்ங்க் - ஆர்ங்கிளை, ர்ச்ச் - உணர்ச்சி, ர்ஞ்ச் - கூர்ஞ்சிறை,

ர்த்த – பார்த்தான், ர்ந்த் - ஆர்ந்து

ர்ப்ப் - கார்ப்பு, ர்ம்ப் - ஈர்ம்புல்

ழ்ஞ்ச் - பாழ்ஞ்சாடி, ழ்த்த் - வாழ்த்து , ழ்ந்த் - வாழ்ந்தான்,

ழ்ப்ப் - காழ்ப்பு , ழ்ம்ப் - பாழ்ம்பதி

**யரழஒற் றின்முன் கசதப ஙஞநம**

**ஈர்ஒற்று ஆழ்ரழத் தனிக்குறில் அணையா (நன் : 119)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

**செய்யுளில் ஈரொற்று மயக்கம்**

செய்யுளில் லகர, ளகர, மெய்களின் திரிந்த மெய்களாகிய னகர, ணகர எழுத்துக்களின் முன் ஈற்றில் வரும் மகர மெய் தனது மாத்திரையில் குறுகி இரண்டாவது ஒற்றெழுத்தாகும்.

லகரம், ணகரமாகவும் லிகரம் ணகரமாகவும் திரியும். இம்மயக்கத்தில் முதலொற்றாக னகரம் அல்லது ணகரமும் இரண்டாவது ஒற்றாக மகரமும் அமையும்.

எ.கா - திசையறி மீகானும் போன்ம் (போலும்)

மயிலியன் மாதர் மருண்ம் (மருளும்)

**லளமெய் திரிந்த ணைமுன் மகரம்**

**நைந்து ஈர் ஒற்றுஆம் செய்யுள் உள்ளே. (நன் : 120)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது.

**முதல்நிலை, இடைநிலைகளுக்குப் புறனடை**

எழுத்துக்களின் பெயர்களைக் கூறுமிடத்து எழுத்துக்கள் சொல் முதலில் வருதல், இடையில் வருதல் என்று மேற்கூறப்பட்ட விதிகளிலிருந்து பிறழ்ந்தும் வரும் என அறிஞர் கூறுவர்.

எ.கா – ''டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்'' - இதில் சொல் மொழி முதலில் வராது என விலக்கப்பட்ட டகரம் முதலில் வந்துள்ளது.

''முயற்சியுள் அஆ அங்காப்பு உடைய'' - இதில் மயங்கத்தகாத ளகரமும் மகரமும் இடையில் மயங்கியுள்ளன.


**தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்**

**இம்முறை மாறியும் இயலும் என்ப (நன் : 121)**

எனும் நூற்பா இதனை விளக்குகிறது. இத்தகைய முதல்நிலை, ஈற்றுநிலை, இடைநிலைகளை மொழியியலார் ஒலியன்களின் வருகை என குறிப்பிடுவர்.

## போலி (எழுத்துப் போலி)

ஒரு சொல்லில் - ஓரெழுத்துக்குப் பதிலாக வேறோர் எழுத்து வந்தாலும் பொருள் மாறாத நிலைக்குப் போலி எனப் பெயர். இப்போலி சொல்லின் முதல், இடை, இறுதி எனும் மூன்று இடங்களிலும் அமைந்து வரும். அந்த வகையில் போலி முதல் போலி, இடைப் போலி, கடைப் போலி என மூன்று வகைப்படும். இதனை,




என்னும் அட்டவணை வாயிலாக விளங்கிக் கொள்ளலாம். இது எழுத்துக்களில் அமையும் போலி என்பதால் எழுத்துப்போலி எனவும் வழங்கப்படுகிறது.

எ.கா - முதல் போலி – மயில்> மையில்

இடைப்போலி – அரசு> அரைசு

கடைப்போலி – அகம் > அகன்

போலி = ஒத்து வருவது = உறழ்வு போல வருவது

**இறுதிப் போலி (கடைப்போலி)**

மொழியின் இறுதியில் அமையும் எழுத்துப்போலி கடைப்போலி எனப்படுகிறது. பால்பகா அஃறிணைப் பெயர்ச்சொற்கள் சிலவற்றின் இறுதியிலுள்ள மகர மெய் னகர மெய்யாகிப் போலியாக வழங்கும்.

பால்பகா அஃறிணைப் பெயர்ச்சொல் = ஒன்றன் பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவான பெயர்ச்சொற்கள்.

இறுதிப்போலி (கடைப்போலி) பெருவழக்காக அமைந்து வருவதால் அதனை முதலில் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

எ.கா - அகம் = அகன், கலம் = கலன், குணம் = குணன் , முகம் - முகன்

மகரத்திற்கு னகரம் போலியாக வந்துள்ளது. குறிலிணைக் கீழ் மட்டுமே இப்போலி வரும்.

**மகர இறுதி அ∴றிணைப் பெயரின்**

**னகரமொடு உறழா நடப்பன உளவே (நன் : 122)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கிறது.

**முதல் போலி**

மொழியின் முதலில் அமைந்து வரும் எழுத்துப்போலி முதல் போலி ஆகும். ஒரு மொழியின் முதலில் உள்ள அகரம் ச், ஞ், ய் என்னும் மூன்று மெய்களின் முன்னே வரும் பொழுது ஐகாரமாக மாறி போலியாக வரும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா - | பசல் | = | பைசல் |
| | மஞ்சு | = | மைஞ்சு |
| | மயில் | = | மையில் |

**இடைப் போலி**

மொழியின் இடையில் அமைந்து வரும் எழுத்துப்போலி இடைப்போலி ஆகும். ஒரு மொழியின் இடையில் உள்ள அகரம் ச், ஞ், ய் என்னும் மூன்று மெய்களின் முன்னே வரும் பொழுது ஐகாரமாக மாறி போலியாக வரும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா - | அரசு | = | அரைசு |
| | இலஞ்சி | = | இலைஞ்சி |
| | அரயர் | = | அரையர் |

**அஐ முதல் இடை ஒக்கும் சஞயமுன் (நன் : 123)**

எனும் நூற்பா வாயிலாக முதல், இடை போலியின் இலக்கணத்தை அறிந்து கொள்ளலாம். இதன் வாயிலாக அகரத்திற்கு ஐகாரம் போலி என்பது புலனாகிறது.

**நகரத்திற்கு ஞகரம் போலி**

சில சொற்களில் ஐகாரத்திற்கும் யகர மெய்க்கும் அடுத்து வரும் நகரத்திற்கு ஞகரம் போலியாக வரும் வழக்கும் உண்டு.

எ.கா – ஐந்நூறு = ஐஞ்நூறு, சேய்நலூர் = சேய்ஞலூர்

கைந்நின்ற = கைஞ்ஞின்ற, செய்ந்நின்ற = செய்ஞ்ஞின்ற

**ஆசான் யவ்வழி நவ்வொடு சில்வழி**

**ஞ கான் உறழும் என்மரும் உளரே (நன் : 124)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது. மொழியியலார் எழுத்துப் போலியை ஒலியன்களின் உறழ்ச்சி என குறிப்பிடுவர்.

**சந்தியக்கரம்**

ஓர் உயிர் நெடில், மேலும் நீண்டு ஒலிப்பது அளபெடை ஆகும். இருவேறு உயிர்கள் சேர்ந்து ஒலிப்பது கூட்டு உயிர் ஒலி ஆகும். இதுவே வடமொழியில் சந்தியக்கரம் என அழைக்கப்படுகிறது.

அகரத்தின் முன்னே இகரமோ யகர மெய்யோ வரின் ஐகாரம் போன்று ஒலிக்கும் . அகரத்தின் முன்னே உகரமோ வகர மெய்யோ வரின் ஔகாரம் போன்று ஒலிக்கும்.

எ.கா - ஐயர் = அஇயர், அய்யர் (ஐ = அஇ = அய்), வைத்தியன் > வயித்தியன்

ஔவை = அஉவை, அவ்வை (ஔ = அஉ = அவ்), கௌரி > கவுரி

சந்தியக்கரம் கூட்டெழுத்து என்பதற்கு சந்தி = கூட்டு , அக்கரம் = எழுத்து என விளக்கம் தரலாம். இதனை

**அம்முன் இகரம் யரகம் என்று இவை**

**எய்தின் ஐஒத்து இசைக்கும் அவ்வொடு**

**உவ்வும் வவ்வும் ஔஓர் அன்ன (நன் : 125)**

என்னும் நூற்பா தெளிவுபடுத்துகிறது. ஓர் உயிரினை ஒலித்த பிறகு மற்றோர் உயிரினை ஒலிக்கும் பொருட்டு நா முதலிய உறுப்புகள் மாறும் இடைக்காலத்த மிடற்று முயற்சி சந்தியக்கரம் எனப்படும். என்பது மு.வ. வின் கருத்தாகும். (மொழி நூல்: ப – 26)

**எழுத்துச் சாரியை**

எழுத்துக்களை ஒலிக்கவும் எழுதிக்காட்டவும் சேர்ந்து நிற்கும் சாரியைகளை எழுத்துச் சாரியை என்பர். பின்வரும் அட்டவணைப்படி சாரியைகள் அமையும்.

| எழுத்து வகை | அவை பெறும் சாரியை | வழங்கும் முறை |
|---|---|---|
| மெய்கள் க், ங், ச், ஞ் | அ | க, ங, ச, ஞ |
| உயிர் நெடில் (ஆ, ஊ,) | காரம் | ஆகாரம், ஊகாரம், |
| உயிர் நெடில் (ஐ, ஔ) | காரம், கான் | ஐகாரம். ஐ×கான், ஔகாரம், ஔ×கான் |
| உயிர் குறில (அ, இ) | காரம், கான், கரம் | அகாரம், அ.˙.கான், அகரம் இகாரம், இ.˙.கான், இகரம் |
| உயிர் மெய்க் குறில் (க, ம) | காரம், கான், கரம் | ககாரம், க.˙.கான், ககரம் மகாரம், ம.˙.கான், மகரம் |

குறிலுடன் கான் சாரியை சேரும்பொழுது இடையில் ஆய்தம் வரும்.

எழுத்துச் சாரியை எழுத்துக்களை ஒலிப்பதற்குத் துணையான வடிவம் ஆகும்.

எழுத்துக்களைச் சார்ந்து, விட்டிசைத்தலைத் தடுத்து, ஒலியியைபைத் தருவது சாரியை ஆகும்.

**மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்**

**ஐஔக் கானும் இருமைக் குறில் இவ்**

**இரண்டொரு கரமும்ஆம் சாரியை பெறும்பிற (நன் : 126)**

என எழுத்துச் சாரியைகளுக்கு நன்னூலார் இலக்கணம் தருகிறார்.

**எழுத்தியலுக்குப் புறனடை**

எழுத்துக்கள் சொற்கள் ஆனாலும் சொற்கள் இணைந்து தொடர் ஆனாலும் முன்பு குறிப்பிடப்பட்ட தமக்குரிய அகத்திலக்கணம் பத்தும் உடையன ஆகும். எழுத்துக்களின் இயல்புகள் சொல்லிலும் தொடரிலும் மாறாதவை என்பது இதன் கருத்தாகும். இதனை,

**மொழியாய்த் தொடரினும் முன்அனைத்து எழுத்தே (நன் : 127)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக அறியலாம்.

# பதவியல்


எழுத்தியலில் தனி எழுத்துக்களின் இயல்பு, தொடர் எழுத்துக்கள் சொற்களாக அமைதல் முதலிய செய்திகள் பதவியலில் இடம் பெற்றுள்ளன. பதத்தின் இலக்கணம் அதன் வகைகள் ஆகியன விரிவாக இப்பகுதியில் விளக்கம் பெறுகின்றன. பகுதிகளுள் பண்புச் சொற்களுக்குரியவை ஏனைய சொற்களின் பகுதிகளினின்று வேறுபட்ட வடிவ மாற்றங்களை (விகாரங்களை) ஏற்றுச் சொற்களை அமைக்கின்றன என்பது இவ்வியலில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வியல் வடமொழிச் சொற்கள் தமிழில் கலந்து வழங்குதலைக் கருதி, வடமொழியாக்கத்தை விரிவாகப் பேசுகின்றது. தமிழ்ச் சொல்லமைப்பு, வடசொற்கள் வழங்கும்முறை ஆகியவற்றை விளக்குவதே பதவியலாகும்.

**பதவியல்**

சொற்களின் அமைப்பிலக்கணத்தைக் கூறும் இயல் பதவியல் ஆகும். ஆசிரியர் தாமே இவ்வியலைப் படைத்துக் கொண்டமையால் பதம் என்ற வடசொல்லைப் பயன்படுத்துகிறார். உருபனியல் (Morphology) கருத்துக்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

**பதமும் வகையும்**

ஓர் எழுத்து தனித்தோ ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்தோ பொருளைத் தருமாயின் அது பதம் ஆகும். இது இரு வகைப்படும். அவை, பகாப்பதம், பகுபதம் என்பனவாகும். இதனை




என்னும் அட்டவணை வாயிலாக விளங்கிக்கொள்ளலாம்.

பதம் = சொல்,

பகாப்பதம் = பிரிக்க முடியாதது, பிரித்தால் பொருள் தராது.

பகுபதம் = பிரிக்கக் கூடியது, பிரித்தால் அதன் ஒவ்வொரு உருப்பும் பொருள் தரும்.

(பதத்தினை மொழியியலார் உருபன் (Morpheme) என குறிப்பிடுவர்) இதனை

**எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்**

**பதம்ஆம் அதுபகாப் பதம்பகு பதம் என**

**இருபால் ஆகி இயலும் என்ப (நன் : 128)**

என்னும் நூற்பா வாயிலாக விளங்கிக் கொள்ளலாம். பதம் என வழங்கப்படும் சொல்லுக்கு மொழி என்னும் சொல்லும் மாற்றாக அமைகிறது.

**ஓரெழுத்துச் சொல் (ஓரெழுத்து ஒரு மொழி)**

ஓரெழுத்து மட்டும் நின்று பொருள் தருவது ஓரெழுத்து ஒரு மொழி எனப்படும். நன்னூலார் குறிப்பிடும் ஓரெழுத்து ஒரு மொழிகள் 42 ஆகும். தற்காலத்தில் 70 எழுத்துக்குளுக்கு மேல் ஓரெழுத்து ஒருமொழியாக வருவதை அறியலாம். நன்னூலார் குறிப்பிடும் ஓரெழுத்து ஒருமொழியினை பின்வருமாறு இனம் காணலாம்.

1. நெட்டுயிர்களாலாகியவை - 6

   எ.கா – ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ

2. மகர வருக்க நெடில்களாகியவை - 6

   எ.கா – மா, மீ, மு, மே, மை, மோ

3. தகர வருக்க நெடில்களாகியவை - 5

   எ.கா – தா, தீ, தூ, தே, தை

4. பகர வருக்க நெடில்களாகியவை - 5

   எ.கா – பா, பூ, பே, பை, போ

5. நகர வருக்க நெடில்களாகியவை - 5

   எ.கா – நா, நீ, நே, நை, நோ

6. ககர வருக்க நெடில்களாகியவை - 4

   எ.கா - கூ, கை, கோ, கௌ

7. வகர வருக்க நெடில்களால் ஆகியவை - 4

   எ.கா – வா, வே, வை, வௌ

8. சகர வருக்க நெடில்களாகியவை - 4

   எ.கா – சா, சீ, சே, சோ

9. யாகார நெடில்களாகியவை - 1

   எ.கா - யா

நெட்டெழுத்துக்களால் ஆகியவை மொத்தம் - 40

குற்றெழுத்துக்களால் ஆகியவை - 2

எ.கா – நொ, து

மொத்தம் 42

இவ்வெழுத்துக்களை இந்நாற்பத்திரண்டையும் சிறப்பின என்று நன்னூல் கூறுகின்றது. எனவே பீ, கா, வீ போல்வனவற்றைச் சிறப்பில்லாதன என்று நந்நூல் கருதுகின்றது.

ஓரெழுத்து ஒரு மொழியினை ஓரெழுத்து மொழி என அழைப்பதும் உண்டு.

மொழி என்பது சொல் எனப்படும். இம்மொழி ஓரெழுத்து ஒருமொழி, தொடரெழுத்து மொழி என இருவகைப்படும். அவற்றை விளங்கிக் கொள்வது அவசியம்.

**ஓரெழுத்து மொழி**

ஒரு எழுத்து தனித்து நின்று பொருள் தந்தால் அது ஓரெழுத்து. மொழி ஆகும். இவை அனைத்தும் பகாப்பதமாக விளங்குகின்றன. இதனை

**உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்**
**கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்**
**ஆகும் மெடில்நொது ஆம்குறில் இரண்டோடு**
**ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின. (நன் : 129)**

என்னும் நூற்பா தெளிவாக விவரிக்கிறது. ஓரெழுத்து இயல்பதம் என்பது ஓரெழுத்தால் ஆகிய பதம் ஆகும்.

**தொடரெழுத்து மொழிகள்**

ஒன்றுக்கு மேற்பட்ட பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடரெழுத்து மொழி எனப்படும். இம்மொழி பகாப்பதமாகவும் பகுபதமாகவும் அமையும். பகாப்பதத் தொடரெழுத்து மொழிகள் இரண்டு முதல் ஏழு எழுத்துக்கள் வரையும் பகுபதத் தொடரெழுத்து மொழிகள் இரண்டு முதல் ஒன்பது எழுத்துக்கள் வரையும் தொடர்ந்து அமையும்.

எ.கா – அன்பு, பண்பு, உழைப்பு, திங்கள், – இவை பகாப்பதமாக வந்த தொடர்மொழி.

காடன், அறிஞன், நன்மை, - இவை பகுபதமாக வந்த தொடர்மொழி.


**பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்**

**எழுத்துஈ றாகத் தொடரும் என்ப (நன் : 130)**

என்னும் நூற்பா வாயிலாக ஓரெழுத்து ஒருமொழி தொடரெழுத்து மொழி ஆகியவற்றின் இயல்பினை விறங்கிக் கொள்ளலாம்.

**பகாப்பதம்**

பிரித்தால் பொருள் தராதனவும் முற்காலந்தொட்டு காரணமின்றி இடுகுறியாக ஒரே உறுப்பாக வழங்குவனவுமாகிய சொற்களே பகாப்பதங்களாகும் பகாப்பதம் நான்கு வகைப்படும். அவை, பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப் பகாப்பதம், உரிப்பகாப்பதம்.




என்னும் அட்டவணை பகாப்பதத்தின் வகைகளை விவரிக்கின்றது. இவற்றை எடுத்துக்காட்டுகள் வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

எ.கா - பெயர்ப்பகாப்பதம் - நிலம், மலை

வினைப்பகாப்பதம் - வா, போ

இடைப்பகாப்பதம் - மன், கொல்

உரிப்பகாப்பதம் - உறு, நனி


மொழியியலார் கூறும் உருபன் (Morpheme) பகாப்பதத்துடன் தொடர்புடையது. பிரிக்கவியலாத மிகச் சிறிய, பொருள் தரும் ஒலிவடிவமே உருபன் எனப்படும்.

**பகுப்பால் பயனற்று இடுகுறி ஆகி**
**முன்னே ஒன்றாய் முடிந்து இயல் கின்ற**
**பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம் (நன் : 131)**

என்னும் நூற்பா வாயிலாக பகாபதத்தினை விளங்கிக் கொள்ளலாம்.

**பகுபதம்**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் அறுவகைப் பெயர்ச் சொற்களும் காலத்தை உணர்த்தும் வினைச் சொற்களும் பகுபதங்களாகும். பிரித்தால் பொருள் தரும் இயல்புடையது. பகுபதங்கள் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும். வினைப்பகுப்பதம் தெரிநிலை வினைப்பகுபதம், குறிப்பு வினைப்பகுப்பதம் என இரு வகையாகும். வினையாலணையும் பெயர்களும் பகுபதங்களே.




எனும் அட்டவணை வாயிலாக பகுப்பதத்தின் வகைகளை அறியலாம்.

தெரிநிலை வினை என்பது காலமும் செயல் தன்மையும் வெளிப்படையாகத் தெரியும்.

குறிப்பு வினை என்பது காலமும் செயல் தன்மையும் குறிப்பாகத் தெரியும்.

வினையாலணையும் பெயர் என்பது வினையடியாகத் தோன்றும் பெயர். வினையின் பண்பான காலம் காட்டுதலும் பெயரின் பண்பான பொருள் உணர்த்துதலும் இணைந்து வருவதாகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா - **பெயர் -** | பொருட்பெயர்ப் பகுபதம் | - | தலைவர் |
| | இடப்பெயர்ப் பகுபதம் | - | ஊரன் |
| | காலப்பெயர்ப் பகுபதம் | - | சனியன் |
| | சினைப் பெயர்ப் பகுபதம் | - | பல்லன் |
| | குணப் பெயர்ப் பகுபதம் | - | கறுப்பன் |
| | தொழிற்பெயர்ப் பகுபதம் | - | கொல்லன் |
| **வினை** - | தெரிநிலை வினைப் பகுபதம் | - | பார்த்தான் |
| | குறிப்பு வினைப் பகுபதம் | - | கரியன் |

**பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலின்**

**வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே (நன் : 132)**

என்னும் நூற்பா பகுபத்ததை விவரிக்கின்றது.

**பகுபத உறுப்புகள்**

பகுபதத்தின் பல்வேறு சொல் பிரிவுகள் அதன் உறுப்புக்கள் ஆகும். பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனும் ஆறும் பகுபத உறுப்புகள் ஆகும். இவற்றுள் பொருத்தமானவற்றைச் சேர்த்து பகுபதங்கள் அமையும்.

பகுபதங்களில் இந்த ஆறு உறுப்புக்களும் வரவேண்டும் என்பதில்லை. எனினும் பகுதி விகுதி ஆகிய இரண்டும் கண்டிப்பாக வருதல் வேண்டும். இவ்விரண்டுமின்றிப் பகுபதங்கள் அமையாது.

பகுதி - முதல்நிலை, அதாவது சொல்லின் முதலில் அமைவது

விகுதி - ஈற்றுநிலை, அதாவது சொல்லின் இறுதியில் அமைவது

இடைநிலை - பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் அமைவது

சாரியை - இடைநிலையைச் சார்ந்து விகுதியைப் பிளவின்றி இயைபு படுத்துவது. பகுபதங்களில் பெரும்பாலும் அன் எனும் இடைச்சொல் சாரியையாக வரும்.

சந்தி - பகுபத உறுப்புகள் ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்ப்பது. பெரும்பாலும் பகுதியை அடுத்து மெய்யெழுத்து மிகுந்து வருவது.

விகாரம் - சந்தியால் எழுத்துக்கள் மாறுவது விகாரம். பிற உறுப்புகளிலும் விகாரம் அமையும். இது திரிபு எனப்படும்.

பகுதி என்பத அகராதிப் பொருளையும் விகுதியையும் இடைநிலையையும் இலக்கணப் பொருளையும் உணர்த்தும்.

அகராதிப் பொருள் என்பது அகராதியில் இடம் பெறும் பொருள் ஆகும்.

எ.கா – நிலம் = பூமி, மண்,

இலக்கணப்பொருள் என்பது திணை பால், எண், காலம் முதலிய இலக்கணக் கூறுகளை உணர்த்தும் பொருள் ஆகும். சாரியை சந்தி, விகாரம் ஆகிய மூன்றும் பகுபத உறுப்புகள் சேரும்பொழுது ஏற்படும் ஒலி இயைபு வடிவங்கள் ஆகும்.

**ஒலி இயைபு வடிவங்கள்**

எ.கா -

செல்க - செல் + க, - (பகுதி + விகுதி)

நெய்தான் - நெய் + த் + ஆன், - ( பகுதி + இடைநிலை + விகுதி)

உண்டனன் - உண் + ட் + அன் + அன்

- பகுதி + இடைநிலை + சாரியை + விகுதி

நடித்தனர் - நடி + த் + த் + அன் + அர்

- பகுதி + சந்தி + இடைநிலை + சாரியை + விகுதி

நடந்தனன் - நட + த்(ந்) + த் + அன் + அன் - பகுதி + சந்தி (விகாரம்)

+ இடைநிலை + சாரியை + விகுதி

வருகின்றான் - வா (வரு) + கின்று + ஆன்

பகுதி (விகாரம்) + இடைநிலை + விகுதி

நடந்தனன், வருகின்றான் என்பனவற்றில் முறையே சந்தியால் தோன்றிய தகரம் நகரமாகவும் வா என்னும் பகுதி வரு எனவும் மாறுவது விகாரமாகும். மொழியியலார் இப் பகுதியை வேர்ச்சொல் என்பர்.

**பகுதி விகுதி இடைநிலை சாரியை**

**சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை**


**முன்னிப் புணர்ப்ப முடியும்எப் பதங்களும் (நன் : 133)**

என்னும் நூற்பா பகுபத உறுப்புகளை விவரிக்கின்றது.

**பகுதி**

**பகுதியின் இலக்கணம்**

பகுபதத்தின் முதல் நிலையாக வரும். பகாப்பதமாக இருக்கும். கட்டளைப் பொருளில் அமைந்திருக்கும். அடிச்சொல் அல்லது வேர்ச்சொல் எனப்படும். சொல்லின் முழுப்பொருளையும் தாங்கி நிற்கும். பகாப்பதம் போன்று பகுதியும் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.



என்னும் அட்டவணை வாயிலாக பகுதியின் வகைகளை அறியலாம்.

| | | |
|---|---|---|
| பெயர்ப்பகுதி | - | கண் (கண்ணன்) |
| வினைப்பகுதி | - | நட (நடந்தான்) |
| இடைப்பகுதி | - | போல் (போன்றது) |
| உரிப்பகுதி | - | கடி (கடியன்) |

**தத்தம்**
**பகாப்பதங்களே ஆகும்.** **(நன் : 134)**

என்னும் நூற்பா பகுதியின் இயல்பை விவரிக்கின்றது.

மொழியியலார் குறிப்பிடும் அடிச்சொல் (stem) பகுதியுடன் தொடர்புடையது.

**பண்புப்பகுதி**

பண்புப் சொற்களும் அவற்றிற்கு எதிர்ச் சொற்களும் பகுக்க முடியாத பகுதிகளாக அமையும். இப்பகாநிலைப் பகுதிகள் பண்பப் பெயர்கள் எனவும் வழங்கப்படும்.

எ.கா - செம்மை. சிறுமை, சேய்மை, தீமை,
வெம்மை, புதுமை, மென்மை, மேன்மை,
திண்மை, உண்மை, நுண்மை

ஆகியனவும் இவற்றுக்கு எதிர்ச்சொற்களும் இவை தவிர்த்த பிற சொற்களும் பண்புச் சொற்களின் பகாநிலைப் பகுதிகளாகும்.

**பண்புச் சொற்களின் எதிர்ச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| செம்மை × வெண்மை, கருமை, பசுமை | | சிறுமை × பெருமை, |
| சேய்மை × அண்மை | தீமை × நன்மை | வெம்மை × தண்மை |
| புதுமை × பழமை | மென்மை × வன்மை | மேன்மை × கீழ்மை |
| திண்மை × நொய்மை | உண்மை × பொய்மை | நுண்மை × பருமை |

பிறசொற்களாக மடமை, புலமை, இளமை, முதுமை, குறுமை, நெடுமை, வெறுமை, அருமை, கடுமை, எளிமை முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

செங்கரும்பு = செம்மை + கரும்பு இதில் செம்மை என்பது பகுதியாகும்.

சிற்றூர் = சிறுமை + ஊர் இதில் சிறுமை என்பது பகுதியாகும்.

மேற்குறிப்பிட்டவற்றில் மை விகுதியை தனியாக பிரிக்கக் கூடாது. மாறாக பகாப்பதமாக கொள்ள வேண்டும் என நன்னூல் குறிப்பிடுகிறது.

எ.கா - செம்மை முதலியவற்றைச் செம் (பகுதி) + மை (விகுதி) என பிரிக்கக் கூடாது.

செம்மை என பகாப்பதமாகவே இருத்தல் வேண்டும்.

**செம்மை சிறுமை சேய்மை தீமை**

**வெம்மை புதுமை மென்மை மேன்மை**

**திண்மை உண்மை நுண்மை இவற்றுஎதிர்**

**இன்னவம் பண்பின் பகாநிலைப் பதமே** (நன் : 135)

என்னும் நூற்பா மேற்குறித்த கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதைக் காணலாம்.

**பண்புப் பகுதி அடையும் விகாரங்கள்**

பண்புச் சொற்களின் பகுதிகள் வடிவ மாற்றம் அடையும். இது விகாரம் எனப்படும். சொல்லின் இறுதியிலுள்ள மை நீங்குதல். இடையிலுள்ள உகரம் இகரமாக மாறுதல், முதலில் நின்ற குறில் நெடிலாக மாறுதல், முதலில் நின்ற அகரம் ஐகாரமாக மாறுதல், இடையிலுள்ள மெய் இரட்டித்தல் மையீற்றுக்கு முன்னின்று மெய் வேறொரு மெய்யாக மாறுதல். வருகின்ற வல்லெழுத்துக்கு இனமாக மெல்லெழுத்து மிகுதல் இவை போன்ற பிறவும் பண்புச் சொற்களுக்குரிய விகார இயல்புகளாகும்.

எ.கா

| | | | |
|---|---|---|---|
| சிறுபயறு | = | சிறுமை + பயிறு | - மையீறு போதல் |
| கரியன் | = | கருமை + அன் | - மையீறு போதல், இடை உகரம் இகரமாதல் |
| பாசிலை | = | பசுமை + இலை | - மையீறு போதல், ஆதி நீடல் (அகரம் ஆகாரமாதல்) |
| பைந்தமிழ் | = | பசுமை + தமிழ் | - மையீறு போதல், அடி அகரம் ஐகாரமாதல், இனம் மிகல் |
| குற்றி | = | குறுமை + இ | - மையீறு போதல், ஒற்று இரட்டல் |
| செய்யன் | = | செம்மை + அன் | - மையீறு போய், மையீற்றுக்கு முன்னின்ற மெய் திரிதல் |

**ஈறு போல் இடை உகரம் இய்யாதல்**

**ஆதிநீடல் அடி அகரம் ஐயாதல்**

**தன்ஒற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்**

**இனம்மிகல் இணையவும் பண்பிற்கு இயல்பே** (நன் : 136)

என்னும் நூற்பா பண்புப்பெயர் விகாரத்தின் இலக்கணத்தை எடுத்தியம்புகிறது.

**தெரிநிலை வினைப்பகுதி**

**செய் வாய்ப்பாட்டுப் பகுதி**

தெரிநிலை வினைச் சொற்கள் அனைத்திலும் ஏவல் வினை முற்றுக்கள் பகுதிகளாக அமையும். ஏவல் வினைமுற்றுக்கள் செய் எனும் வாய்ப்பாட்டில் அமைந்து வரும்.

நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு எனும் இருபத்து மூன்று ஈறுகளைக் கொண்ட இவை போன்ற சொற்கள் யாவும் செய் எனும் வாய்ப்பாட்டில் அமைந்து வரும்.

இருபத்து நான்கு மொழி இறுதி எழுத்துக்களுள், அளபெடையில் மட்டுமே இறுதியில் வரும். எகரம் நீங்கிய இருபத்து மூன்று ஈறுகளும் இங்குச் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விருபத்து மூன்று ஈறுகளிலும் தெரிநிலை வினைப்பகுதிகள் வரும்.

தெரிநிலை வினைச் சொற்களின் பகுதிகள் யாவும் 'செய் எனும் வாய்ப்பாட்டில் அமையும். ஏவல் ஒருமை வினைக்கும் இதுவே வாய்ப்பாடு ஆகும். எனவே

**செய்என் ஏவல் வினைப் பகாப்பதமே (நன் : 137)**

என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

நட, வா, முடி, அஃகு என்பன இருபத்து மூன்று ஈற்றுகளுக்கும் எடுத்துக்காட்டாகும்.

எ.கா –

| ஏவல் வினை | தெரிநிலை வினைகளின் பகுதி |
|---|---|
| நட | நட + ப் + ப் + ஆன் |
| வா | வரு + வ் + ஆன் |
| மடி | மடி + வ் + ஆன் |
| சீ | சீ + ப் + ப் + ஆன் |
| விடு | விடு + வ் + ஆன் |
| நொ | நொ + வ் + ஆன் |

இவ்வாறே பிற எடுத்துக்காட்டுகளும் அமைந்து வரும்.

**நடவா மடிசீ விடுக வேவை**

**நொப்போ வெள உரிஞ் உண்பொருந் திரும்தின்**

**தேய்ப்பார் செவ்வல் வாழ்கேள் அஃகு என்று**

**எய்திய இருபான் மூன்று ஆம் ஈற்றவும்**

**செய்என் ஏவல் வினைப்பகாப் பதமே (நன் : 137)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விளங்கிக்கொள்ளலாம்.

**செய்வி, செய்விப்பி வாய்ப்பாட்டு பகுதிகள்**

‘செய் எனும் வாய்ப்பாட்டு ஏவல் வினைக்குப் பின்பு ‘வி அல்லது ‘பி விகுதி இணைவது செய்வி, செய்விப்பி எனும் வாய்ப்பாட்டு ஏவல் வினையாகும். ‘செய் என்னும் வாய்ப்பாட்டு ஏவல் வினைக்குப் பின்னா் ‘வி, ‘பி விகுதிகள் இணைந்தோ அவற்றுள் ஒன்று இரட்டித்தோ வருவது ஈரேவல் வினையாகும். இவை வினைகளுக்குப் பகுதிகளாக அமையும்.

‘வி விகுதி இரட்டிக்காது ஆயின் ‘பி விகுதி இரட்டிக்கும்.

செய், செய்வி, செய்விப்பி மூன்றும் ஒருமையில் வழங்கும் பகுதியாகும்.

எ.கா -

வருவி, நடப்பி – இது செய்வி எனும் வாய்ப்பாட்டு ஏவல்

வருவிப்பி. நடப்பிப்பி – இது செய்விப்பி எனும் வாய்ப்பாட்டு ஏவல்

வருவி + த் + த் + ஆன், நடப்பி + த் + த் + ஆன்

வருவிப்பி + த் + த் + ஆன், நடப்பிப்பி + த் + த் + ஆன்

இவைபோன்று பிற தெரிநிலை வினைகளின் பகுதிகளையும் அமைத்துக் கொள்ளலாம்.

**செய்என் வினைவழி விப்பி தனிவரின்**

**செய்விஎன் ஏவல் இணையின் ஈரேவல் (நன் : 138)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வினைப் பகுதிக்குப் புறனடை**

‘செய் எனும் ஏவல் வினை ‘செய்வி ‘செய்விப்பி எனும் ஏவல் வினைகளாக வேறுபடுதல் போன்று தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய பிற தெரிநிலை வினைகளில் இடம்பெறும் நட, வா, மடி, அ ஃ கு என முன்னர்க் கூறப்பட்ட பகுதிகள் வேறுபடுதல் என்பது இலக்கண வரம்பிற்குட்பட்ட விதியே ஆகும்.

எ.கா

மடிந்தான் (மடி - பகுதி), மடிவித்தான் (மடிவி - பகுதி )

செய்வித்தான் (நட – பகுதி) - செய்

நடப்பித்தான் ( நடப்பி – பகுதி) - செய்வி

நடப்பிப்பித்தான் (நடப்பிப்பி – பகுதி) - செய்விப்பி

நட – நடத்து (நடத்தினான்), காண் - காட்டு (காட்டினான்)

உருள் - உருட்டு (உருட்டினான்) உண் - ஊட்டு (ஊட்டினான்)

தேறு - தேற்று (தேற்றினான்) முதலிய வேறுபாடுகளையும் கவனத்தில் கொள்க.

**விளம்பிய பகுதி வேறு ஆதலும் விதியே (நன் : 139)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

### விகுதி

வினைச் சொற்களின் இறுதியில் அமையும் சொல் பகுதிக்கு விகுதி எனப் பெயர். இவ்விகுதிகள் பின்வருமாறு அமையும்.

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார்; அ, ஆ, கு, டு, து, று; என், ஏன், அல், அன், அம், ஆம், எம், ஏம்; கும், டும், தும், றும்; ஐ, ஆய், இ; மின், இர், ஈர், இயர், க, ய, உம் எனும் முப்பத்தேழும் இவை போல்வன பிறவும் வினைச் சொற்களின் விகுதிகளாகும். இவ்விதிகளுள் சில பெயர்ச் சொற்களிலும் அமைந்து வரும்.

எ.கா

### தெரிநிலை வினை

| | | | |
|---|---|---|---|
| அன், ஆன் | - | (கண்டனன், கண்டான்) | - ஆண்பாற் படர்க்கை |
| அள், ஆள் | - | (கண்டனள், கண்டாள்) | - பெண்பாற் படர்க்கை |
| அர், ஆர் | - | (கண்டனர், கண்டார்) | - பலர்பாற் படர்க்கை |
| ப், மார் | - | (காண்ப, காண்மார்) | - பலர்பாற் படர்க்கை |
| அ, ஆ | - | (கண்டன, காணா) | - பலவின்பாற் படர்க்கை |
| கு, டு, து, று | - | (காண்கு, காண்டு, நடந்து, வந்துற்று) - தன்மை | |
| என், ஏன், | - | (கண்டனன், கண்டேன்) | - தன்மை ஒருமை |
| அள் அன் | - | (காண்பள், காண்பன்) | - தன்மை ஒருமை |
| அம், ஆம், | - | (கண்டனம், காண்பாம்,) | - தன்மை பன்மை |
| எம், ஏம், ஓம், | - | (கண்டெனம், காண்பேம், காண்போம்) - தன்மை பன்மை | |
| கும், டும், தும், றும் | - | ( காண்கும், காண்டும், காணுதும், சேறும்) - தன்மை பன்மை | |
| ஐ, ஆய், இ | - | கண்டனை, கண்டாய், காண்டி - முன்னிலை ஒருமை | |

| | | |
|---|---|---|
| மின், இர், ஈர் | - | காண்மின், காண்டனீா், கண்டீா்- முன்னிலை பன்மை |
| இயர், க, ய | - | காணியர், காண்க, வாழிய - வியங்கோள் வினைமுற்று |
| உம் | - | நடக்கும் - செய்யும் எனும் வாய்ப்பாட்டு வினை |

**குறிப்பட்ட விகுதிகளுள் சில குறிப்பு வினைகளிலும் வரும்.**

எ.கா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அன் | - | கரியன் | ஆன் | - | கரியான் |
| அள் | - | கரியள் | ஆள் | - | கரியாள் |
| அர் | - | கரியர் | ஆர் | - | கரியார் |
| து | - | கரிது | அ | - | கரிய (ன) |
| று | - | அற்று | டு | - | உண்டு |
| என் | - | கரியென் | ஏன் | - | கரியேன் |
| அம் | - | கரியம் | ஆம் | - | கரியாம் |
| எம் | - | கரியெம் | ஏம் | - | கரியேம் |
| ஓம் | - | கரியோம் | ஆய் | - | கரியாய் |
| ஐ | - | கரியை | இ | - | பொன்னி |
| இர் | - | கரியிர் | ஈர் | - | கரியீர் |

**சில விகுதிகள் பெயர்ச் சொற்களிலும் வரும்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அன் | - | பாண்டியன் | ஆன் | - | நாட்டான் |
| அள் | - | அவள் | ஆள் | - | பெண்ணாள் |
| அர் | - | அவர் | ஆர் | - | நன்னூலார் |
| மார் | - | அண்ணன்மார் | து | - | அது |
| ஐ | - | அவை | இ | - | நல்லி |

இவ்விகுதிகள் தவிர பிற விகுதிகளும் தொழிற்பெயர், பண்புப்பெயர் முதலியவற்றில் வரும்.

**தொழிற்பெயர்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தல் | - நடத்தல் | கை | - கொள்ளை | வை | - பார்வை |
| கு | - போக்கு | பு | - இருப்பு | உ | - வரவு |
| தி | - செய்தி | சி | - முயற்சி | வி | - கல்வி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள் | - செய்யுள் | காடு | - சாக்காடு | பாடு | - கூப்பாடு |
| மை | - உண்மை | இல் | - எழில் | அல் | - ஆடல் |
| அம் | - ஆட்டம் | | | | |

**பண்புப் பெயர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மை | - தன்மை | ஐ | - தொல்லை | சி | - மாட்சி |
| பு | - மாண்பு | உ | - மழவு | பம் | - திட்பம் |

**ஒன்றுக்கு மேற்பட்ட பொருளில் வருவனவும் உண்டு**


| | | | |
|---|---|---|---|
| து | - வருது | - | தன்மை ஒருமை |
| வந்து | - வினையெச்சம் | | |
| வருகிறது | - ஒன்றன்பால் படர்க்கை | | |
| வ | - வருகின்றன | - | பலவின்பால் முற்று |
| வர | - வினையெச்சம் | | |
| வந்த | - பெயரெச்சம் | | |

**அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்**
**அஆ குடுதுறு என்ஏன் அல்அன்**
**அம்ஆம் எம்ஏம் ஓம்ஓடு உம்ஊர்**
**கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்**
**இயர் கயஉம் என்பவும் பிறவும்**
**வினையும் விகுதி பெயரினும் சிலவே (நன் : 140)**

என்னும் நூற்பா விகுதியின் இயல்பினை விவரிக்கின்றது.

**5. இடைநிலை**

இடைநிலைகள் பெரும்பாலும் காலம் காட்டும் இயல்புடையவையாக அமைந்திருக்கும். பெயர் சொற்களில் அமைந்துவரும் இடைநிலை காலமட் காட்டுவதில்லை. பகுபத உறுப்புக்களில் சந்திக்கும் சாரியைக்கும் இடையில் அமைந்து வரும். சந்தி, சாரியைகள் இல்லாத போது பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் அமைந்து வரும். இப்பண்புகளின் அடிப்படையில் இடைநிலைகளை மூன்று வகைப்படுத்தலாம். அவை, பெயர் இடைநிலை, வினை இடைநிலை, கால இடைநிலை என்பனவாகும். இக்கால இடைநிலை இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூவகைப்படும். இதனை




என்னும் அட்டவணை வாயிலாக அறியலாம்.

**பெயர் இடைநிலை**

பெயர்ச்சொல் அதாவது வினையாலணையும் பெயரல்லாத பெயர்ப்பகுபதங்களில் பகுதி, விகுதி எனும் இரண்டையும் பிரித்த பின்னர், இடையில் எஞ்சி நிற்பதைப் பெயர் இடைநிலை என குறிப்பிடலாம். இத்தகைய பெயர்ப் பகுபதங்களின் இடைநிலையில் அமைந்திருக்கும் இடைநிலைகளே பெயர் இடைநிலைகள் ஆகும்.

எ.கா - அறி + ஞ் + அன், இளை + ஞ் + அர் - ஞகர இடைநிலை

நடத்து + ந் + அர், ஓட்டு + ந் + நர் - நகர இடைநிலை

இடை + ச் + சி, புலை + ச் + சி - சகர இடைநிலை

இவை போன்று பிற பெயர்ப்பகுபதங்களிலும் இடைநிலைகளில் அமையும்.

**இலக்கியம் கண்டுஅதற்கு இலக்கணம் இயம்பலின்**
**பகுதி விகுதி பகுத்து இடை நின்றதை**
**வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனலே (நன் : 141)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வினை இடைநிலை**

தெரிநிலை வினைச் சொற்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் காலத்தைக் காட்டும் இடைநிலை வரும். ஆயினும் வினைச் சொற்களில் காலம் காட்டும் இடைநிலை வராது என்பது குறிப்பிடத் தக்கது.

எ.கா – வெல்வான் = வெல் + வ் + ஆன், நின்றான் = நில்(நின்) + ற் + ஆன்

இவற்றில் வ் எதிர்காலத்தையும், ற் இறந்த காலத்தையும் காட்டும் இடைநிலைகள் ஆகும்.

**இறந்தகால இடைநிலை**

த், ட், ற், இன் ஆகியவை ஐம்பால் மூவிட வினைச் சொற்களில் அமைந்து இறந்த காலத்தைக் காட்டும். எனவே இவை இறந்தகால இடைநிலைகள் ஆகும்.

எ.கா – வை + த் + த் + ஆன், (வைத்தான்)   காண்(கண்) + ட் + ஆன், (கண்டான்)

பேசு +இன் +ஆன் (பேசினான்)   கொல்(ன்) + ற் + ஆன், (கொன்றான்)

இவற்றில் இறந்தகால இடைநிலைகள் வந்துள்ளன. மேலும் இன் எனும் இடைநிலை இகரம் கெட்டு னகரமாகவும், நகரம் கெட்டு இகரமாகவும் வருவதுண்டு.

எ.கா - சொல் + (இ)ன் + ஆன் (சொன்னான்), பேசு + (இ)ன் + ஆன் ( பேசினான்)

**தடஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து**

**இறந்த காலம் தரும் தொழில் இடைநிலை   (நன் : 142)**

என்னும் நூற்பா இதனை அறியத் தருகிறது.

**நிகழ்கால இடைநிலை**

ஆநின்று, கின்று, கிறு என்பன மூவிட, ஐம்பால் வினைச் சொற்களில் நிகழ்காலத்தை உரைக்கும் இடைநிலைகளாகும்.

எ.கா

ஓடாநின்றான் = ஓடு + ஆநின்று + ஆன்,   ஓடுகின்றான் = ஓடு + கின்று + ஆன்

ஓடுகிறான் = ஓடு + கிறு + ஆன்

**ஆநின்று கின்று கிறு மூவிடத்தின்**

**ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை   (நன் : 143)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**எதிர்கால இடைநிலை**

ப், வ் எனும் மெய்கள் மூவிட, ஐம்பால் வினைச் சொற்களில் எதிர்காலத்தை உரைக்கும் இடைநிலைகளாகும்.

எ.கா -  உழை + ப் + ஆன் (உழைப்பான்),   செல் + வ் + ஆன் (செல்வான்)

**பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது**

இசைவினை இடைநிலை யாம்இவை சிலஇல (நன் : 144)

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**காலம் காட்டும் விகுதிகள்**

வினைச்சொற்கள் சிலவற்றில் காலம் காட்டும் இடைநிலைகள் வருவதில்லை. அத்தகைய சொற்களில் விகுதிகளே ஐம்பால் மூவிடத்தோடு காலத்தையும் உணர்த்தும் இயல்புடையன. அவற்றை சான்றுகளடன் அறிவது அவசியம்.

1. று, றும் விகுதிகள் - இறந்த காலமும் எதிர்காலமும் காட்டும்.

   எ.கா – சென்று, சென்றும் - இறந்த காலம்

   சேறு, சேறும் - எதிர்காலம்

2. து, தும் விகுதிகள் - இறந்த காலமும் எதிர்காலமும் காட்டும்.

   எ.கா – வந்து, வந்தும் - இறந்தகாலம்

   வருது, வருதும் - எதிர்காலம்

3. டு, டும் விகுதிகள் - இறந்த காலம் காட்டும்

   எ.கா – உண்டு, உண்டும்

4. கு, கும் - எதிர்காலம் காட்டும்

   எ.கா – உண்கு, உண்கும்

5. மின், ஈர், ஆகிய ஏவல் விகுதிகள் - எதிர்காலம் காட்டும்.

   எ.கா – உண்மின், உண்ணீர்

6. க, ய, இயர் ஆகிய வியங்கோள் விகுதிகள் - எதிர்காலம் காட்டும்

   எ.கா – வாழ்க, வாழிய, வாழியர்

7. இ, மார் விகுதிகள் - எதிர்காலம் காட்டும்.

   எ.கா – சேரி, சென்மார்

8. ப விகுதி - இறந்த காலமும் எதிர்காலமும் காட்டும்.

   எ.கா – நேற்று என்ப, நாளை என்ப.

9. செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று விகுதி – நிகழ்காலமும் எதிர்காலமும் காட்டும்.

எ.கா - இன்று சொல்லும், நாளை சொல்லும்

10. ஆ என்னும் எதிர்மறை விகுதி - மூன்று காலமும் காட்டும்.

எ.கா – நேற்று உண்ணா, இன்று உண்ணா, நாளை உண்ணா

மேற்குறிப்பிட்ட விகுதிகளுள் று, றும், து, தும், டு, டும், கு, கும் எனும் எட்டும் தன்மை வினைகளுக்கு உரியவை. இதனை,

**றவ்வொடு உகர உம்மைநிகழ்பு அல்லவும்**
**தவ்வொடு இறப்பும் எதிர்வும் டவ்வொடு**
**கழிவும் கவ்வொடு எதிர்வும்மின் ஏவல்**
**வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்**
**செலவொடு வரவும் செய்யும் நிகழ்பு எதிர்வும்**
**எதிர்மறை மும்மையும் ஏற்கும், ஈங்கே (நன் : 145)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**வடமொழி ஆக்கம்**

வடமொழிச் சொற்களைத் தமிழில் கலந்து பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் ஒலி, ஒப்புமை உடைய தமிழ் எழுத்துக்களால் வடமொழி எழுத்துக்களை வழங்குவது வடமொழி ஆக்கம் ஆகும்.

வடமொழி ஆக்கம் என்பது வடசொற்களைத் தமிழில் அமைத்தல் ஆகும்.

**தற்சமம்**

வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவான எழுத்துக்களால் ஆகி, திரிபு இன்றித் தமிழில் வழங்கும் வட சொற்கள் தற்சமம் எனப்படும்.

எ.கா - அமலம், கமலம், காரணம், குங்குமம், பரம், மலம்

**தற்பவம்**

வடமொழிக்கு மட்டுமே உரிய சிறப்பு எழுத்துக்களாலும், இரு மொழிகளுக்கும் பொதுவும் வடமொழிக்குச் சிறப்புமாகிய இருவகை எழுத்துக்களாலும் ஆகித் தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய விகாரமடைந்து தமிழில் வழங்கும் வடசொற்கள் தற்பவம் எனப்படும்.

சுகி, தேயம், போகி, சபை - வடமொழிச் சிறப்பு எழுத்துக்களாகி விகாரமடைந்து தமிழில் வழங்குவன

அரன். சயம், ஞானம், மாதம் - இருமொழிகளுக்கும் பொதுவும் வடமொழிக்குச் சிறப்புமாகியஎழுத்துக்களாலாகி விகாரமடைந்து தமிழில் வழங்குவன.

மாலை , புரி, இரதி, இல்லை - இருமொழிகளுக்கும். பொதுவான எழுத்துக்களாகி, விகாரமடைந்து தமிழில் வழங்குவன

மேற்கண்டவை வடமொழியாக்கத்தைத் தெளிவாக அறியத் துணை செய்யும். அதோடு வடமொழி ஆக்கம் பற்றி நன்னூல் குறிப்பிடும் செய்திகளை அறிந்துகொள்வது அவசியம்.

**பொது எழுத்துக்களும் சிறப்பு எழுத்துக்களும்**

வடமொழியிலுள்ள 16 உயிரெழுத்துக்களுள் இடையில் உள்ள நான்கும் ஈற்றிலுள்ள இரண்டுமாகிய 6 நீங்கிய 10 உயிரெழுத்துக்களும், க, ச, ட, த, ப எனும் 5 வர்க்கங்களில் முதலிலுள்ள 5 மெய்கள் (க, ச, ட, த, ப) மற்றும் ஈற்றிலுள்ள 5 மெய்கள் (ங, ஞ, ண, ந, ம) ய, ர, ல, வ, ள எனும் 5 மெய்கள் ஆகப் 15 மெய்களுமாகிய 25 எழுத்துக்களும் வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவாகிய எழுத்துக்களாகும். இவை ஒழிந்த 28 எழுத்துக்களும் வடமொழிக்கு மட்டுமே உரிய சிறப்பு எழுத்துக்களாகும். சிறப்பெழுத்துக்கள் தம்மை ஒத்த ஒலியுடைய தமிழ் எழுத்துக்களாகத் திரிந்து வழங்கும்.

இரு மொழிகளுக்கும் பொது எழுத்துக்கள் - 25 (உயிர் 10 + மெய் 15)

வடமொழிச் சிறப்பு எழுத்துக்கள் - 28 (உயிர் 6 + மெய் 22)

**இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்**
**அல்லா அச்சுஜ வருக்கம் முதல் ஈறு**
**யஆதி நான்மைள ஆகும் ஐயையும்**
**பொதுவெழுத்து ஒழிந்த நாலேழும் திரியும். (நன் : 146)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**வடமொழிச் சிறப்பு எழுத்துக்கள் தமிழில் திரிதல்**

வட மொழிக்கு மட்டுமே உரிய சிறப்பு எழுத்துக்கள் பின்வருமாறு தமிழ் எழுத்துக்களாகி வழங்கும். ஏழாவது உயிரெழுத்து இகரமாகவும் இரு எனவும் திரியும்.

எ.கா – ர்ஷப - இடபம் , வருத்த – விருத்தம்.

ஐந்து வர்க்கங்களின் இடையே உள்ள மூன்று மெய்களும் தத்தம் வர்க்கத்தின் முதலெழுத்துக்களாகத் திரியும்.

எ.கா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நக | நகம் | நாக | நாகம் | மேக | மேகம் |
| சவி | சவி | ஜய | சயம் | சடிதி | சடிதி |
| பீடம் | பீடம் | ஜடம் | சடம் | கூடம் | கூடம் |
| ஸ்தலம் | தலம் | திநம் | தினம் | தரா | தரை |
| பலம் | பலம் | பாலம் | பாலம் | பாரதம் | பாரதம் |

எட்டாவது மெய் (ஐ) சகரமாதலோடு யகரமாகவும் திரியும்.

எ.கா பங்கஜம் - பங்கயம்

முப்பதாவது மெய் (பீ) சகரமாதலோடு யகரமாகவும் திரியும்

எ.கா பீவம் - சிவம், தே – தேயம்

முப்பத்தொன்றாவது மெய் ( ஷ ) சகரமாகவும் டகரமாகவும் திரியும்

எ.கா - ஷண்முக : சண்முகன், விஷம் - விடம்

முப்பத்திரண்டாவது மெய் (ஸ) சகரமாகவும் தகரமாகவும் திரியும்

எ.கா - ஸீதா – சீதை, வாஸ – வாசம், மாஸ – மாதம்

முப்பத்து மூன்றாவது மெய் (ஹ) அகரமாகவும் ககரமாகவும் திரியும்.

எ.கா - ஹரி – அரி , மேஹம் - மேகம்

முப்பத்தைந்தாவது மெய் (Z) இரு ககரமாகத் (க்க) திரியும்

எ.கா லZமீ - இலக்குமி, பZ - பக்கி

பொது எழுத்துக்களில் சொல்லிறுதியில் வரும் ஆகாரம் ஐகாரமாகவும் ஈகாரம் இகரமாகவும் திரியும்.

எ.கா - மாலா - மாலை ராதா - இராதை

காந்தீ - காந்தி, மனோன்மணீ - மனோன்மணி

**அவற்றுள்**

**ஏழாம் உயிர் இய்யும் இருவும் ஐவருக்கத்து**

**இடையில் மூன்றும் அவ்வம் முதலும்**

**எட்டே யவ்வும் முப்பது சயவும்**

**மேல்ஒன்று சடவும் இரண்டும் சதவும்**

**மூன்றே யகவும் ஐந்து இரு கவ்வும்**

**ஆஈறு ஐயும் ஈஈறு இகரமும் (நன்: 147)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**சொல் முதலில் விகாரம்**

சொல் முதலில் வரும் ரகரத்திற்கு முன்பு அ, இ, உ என்னும் மூன்றில் ஏதேனும் ஒன்று வரும். சொல் முதலில் வரும் லகரத்திற்கு முன்பு இ, உ என்பனவற்றில் ஏதேனும் ஒன்று வரும். சொல் முதலில் வரும் யகரத்திற்கு முன்பு இகரம் வரும்.

எ.கா - ரங்கன் - அரங்கன், ராமன் - இராமன்

ருசி – உருசி, லாபம் - இலாபம்

லோபம் - உலோபம் யமன் - இயமன்

**ரவ்விற்கு அம்முத லாமுக் குறிலும்**

**லவ்விற்கு இம்முதல் இரண்டும் யவ்விற்கு**

**இய்யும் மொழிமுதல் ஆகிமுன் வருமே. (நன் : 148)**

என்னும் நூற்பா இதனை அறியத்தருகிறது.

**சொல் இடையில் விகாரம்**

மெய்யெழுத்துக்கள் சேர்ந்து வருமிடத்துப் பின்னின்ற யகர, ரகர, லகரங்களுக்கு முன்னர் இகரம் வரும். மகர, வகரங்களுக்கு முன்னர் உகரம் வரும். ரகரத்திற்கு முன்னர் அகரம் வரும். ரகரத்திற்குப் பின்னர் உகரமும் வரும்.

எ.கா காவ்யம் - காவியம், வ்யூகம் - வியூகம்

ந்யாகம் - நியாயம், வக்ரம் - வக்கிரம்

கிருஷ்ணன் - கிருட்டிணன், சுக்லம் - சுக்கிலம், க்லேசம் - கிலேசம்

பத்மம் - பதுமம், பக்வம் - பக்குவம்

ரத்தம் - அரத்தம் அர்த்தம் - அருத்தம்

**இணைந்து இயல் காலை யரலுக்கு இகரமும்**

**மவ்வுக்கு உகரமும் நகரக்கு அகரமும்**

**மிசைவரும் ரவ்வழி யவ்வும் ஆம்பிற (நன் : 149)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தமிழ்ச் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும்**

ற, ன, ழ எனும் மூன்று மெய்களும் எ, ஒ எனும் இரண்டு உயிர்களும் ஆகிய ஐந்து முதலெழுத்துக்களும் உயிர்மெய், உயிரளபெடை எனும் இரண்டும் அல்லாத எட்டுச் சார்பெழுத்துக்களும் தமிழ் மொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்களாகும். இவை அல்லாத எழுத்துக்கள் (உயிர் 10 + மெய் 15 + சார்பு 2 = 27 ) தமிழ் மொழிக்கும் வடமொழிக்ககும் பொதுவாகிய எழுத்துக்கள் ஆகும்.

**றனழஎ ஒவ்வும் உயிர்மெய் உயிரளபு**

**அல்லாச் சார்பும் தமிழ்பிற பொதுவே (நன் : 150)**


என்னும் நூற்பா வாயிலாக மேற்குறித்த செய்திகளை விளங்கிக் கொள்ளலாம்.

# அலகு – 3


## உயிரீற்றுப் புணரியல் (முதற்பகுதி)

### புணர்ச்சி வகைகளும் உயீற்றுப் புணர்ச்சியும்

எழுத்தியல் பாகுபடுத்திய எழுத்திலக்கணப் பிரிவுகள் பன்னிரண்டு. அவற்றுள் இறுதியாக இடம் பெறுவது 'புணர்ச்சி' என்பதாகும். இரண்டு சொற்கள் சேரும்போது எழுத்துக்களில் நடைபெறும் மாற்றங்கள் புணர்ச்சி இலக்கணமாக அமைகிறது. முதல் சொல்லான நிலைமொழி இறுதி எழுத்தும் இரண்டாம் சொல்லான வருமொழியின் முதல் எழுத்தும் புணர்ச்சி இலக்கணத்துக்கு உரியவை. அவ்விரண்டும் சேரும் போது எழுத்து அடிப்படையிலும் சொல் அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் மாற்றங்கள் ஏற்படும். அவற்றை நன்னூலார் மூன்று இயல்களில் விளக்கியுள்ளார். சொற்களின் எழுத்துக்கள் தோன்றல், திரிதல், கெடுதல் எனும் மூவகை விகாரமாகவோ அல்லது இயல்பாகவோ அமைவதை புணர்ச்சி இலக்கணம் தெளிவுபடுத்துகிறது.




என்னும் அட்டவணை வாயிலாக புணர்ச்சியின் அடிப்படைப் பண்பினை அறியலாம். இவ்வகைப் புணர்ச்சி அனைத்தும் வேற்றுமைப் பொருளுக்கேற்பவும் வேற்றுமை அல்லாத அல்வழிப் பொருளுக்கேற்பவும் இரு நிலைகளில் அமையும். இதனால் இதனை பொருட்புணர்ச்சி என்பர்,




எனும் அட்டவணை வாயிலாக இதனை அறியலாம். இத்தகைய புணர்ச்சியின் இலக்கணத்தை நன்னூலார்

1. உயிரீற்றுப் புணரியல்
2. மெய்யீற்றுப் புணரியல்
3. உருபு புணரியல்

என மூன்றாகப் பிரித்து விவரிக்கின்றார். இவற்றை அறிவதன் வாயிலாக புணர்ச்சி இலக்கணம் பற்றிய தெளிவினை பெறலாம்.

**உயிரீற்றுப் புணரியல்**

உயிரெழத்துக்களை இறுதியில் பெற்ற நிலைமொழிகளுடன் உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் முதலில் பெற்ற வருமொழிகள் புணரும் நிகழ்வினை விவரிக்கும் இயலே உயிரீற்றுப் புணரியல் ஆகும்.

**புணர்ச்சியின் பொது இலக்கணம்**

**புணர்ச்சி**

மெய்யெழுத்துக்களையும் உயிரெழுத்துக்களையும் முதலிலும் இறுதியிலும் உடைய பகாப்பதம் பகுபதம் என்னும் இருவகைச் சொற்களும் தன்னொடு தானும் தன்னொடு பிறவுமாக வேற்றுமைப் பொருள் அல்லது அல்வழிப் பொருளில் சேரும். ஆவ்வாறு சேரும்பொழுது நிலைமொழியும் வருமொழியும் இயல்பாகவோ விகாரமாகவோ சேர்வது புணர்ச்சி எனப்படும்.

புணர்ச்சி = புணர்ப்பு = சேர்க்கை = இயைபு = சந்தி எனும் பல பொருளில் இது அமைகிறது.

**எழுத்துப் புணர்ச்சி**

நிலைமொழி ஈறு வருமொழி முதல் என்னும் அடிப்படையில் நான்கு வகைப் புணர்ச்சி அமைந்துள்ளன. இப்புணர்ச்சியினை எழுத்துப் புணர்ச்சி என்பர்.

1. உயிர் முன் உயிர் - அணி + ஆடை, கலை + அழகு
2. உயிர் முன் மெய் - தனி + வீடு, காலை + சிறப்பு
3. மெய் முன் உயிர் - என் + உயிர், மனம் + அலையும்
4. மெய் முன் மெய் - என் + வீடு, மனம் + பெரியது

**பதப் புணர்ச்சி (சொல்)**

பகுபதம் என்பது பிரிக்கக் கூடிய சொல், பகாப்பதம் என்பது பிரிக்க முடியாத சொல். இவ்விரு சொல் நிலைகளின் அடிப்படையிலான வகைப்பாடு நான்காகும்.

1. பகுபதத்துடன் பகுபதம் புணர்தல் - அவன் + வந்தான், அறிஞன் + முகம்
2. பகுபதத்துடன் பகாப்பதம் புணர்தல் - அவன் + கண், அறிஞன் + முகம்
3. பகாப்பத்துடன் பகுபதம் புணர்தல் - கண் + விழித்தான், பொன் +நல்லது
4. பகாப்பதத்துடன் பகாப்பதம் புணர்தல் - என் + கண், பொன் + அணி

மேற்கண்ட நான்கனுள் 1,4 தன்னொடு தான் புணர்தல். 2, 3 தன்னோடு மறந்து புணர்தல் பண்பில் அமைந்துள்ளன.

**பொருள் புணர்ச்சி**

தமிழில் ஒரு தொடர் தரும் பொருளின் அடிப்படையில் வேற்றுமைத் தொடர், அல்வழித் தொடர் என்னும் இரு நிலைகள் உள்ளன. இத்தன்மைகளின் அடிப்படையில் புணர்ச்சி இரு வகைப்படும்.

1. அல்வழிப் புணர்ச்சி – (எ.கா) மரம் + காய்ந்தது
2. வேற்றுமைப் புணர்ச்சி – (எ.கா) மரம் + பெட்டி

**இயல்பு விகாரப் புணர்ச்சி**

புணர்ச்சியினால் சொற்கள் அடையும் மாற்றம் நிலையை ஒட்டிப் புணர்ச்சி இருவகைப்படும்.

1. இயல்பு புணர்ச்சி - (எ.கா) நிலா + தோன்றியது - நிலா தோன்றியது
2. விகாரப் புணர்ச்சி – (எ.கா) நிலா + தோற்றம் - நிலாத்தோற்றம்

**மெய்உயிர் முதல்ஈறு ஆம்இரு பதங்களும்**
**தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்**
**பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்**
**இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே (நன் : 151)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**பொருட் புணர்ச்சி**

பொருட்புணர்ச்சி இரு வகைப்படும். அவை, வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்பனவாகும். அவற்றை விளங்கிக் கொள்வது அவசியம்.

**வேற்றுமைப் புணர்ச்சி**

ஐ, ஆல், கு, இன், அது, கண், எனும் இரண்டு முதல் ஏழு ஈறாக உள்ள ஆறு வேற்றுமைகளின் உருபுகளும், நிலைமொழிக்கும், வருமொழிக்கும் இடையில் மறைந்தோ வெளிப்படையாகவோ நிற்குமாறு சொற்கள் புணர்தல் வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

**வேற்றுமை** → **வேற்றுமைத்தொகை (உருபு மறைந்து வருவது**

**வேற்றுமை** → **வேற்றுமை விரி (உருபு வெளிப்படையாக விரிந்து வருவது**

என்னும் அட்டவணை வேற்றுமைப் புணர்ச்சியின் இருவகை இயல்பினைச் சுட்டுகிறது.

எ.கா

| | | |
|---|---|---|
| கனி தின்றான் | (ஐ) | கனியைத் தின்றான் |
| கல் எறிந்தான் | (ஆல்) | கல்லால் எறிந்தான் |
| இராமன் தம்பி | (கு) | இராமனுக்குத் தம்பி |
| மலைவீழ் அருவி | (இன்) | மலையின் வீழ் அருவி |
| இலைநுனி | (அது) | இலையினது நுனி |
| ஊர்வந்தான் | (கண்) | ஊரின்கண் வந்தான் |

**அல்வழிப் புணர்ச்சி**

வினைத்தொகைத் தொடர், பண்புத்தொகைத் தொடர், உவமைத்தொகைத் தொடர், உம்மைத்தொகைத் தொடர், அன்மொழித்தொகைத் தொடர், எழுவாய்த்தொகைத் தொடர், விளித்தொகைத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையச்சத் தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர். அடுக்குத் தொடர் ஆகிய 14 தொடர்களிலும் சொற்கள் புணர்தல் அல்வழிப் புணர்ச்சி எனப்படும். அல்வழிப்புணர்ச்சி என்பது வேற்றுமையல்லாத வழிப்புணர்ச்சி ஆகும்.

எ.கா

1. வினைத்தொகைத் தொடர் - கொல்யானை, அலைகடல்
2. பண்புத்தொகைத் தொடர் - செந்தாமரை, பனைமரம்
3. உவமைத்தொகைத் தொடர் - கயல்விழி, குவளைக்கண்
4. உம்மைத்தொகைத் தொடர் - இராம இலக்குவன், மரஞ்செடி
5. அன்மொழித்தொகைத் தொடர் - உயிர்மெய். பூங்குழல்
6. எழுவாய்த்தொகைத் தொடர் - கண்ணன் வந்தான், தமிழரசி படித்தாள்
7. விளித் தொடர் - கண்ணா வா, அம்மா நில்
8. பெயரெச்சத் தொடர் - கண்ட காட்சி, நல்ல பாடம்
9. வினையச்சத் தொடர் - வந்து போனான், மெல்ல பேசு
10. தெரிநிலை வினைமுற்றுத் தொடர் - சென்றான் தம்பி, வந்தாள் தங்கை
11. குறிப்பு வினைமுற்றுத் தொடர் - பெரிது புவனம், உளது பணம்
12. இடைச்சொல் தொடர் - மற்றொன்று, அய்யோ பாம்பு
13. உரிச்சொல் தொடர் - சால நன்று, உறுபசி
14. அடுக்குத் தொடர் - ஓடு ஓடு, பரி பரி

வேற்றுப் பொருளின் அடிப்படையில் புணர்ச்சி அல்வழி, வேற்றுமை என்று பகுக்கப்பட்டுள்ளது.

**வேற்றுமை ஐம்முதல் ஆறுஆம் அல்வழி**
**தொழில்பண்பு உவமை உம்மை அன்மொழி**
**எழுவாய் விளிஈர் எச்சம்முற்று இடைஉரி**
**தழுவு தொடர்அடுக்கு என ஈ ரேழே (நன் : 152)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**இயல்புப் புணர்ச்சி**

நிலைமொழியும் வருமொழியும் மாற்றங்கள் ஏதும் இன்றி இயல்பாகப் புணர்வது இயல்புப் புணர்ச்சி எனப்படும். இது சொற்கள் எவ்வகை விகாரங்களையும் அடையாமல் புணர்வதாகும்.

எ.கா - புகழ் + மாலை = புகழ்மாலை, பூ + மாலை = பூமாலை

**விகாரம் அனைத்தும் மேவது இயல்பே (நன் : 153)**

என்னும் நூற்பா இதனை உணர்த்தும்.

**விகாரப் புணர்ச்சி**

எழுத்து அல்லது சாரியை தோன்றல், ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாக திரிதல் (மாறுதல்), சொற்களிலுள்ள எழுத்து கெடுதல் எனும் மூவகை மாற்றங்களுடன் அமையும் புணர்ச்சி விகாரப் புணர்ச்சி எனப்படும். இம் மூன்று விகாரங்களும் நிலைமொழி வருமொழிகளின் முதல், இடை, கடை எனும் மூவிடத்திலும் வரும்.

எ.கா -

பூ + கோதை = பூங்கோதை = தோன்றல் (புதியதாக ஓர் எழுத்து தோன்றியது)

மணி + ஒளி = மணி + (ய் + இன்) + ஒளி = மணியிணொளி
(எழுத்தும் சாரியையும் தோன்றுதல்)

வண்டு + சிறகு = வண்டு + (இன் + சிறகு) = வண்டின் சிறகு (சாரியை தோன்றுதல்)

மரம் + கொத்தி = மரங்கொத்தி – திரிதல் (ம்>ங் - எனத் திரிந்தது)

நிலம் + மகள் = நிலமகள் - கெடுதல் (நிலம் என்பதில் 'ம்' கெட்டது)

ஆறு + பத்து = அறுபது - நிலைமொழி முதல் திரிந்து, வருமொழி இடைகெட்டது.

அல் + திணை = அ.்.றிணை – நிலைமொழி இறுதியும் வருமொழி முதலும் திரிந்தன.

ஒன்பது + நூறு = தொள்ளாயிரம் -நிலைமொழி வருமொழிகள் மூவிடத்தும்
விகாரமடைந்தன.

**தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்**
**மூன்றும் மொழி மூவிடத்தும் ஆகும்** **(நன் : 154)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**செய்யுள் விகாரம்**

செய்யுளில் யாப்பிலக்கணம் பிழைஏற்படாமல் காத்தற் பொருட்டு சொற்களில் வேண்டிய இடத்து விகாரத்தைப் புலவர்கள் செய்தல் செய்யுள் விகாரம் ஆகும். ஆறு வகையான விகாரங்கள் (மாற்றங்கள்) நிகழ்வது உண்டு. அவை பெரும்பாலும் செய்யுளில் மட்டுமே நிகழும். எனவே அவற்றுக்குச் 'செய்யுள் விகாரம்' என்று பெயர். இதனை,

**வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல்**

**விரித்தல், தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி (155)**

என நன்னூல் நூற்பா விவரிக்கின்றது. பின்வரும் அட்டவணை செய்யுள் விகாரங்கள் ஆறினையும் எடுத்துக்காட்டுடன் விளக்குகிறது. அவை வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என்பனவாகும்.

| விகார வகை | நிகழும் மாற்றம் | எடுத்துக்காட்டு | விளக்கம் |
|---|---|---|---|
| வலித்தல் | மெல்லினம் வல்லினமாகும் | முத்தை வரும் காலம் | முந்தை > முத்தை<br>ந் - த் ஆனது |
| மெலித்தல் | வல்லினம் மெல்லினமாகும் | தண்டை | தட்டை > தண்டை<br>ட் > ண் ஆனது |
| நீட்டல் | குறில் நெடிலாகும் | இணையடி நீழலே | நிழலே > நீழலே<br>நி > நீ ஆனது |
| குறுக்கல் | நெடில் குறிலாகும் | தியேன் | தீயேன் > தியேன்<br>தீ > தி ஆனது |
| விரித்தல் | இல்லாத எழுத்து – வருதல் | விளையும்மே | விளையுமே>விளையுமே<br>ம் - வந்தது. |
| தொகுத்தல் | இருக்கும் எழுத்தை – விடுதல் | பாடெனப் பாடினாள் | பாடுக என என்பது<br>பாடென என்று சுருங்கியது |

ஒரு சொல்லின் முதல், இடை, இறுதி எனும் மூன்றிடங்களில் ஓரிடத்தில் எழுத்துக் குறைதலும் செய்யுள் விகாரமாகும்.

எ.கா - மரையிதழ் (தாமரை – மரை) - முதற்குறை

ஓதி முதுபோத்து (ஓந்தி – ஓதி) - இடைகுறை

நீலுண் துகிலிகை (நீலம் - நீல்) - கடைக்குறை

**ஒரு மொழி மூவழிக் குறைதலும் அனைத்தே (நன் : 156)**

என்னும் நூற்பா இதனை உணர்த்துகிறது.

**புணர்ச்சி விகாரம் செய்யுள் விகாரம் வேறுபாடு**

புணர்ச்சி விகாரமும் செய்யுள் விகாரமும் சில வெறுபாடுகளைப் பெற்றுள்ளன. அவற்றை அறிவதன் வாயிலாக இருவகை விகாரங்கள் பற்றிய தெளிவினைப் பெறமடியும். இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை பின்வரும் அட்டவணை விவரிக்கின்றது.

| புணர்ச்சி விகாரம் | செய்யுள் விகாரம் |
|---|---|
| புணர்ச்சி விகாரம் தற்செயலாக அமையும் | யாப்பிலக்கணத்திற்காகப் புலவர்கள் செயற்கையாக அமைப்பர் |
| தனிச்சொல்லில் வராது. நிலைமொழி, வருமொழிப் புணர்ச்சியாகிய தொடரில் (சொற்களுக்கு இடையில் வரும் | தனிச் சொல்லிலும் தொடரிலும் வரும் |
| உலக வழக்கு, செய்யுள் வழக்கு எனும் இரண்டிலும் வரும் | செய்யுள் வழக்கில் மட்டுமே வரும். |
| புணர்ச்சி விகாரம் என்பது தோன்றல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், தொகுத்தல், விரித்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என ஒன்பது வகைப்படும் | செய்யுள் விகாரம் வலித்தல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும். |

**புணர்ச்சி விகாரங்கள்**

ஒரு புணர்ச்சியில் ஒரு விகாரமேயன்றி, இரண்டு அல்லது மூன்று விகாரங்களும் வருவதுண்டு. இதனை சில எடுத்துக்காட்டுகள் வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

எ.கா – கிளி + சிறகு = கிளிச்சிறகு – ஒரு விகாரம் (தோன்றல் )

மரம் + இலை = மர + (வ்) + இலை + மரவிலை -இரு விகாரம் (கெடுதல், தோன்றல்)

பனை + காய் = பனை + அம் + காய் = பன் = அம் (ங்) + காய் பணங்காய்

மூன்று விகாரம் (கெடுதல், தோன்றல், திரிதல்)

**ஒருபுணர்க்கு இரண்டு மூன்றும் உறப்பெறும் (நன் : 157)**

என்னும் நூற்பா மேற்குறித்த செய்திகளை அறியத் தருகிறது.

**பொதுப்புணர்ச்சி**

உயிரீறு, மெய்யீறுகளுக்கும் பொதுவான புணர்ச்சியாக அமைவதால் பொதுப்புணர்ச்சி எனப்படுகிறது. எல்லா ஈறுகளின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணரும்.

இருபத்து நான்கு எழுத்துக்களையும் ஈறாகக் கொண்ட எல்லா வகைச் சொற்களுக்கும் முன்னர் வரும். ஞ, ந, ம, ய, வ எனும் 5 எழுத்துக்களும் இயல்பாகும். குற்றெழுத்தை அடுத்து வரும் யகரம், தனித்து வரும் ஐகாரம், நொ, து ஆகியவற்றிற்கு முன்னர் வரும். ஞ, ந, ம எனும் மெல்லினங்கள் மிகும். ண, ள, ன, ல ஆகிய நான்கு மெய்களின் முன்னர் வரும் நகரம் திரியும். இக்கருத்து அல்வழிக்கும் வேற்றுமைக்கும் பொதுவாகும்.

| எ.கா – **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| சில + ஞமலி = சிலஞமலி | மரம் + ஞமலி = மரஞமலி |
| பனை + நீண்டது = பனை நீண்டது | பூ + நாற்றம் = பூநாற்றம் |
| கண் + மூடும் = கண்மூடும் | பொன் + மணி = பொன்மணி |
| அவர் + யார் = அவர்யார் | கல் + யானை = கல்யானை |
| அங்கு + வா = அங்குவா | வாள் + வலிமை = வாள்வலிமை |

பிற ஈறுகளுக்கும் இவ்வாறே அமைத்துக் கொள்வது பொருந்தும்.

**குற்றெழுத்தை அடுத்த யகரம் முன் மெல்லினம் மிகுந்து வரும்.**

| எ.கா - **அல்வழி** | **வேற்றுமை** |
|---|---|
| மெய் + ஞமலி = மெய்ஞ்ஞமலி | மெய் + ஞாற்சி = மெய்ஞ்ஞாற்சி |
| செய் + நன்றி = செய்ந்நன்றி | மெய் + நலம் = மெய்ந்நலம் |
| பொய் + மறையும் = பொய்ம்மறையும் | மெய் + மாண்பு = மெய்ம்மாண்பு |

**தனி ஐ முன் மெல்லினம் மிகுந்து வருதல்**

| | |
|---|---|
| கை + ஞால்கிறது = கைஞால்கிறது | கை + ஞெகிலி = கைஞ்ஞெகிலி |
| கை + நீளும் = கைந்நீளும் | கை + நீளம் = கைந்நீளம் |
| தை + முடிந்தது = தைம்முடிந்தது | தை + முடிவு = தைம்முடிவு |

**நொ முன் மெலிமிகுந்து வரும்**

| | |
|---|---|
| நொ + ஞொள்ளா = நொஞ்ஞோள்ளா | நொ + நாகா = நொந்நாகா |

நொ + மாமா = நொம்மாமா　　　து + ஞொள்ளா = துஞ்ஞொள்ளா

து + நாகா = துந்நாகா　　　து + மாமா = தும்மாமா

**ண, ன, ள, ல, வழி ‘ந’ திரிந்து வரும்.**

கண் + நீளும் = கண்ணீளும்　　　கண் + நலம் = கண்ணலம்

முள் + நீண்டது = முண்ணீண்டது　　　முன் + நீளம் = முண்ணீலம்

பொன் + நன்று = பொன்னன்று　　　பொன் + நாய் = பொன்னாய்

புல் + நீளும் = பன்னீளும்　　　சொல் + நலம் = சொன்னலம்

**எண்மூ எழுத்து ஈற்று எவ்வகை மொழிக்கும்**
**முன்வரும் ஞநமய வக்கள் இயல்பும்**
**குறில்வழி யத்தனி ஐந்நொது முன்மெலி**
**முகலுமாம் ணளனல வழிநத் திரியும்　　　(நன் : 158)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**பொதுப்பெயர், உயர்திணைப் பெயர்கள்**

பொதுப் பெயர், உயர்திணைப் பெயர்களின் இறுதியிலுள்ள மெய்யெழுத்துக்கள் முன் வல்லெழுத்துக்கள் வந்தால் இயல்பாகும். அவ்விருவகைப் பெயர்களின் இறுதியிலுள்ள உயிரெழுத்துக்கள் யகரம் ரகரம் ஆகியவற்றின் முன் வருகின்ற வல்லெழுத்துக்கள் மிகாது. உயிரீறும் மெய்யீறுமுடைய சில உயர்திணைப் பெயர்களின் முன் நாற்கணங்களும் வந்து புணரும்போது நிலைமொழியும் வருமொழியும் விகாரமடையும்.

பொதுப் பெயர் என்பது விரவுப் பெயர் எனப்படும். இது உயர்திணைக்கும். அஃறிணைக்கும் பொதுவான பெயர் ஆகும்.

நாற்கணம் என்பது வன்கணம் (வல்லினம்) மென்கணம் (மெல்லினம்) இடைக்கணம் (இடையினம்) உயிர்க்கணம் (உயிர் எழுத்து) நாற்கணம் என்பனவாகும்.

**பொதுப்பெயர்கள் ஈற்று மெய்கள் வல்லினம் வர இயல்பாகும்.**

எ.கா – **அல்வழி**　　　**வேற்றுமை**

ஆண் + குட்டி = ஆண்குட்டி　　　ஆண் + செவி = ஆண்செவி

சாத்தன் + தீது = சாத்தன்தீது　　　சாத்தன் + புரம் = சாத்தன்புரம்

**உயர்திணைப் பெயரீற்று மெய்கள் முன் வல்லெழுத்துக்கள் வர இயல்பாகும்.**

அவன் + சிறந்தவன் =அவன் சிறந்தவன் வேள் + கொடுமை = வேள்கொடுமை

மகள் + போனாள் = மகள்போனாள் அவன் + தலை = அவன்றலை

**பொதுப்பெயர் ஈற்று உயிர்கள் யகரம், ரகரம் முன் வலி மிகாது**

பிள்ளை + குறியவன் = பிள்ளைகுறியவன் பிள்ளை + கை =பிள்ளைகை

சாத்தி + பெரியது = சாத்திபெரிது சாத்தி + தலை = சாத்திதலை

தாய் + தேடினாள் = தாய்தேடினாள் தாய் + கொம்பு = தாய்கொம்பு

**உயர்திணைப் பெயர் ஈற்று உயிர்கள் யகரம், ரகரம் முன் வலிமிகாது**

நம்பி + குரியவன் = நம்பிகுரியவன் நங்கை + கண் = நங்கைகண்

அவர் + தலைவர் = அவர்தலைவர் அவர் + புறம் = அவர்புறம்

சேய் + சிறியவன் = சேய்சிறியவன் சேய் + தலை = சேய்தலை

**உயர்திணைப் பெயர்கள் முன் நாற்கணமும் புணரும்போது சில விகாரம் அமையும்**

நம்பி + கொற்றான் = நம்பிக்கொற்றான் மக்கள் + சிறப்பு = மக்கட்சிறப்பு

வடுகன் + நாதன் = வடுகநாதன் சோழன் + நாடு = சோணாடு

அரசன் + வள்ளல் = அரசவள்ளல் குமணன் + வள்ளல் =குமணவள்ளல்

சேரன் + அரசன் = சேரவரசன் வடவர் + ஆட்சி =வடவாட்சி

நூற்பாவில் அல்வலி என்றோ வேற்றுமை என்றோ சுட்டாதமையால் அல்வலி, வேற்றுமை இரண்டும் எனக் கொள்வது பொருந்தும். இதனை,

**பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்**
**வலிவரின் இயல்புஆம் ஆவி யரமுன்**
**வன்மை மிகாசில விகாரம்ஆம் உயர்திணை (நன் : 159)**

என்னும் நூற்பா வாயிலாக அறியலாம்.

**வினா விளிப்பெயர்கள் இயல்பாகப் புணர்தல்**

சொல்லின் இறுதியில் வரும் ஈ, ஏ, ஓ எனும் வினா எழுத்துக்களுக்கு முன்னும் யா எனும் வினாப் பெயருக்கு முன்னும் விளிப் பெயர்களுக்கு முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகப் புணரும்.

யா என்பது யாவை என்னும் சொல்லுடன் தொடர்புடையதாகும்.

எ.கா –அவனா + கண்டான் = அவனாகண்டான்

அவனே + பார்த்தான் = அவனேபார்த்தான

அவனே + சொன்னான் = அவனேசொன்னான்

அவனோ + தந்தான் = அவனோதந்தான்

ஆ, ஏ, ஓ ஈற்று வினா முன்வல்லெழுத்துக்கள் இயல்பாயின.

யா + கொடியன = யாகொடியன

யா + சிறியன = யாசிறியன

யா + தீயன = யாதீயன

யா + பெரியன =யாபெரியன

அல் வழியில் யா வினா முன்னே வல்லெழுத்துக்கள் இயல்பாயின

யா + கண்டான் = யாகண்டான்

யா + சிறியன = யாசிறியன

யா + தீயன = யாதீயன

யா + பெரியன = யாபெரியன

வேற்றுமையில் யாவினா முன்னே வல்லெழுத்துக்கள் இயல்பாயின

கண்ணா + கொடு = கண்ணாகொடு

பெண்ணே + செல் = பெண்ணேசெல்

பிள்ளாப் + தா = பிள்ளாய்தா

மக்காள் + போங்கள் =மக்காள் போங்கள்

விளிப்பெயர்களுக்கு முன்னே வல்லெழுத்துக்கள் இயல்பாயின

ஈற்று வினாவும் விளிப்பெயரும் அல்வழிக்கு மட்டுமே உரியனவாகும். இதனை,

**ஈற்றுயா வினாவிளிப் பெயர்முன்வலி இயல்பே (நன் : 160)**

என்னும் நூற்பா விவரிக்கின்றது.

**முன்னிலை, ஏவல் வினைகள்முன் இயல்பும் விகற்பமும்.**

உயிரெழுத்துக்கள், ய, ர, ழ எனும் மெய்யெழுத்துக்களை இறுதியாகக் கொண்ட முன்னிலை வினைமுற்றுகளுக்கு முன்னும் உயிரெழுத்துக்ள், ய, ர, ழ எனும் மெய்யெழுத்துக்களை இறுதியாகக் கொண்ட ஏவல் வினைமுற்றுகளுக்கு முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் இயல்பும் விகற்பமுமாகும்.

எ.கா – உண்டி + கண்ணா = உண்டிகண்ணா

உண்டனை + சோழா = உண்டனை சோழா

உயிர், ய, ர இறுதி முன்னிலை

உண்டாய் + தேவா = உண்டாய்தேவா வினைமுன்னே வல்லெழுத்துக்கள்

உண்டனிர் + புலவீர் = உண்டனிர் புலவீர் இயல்பாயின

உண்டீர் + பாண்டியா = உண்டீர் பாண்டியா

ழகர ஈறு முன்னிலையில் வருவதில்லை. முன்னிலை வினைக்கு முன்னே வல்லெழுத்துக்கள் உறழ்ச்சிக்குச் சான்று இல்லை.

எ.கா - வா + கந்தா = வாகந்தா - உயிர், ய, ர, ழ இறுதி

வை + சேந்தா = வைசேந்தா - ஏவல் வினையின்முன்

சாய் + தம்பீ = சாய்தம்பீ - வல்லெழுத்துக்கள்

பார் + தமிழா = பார்தமிழா - இயல்பாயின

நட + கந்தா = நடகந்தா, நடக்கந்தா - உயிர், ய, ர, ழ இறுதி

எய் + கந்தா = எய்கந்தா, எய்க்கந்தா - ஏவல் வினையின்முன்

ஈர் + சேந்தா = ஈர்சேந்தா, ஈர்ச்சேந்தா - வல்லெழுத்துக்கள

தாழ் + தம்பீ = தாழ்தம்பீ. தாழ்த்தம்பீ - விகற்பமாயின

விகற்பம் என்பது உரழ்ச்சி ஆகும். ஒரு புணர்மொழியில் இருவகைப் புணர்ச்சியும் அமைதல், நடகந்தா, நடக்கந்தா என இயல்பும் வல்லெழுத்து மிகுதலும் நட + கந்தா எனும் ஒரே புணர் மொழியில் அமைந்துள்ளன. இதனை,

**ஆவி யாழ இறுதிமுன் னிலைவினை**

**ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே (நன் : 161)**

என்னும் நூற்பா விவரிக்கின்றது.

**உயிர் ஈற்றுச் சிறப்புப் புணர்ச்சிகள்**

உயிரீற்றுப் புணரியலில் ஒவ்வொரு உயிர் ஈறுகளுக்கம் தனித் தனியாக விதிகளும் விளக்கங்களும் நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவரால் வழங்கப்பட்டுள்ளன. அவை தவிர, சில சிறப்புப் புணர்ச்சி விதிகளையம் வகுத்துள்ளார். அவை யாவும் இப் பகுதியில் இடம் பெறுகின்றன. உயிர் ஈற்றுச் சொற்களுடன் நாற்கணமும் புணரும் விதிகள் மட்டும் இப்பகுதியில் குறிப்பிடப்படுகின்றன.

**உயிர்முன் உயிர் புணருதல்**

உயிர் எழுத்துமுன் உயிர் எழுத்து வந்து புணரும்பொழுது ஏற்படும் மாற்றநங்களை இப்பகுதி விவரிக்கின்றது. இரு உயிர்களையும் இணைப்பதற்கு மெய்யெழுத்து தோன்றுவதால் இதனை உடம்படு மெய் என குறிப்பிடுவர்.

**உடம்படு மெய்**

உயிர் முன் உயிர் வந்து சேரும் புணர்ச்சியில் ‘உடம்படு மெய்’ முக்கிய இடம் பெறுகிறது. நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் உயிர் எழுத்தே வருமானால் அவ் இரு உயிரும் உடன்படாது. ஆதனால் அவற்றை உடன் படுத்துவதற்காக இடையில் ஒரு மெய் எழுத்தைச் சேர்ப்பர். அதுவே உடன்படுமெய் எனப்படும். அந்த வகையில் ய், வ் எனும் இரு மெய்யெழுத்துக்களும் உடம்படு மெய்யெழுத்துக்களாக தோன்றும்.

நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ எனும் உயிரெழுத்துக்களுக்கு முன்பு ஏதேனும் ஒரு உயிரெழுத்து வந்தால் அவை புணரும் பொழுது யகர உடம்படு மெய் தோன்றும். ஏனைய அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ எனும் ஏழு உயிர்களுக்கு முன்பு உயிரெழுத்து வந்தால் வகர உடம்படு மெய் தோன்றும். ஏகாரத்திற்கு முன் உயிர் வந்தால் மட்டும் யகரம், வகரம் எனும் இரு உடம்படு மெய்களும் வரும்.

எ.கா - **அல்வழி**

மணி + ஒலித்தத = மணி + ய் + ஒலித்தது = மணியொலித்தது

ஈ + இறந்தது = ஈ + ய் + இறந்தது = ஈயிறந்தது

தினை + எரிந்தது = தினை + ய் + எரிந்தது = தினையெறிந்தது

**வேற்றுமை**

மணி + ஓசை = மணி + ய் + ஓசை = மணியோசை

ஈ + இறகு = ஈ + ய் + இறகு = ஈயிறகு

தினை + அரிசி = தினை + ய் + அரிசி = தினையரிசி

**அல்வழி**

விள + ஒடிந்தது = விள + வ் + ஒடிந்தது = விளவொடிந்தது

பலா + ஒடிந்தது = பலா + வ் + ஒடிந்தது = பலாவொடிந்தது

கடு + ஒடிந்தது = கடு + வ் + ஒடிந்தது = கடுவொடிந்தது

பூ + அழகியது = பூ + வ் + அழகியது = பூவழகியது

நொ + இழிவானது = நொ + வ் + இழிவானது = நொவ்விழிவானது

கோ + அழகன் = கோ + வ் + அழகன் = கோவழகன்

கௌ + அழகியது = கௌ + வ் + அழகியது = கௌவழகியது

**வேற்றுமை**

விள + இலை = விள + வ் + இலை = விள இலை

பலா + இலை = பலா + வ் + இலை = பலாஇலை

கடு + இலை = கடு + வ் + இலை = கடுஇலை

பூ + இதல் = பூ + வ் + இதழ் = பூவிதல்

நோ + இழிவு = நொ + வ் + இழிவு =நொவ்விழிவு

கோ + உரிமை = கோ + வ் + உரிமை = கோவுரிமை

கௌ + அழகு = கௌ + வ் + அழகு = கௌவழகு

**அல்வழி**

சே + அழகியது = சே + வ் + அழகியது = சேவழகியது

சே + ஓடியது = சே + ய் + ஓடியது = சேயோடியது

**வேற்றுமை**

சே + ஓட்டம் = சே + ய் + ஓட்டம் = சேயோட்டம்

சே + அடி = சே + வ் + அடி = சேவடி

நொ தனிக்குறிலாதலால் உடம்படு மெய் சேர்ந்து குற்றொற்றாகி இரட்டித்து வந்துள்ளது.

சே என்பது எருதையும் கடு என்பது கடுகையும் விள என்பது விளாமரத்தையும் குறிக்கும்.

**இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனை**
**உயிர் வழி வவ்வும் ஏமுன் இவ் இருமையும்**
**உயிர்வரின் உடம்படுமெய் என்று ஆகும் (நன் : 162)**

என்னும் நூற்பா உடம்படுமெய்யினை விளக்குகிறது. இச்சூத்திரத்திலிருந்தே உயிரீற்றுப் புணரியற் செய்திகள் தொடர்கின்றன. முன்னே கூறப்பட்டவை எல்லா ஈற்றுப் புணர்ச்சிகளுக்கும் பொதுவான செய்திகளாகும்.

**எகரவினா, சுட்டு முன் நாற்கணம்**

எகரவினா அ, இ, உ எனும் சுட்டு ஆகிய இடைச் சொற்களுக்கு முன்னே உயிரெழுத்தும் யகர மெய்யும் வந்து புணர்ந்தால் இடையில் வகரமெய் தோன்றும். அவற்றுக்கு முன்னே யகரம் அல்லாத பிற மெய்கள் வந்தால் அதே மெய்கள் தோன்றும். செய்யுளில் சுட்டெழுத்து நீளுமிடத்து யகரமெய் தோன்றும்.

எ.கா - எ + அணி = எ + வ் + அணி = எவ்வணி

எ + யானை = எ + வ் + யானை = எவ்யானை

அ + அணி = அ + வ் + அணி = அவ்வணி - வகரம் தோன்றியது.

இ + அணி = இ + வ் + அணி = இவ்வணி

உ + அணி = உ + வ் + அணி = உவ்வணி

எ + கனி = எ + க் + கனி = எக்கனி

எ + செய்தி = எ + ச் + செய்தி = எச்செய்தி

எ + தலைவன் = எ + த் + தலைவன் = எத்தலைவன்

எ + படை = எ + ப் + படை = எப்படை

அ + ஞாலம் = அ + ஞ் + ஞாலம் = அஞ்ஞாலம்

அ + நாடு = அ + ந் + நாடு = அந்நாடு

அ + மாடு = அ + ம் + மாடு = அம்மாடு

அ + வீடு = அ + வ் + வீடு = அவ்வீடு

இ + கனி = இ + க் + கனி = இக்கனி

இ + செய்தி = இ + ச் + செய்தி = இச்செய்தி

இ + தலைவன் = இ + த் + தலைவன் = இத்தலைவன்

இ + படை = இ + ப் + படை = இப்படை

உ + குறள் = உ + க் + குறள் = உக்குறள்

உ + நாடு = உ + ந் + நாடு = உந்நாடு

உ + மாடு = உ + ம் + மாடு = உம்மாடு

உ + பரிகை = உ + ப் + பரிகை = உப்பரிகை

மேற்குறித்தவை வருமொழி முதலில் வந்த மெய்களே தோன்றியிருப்பதை அறியலாம்.

செய்யுளில் சுட்டு நீளும் பொழுது யகர மெய் தோன்றும் என்பதற்கு எடுத்துக்காட்டு பின்வருமாறு அமையும்.

எ.கா – ஆ + இடை = ஆ + ய் + இடை = ஆயிடை

இங்கு அகரச்சுட்டு ஆகாரமாய் நீண்டு வந்திருப்பதை அறியலாம்.

**எகர வினாமுச் சுட்டின் முன்னர்**

**உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்**

**பிறவரின் அவையும் தூக்கில் சுட்டு**

**நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே** **(நன் : 163)**

என்னும் நூற்பா மேற்குறித்த செய்திகளை அறியத் தருகின்றது.

**குற்றியலுகர விதி**

நிலைமொழியில் குற்றியலுகரச் சொல் இருந்து. வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், உகரம் மெய்யை விட்டு மறையும். குற்றியலுகரத்திற்கு முன் உயிர் வந்து புணரும் பொழுது அக்குற்றியலுகரம் அது சார்ந்த வல்லின மெய்யை விட்டு நீங்கும். நிலைமொழியில் குற்றியலுகரச் சொல் இருந்து. வருமொழி முதலில் ‘ய்’ வரின் உகரம் இகரமாகத் திரியும். முற்றியலுகரமும் சில இடங்களில் இவ்விரு விதிகளையும் பெற்று வரும்.

எ.கா – ஆடு + எங்கே = ஆட் + எங்கே = ஆடெங்கே

ஆடு + யாது = ஆடி + யாது = ஆடியாது

செலவு + இல்லை = செலவ் + இல்லை = செலவில்லை

செலவு + யாது = செலவி + யாது = செலவியாது

**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்;**

**யவ்வரின் இஆம் முற்றும்அற்று ஒரோ வழி** **(நன் :164)**

என்னும் நூற்பா இதனை விளக்குகிறது.

**உயிர் முன் வல்லினம்**

**பொது விதி**

நிலைமொழி இறுதியில் உயிரெழுத்து நின்று வருமொழி முதலில் க். ச், த், ப் என்னும் 4 வல்லின மெய்கள் வருமானால், அவையே மிகும் (இரட்டித்து வரும்). இது சிறப்ப விதிகளில் 4றப்பட்டதற்கு காரணம் பெரும்பான்மையும் வரும் என்பதாகும்.

**அல்வழி**

எ.கா – ஆட + கண்டான் = ஆட + க் + கண்டான் = ஆடக்கண்டான்

ஓடி + சென்றான் = ஓடி + ச் + சென்றான் = ஓடிச்சென்றான்

பாடி + தேடினாள் = பாடி + த் + தேடினாள் = பாடித்தேடினாள்

மகடூஉ + பெரியவள் = மகடூஉ + ப் + பெரியவள் = மகடூஉப்பெரியவள்

வண்ணம் + பறவை = வண்ண + ப் + பறவை = வண்ணப்பறவை

**வேற்றுமை**

கனா + காலம் = கனா + க் + காலம் = கனாக்காலம்

நிலா + சுடர் = நிலவு + ச் + சுடர் = நிலவுச்சுடர்

வழி + தடம் = வழி + த் + தடம் = வழித்தடம்

பலா + பழம் = பலா + ப் + பழம் = பலாப்பழம்

கிழக்கு + தெரு = கீழை + த் + தெரு = கீழைத்தெரு

இயல்பு ஈறு என்பது சொற்களின் அமைப்பில் இயல்பாக உள்ள ஈறு ஆகும். ஆட, ஓடி, பாடி, மகடூ, பலா, வாழை என்பனவற்றில் அ, இ, ஊ, உ, ஆ, ஐ என்பன இயல்பாகவே சொல்லின் ஈற்றில் அமைந்தவை.

விதி ஈறு என்பது சொற்களின் அமைப்பில் இல்லாமல் புணர்ச்சி விதிகளை ஏற்று, விகாரத்தால் ஆன ஈறு ஆகும். வண்ணம், நிலா, மரம், கிழக்கு என்பனவற்றில் மகரமும் ஆகாரமும் குற்றியலுகரமும் இயல்பாக அமைந்த ஈறுகள் ஆகும். இந்த ஈறுகள் புணர்ச்சியில் கெட்டு அகர ஈறாகவும் (ஆட, வண்ண) உகர ஈறாகவும் (நிலவு) ஐகார ஈறாகவும் விகாரம் பெற்றுள்ளன. பின்பு சிலவகைச் சொற்களை குறிப்பிட்டு அவற்றிற்கான புணர்ச்சி விதிகள் தனித் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன.

**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்**

**கசதப மிகும்வித வாதன மன்னே** **(நன் : 165)**

என்னும் நூற்பா இதனை விளக்குகிறது.

**சிறப்பு விதி**

**உயிரீற்று மரப் பெயர்கள்**

வேற்றுமைப் புணர்ச்சியில் உயிரீற்று மரப் பெயர்கள் வந்தால் அவற்றுக்கு முன்வரும் வல்லின எழுத்துக்களுக்கு இனமான மெல்லின எழுத்துக்கள் மிகுந்து வரும். இப் பெயர்கள் நிலை மொழியாக வந்தால் வல்லினம் மிகும். சில இடங்களில் மெல்லினம் மிகுதல் உண்டு.

எ.கா – விள + காய் = விள + ங் + காய் = விளங்காய் - வல்லினம் மிகல்

பலா + பழம் = பலா + ப் + பழம் = பலாப்பழம் - வல்லினம் மிகல்

மா + பழம் = மா + ம் + பழம் = மாம்பழம் - மெல்லினம் மிகல்

மா + தோல் = மா + ந் + தோல் = மாந்தோல் - மெல்லினம் மிகல்

மா + சோலை = மா + ஞ் + சோலை = மாஞ்சோலை – மெல்லினம் மிகல்

**மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து**
**வரப்பெறு னவும்உள வேற்றுமை வழியே** **(நன் : 166)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**அகர ஈற்றுப் புணர்ச்சி**

**சில சொற்களின் முன் இயல்பு புணர்ச்சி**

நிலைமொழியின் இறுதியில் ‘அ’ என்னும் உயிர் எழுத்து வந்து வருமொழியோடு புணர்வது அகர ஈற்றுப் புணர்ச்சி ஆகும். செய்யிய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம், அகர ஈற்றுப் பலவகைப் பெயரெச்சங்கள், அகர ஈற்றுப் பல்வகை வினைமுற்றுகள் ஆறாம் வேற்றுமையின் அகர உருபு, அகர ஈற்றுப் பலவின் பாற்பெயர்கள், அம்ம எனும் உரையசை இடைச்சொல் ஆகியவற்றின் முன்னே வல்லினம் வந்து புணர்ந்தால் இயல்பாகும்.

எ.கா - உண்ணிய + தந்தான் = உண்ணியதந்தான் - செய்யிய

காணிய + போனான் = காணியபோனான் - வினையெச்சம்

கண்ட + காட்சி = கண்காட்சி

கேட்கிற + செய்தி = கேட்கிறசெய்தி

நல்ல + தலைவன் = நல்லதலைவன்

பெரிய + பெட்டி = பெரிய பெட்டி

பலவகைப் பெயரெச்சம் (தெரிநிலை, குறிப்பு பெயரெச்சம் )

| | |
|---|---|
| என்ப + சிலா் = என்பசிலா்<br>ஓடின + குதிரைகள் = ஓடினகுதிரைகள்<br>வாழ்க + தமிழ் = வாழ்கதமிழ்<br>இனியன + பாட்டு = இனியன பாட்டு | அகர ஈற்றுப் பல்வகை வினைமுற்றுகள் |
| தன + கைகள் = தனகைகள்<br>தன + செவிகள் = தனசெவிகள்<br>தன + தம்பியா் = தனதம்பியா்<br>தன + பொருட்கள் = தனபொருட்கள் | ஆறாம் வேற்றுமை உருபு |
| பல + கிளிகள் = பலகிளிகள்<br>சில + பூக்கள் = சிலபூக்கள் | அகர ஈற்றுப் பலவின்பாற் பெயா்கள் |
| அம்ம + குமரா = அம்மகுமரா<br>அம்ம + சேந்தா = அம்மசேந்தா | அம்ம இ.டைச் சொல் |

**செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்**
**பெயரின் எச்சமுற்று ஆறன் உருபே**
**அ.்.றினைப் பன்மை அம்முன் இயல்பே** **(நன் : 167)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வாழிய**

வாழிய எனும் வியங்கோள் வினைமுற்றின் இறுதியிலுள்ள யகர உயிா்மெய், கெடுதலும் உண்டு. அவ்வாறு கெட்டு இகர இறுதியாக நின்றாலும் அதற்குமுன் வரும் வல்லெழுத்துக்கள் மிகாமல் இயல்பாகவே புணரும்.

வாழிய, சாவ, பல, சில என்னும் சொற்கள் அகர ஈற்றுப் புணா்ச்சியில் குறிப்பிடத் தக்கவை. வாழிய என்பது வாழ் என்றானாலும் வல்லெழுத்து வந்து புணரும்போது இயல்பே ஆகும்.

எ.கா - வாழிய + குமரா = வாழி + குமரா = வாழிகுமரா

வாழிய + செந்தமிழ் = வாழி + செந்தமிழ் = வாழிசெந்தமிழ்

வாழிய + தலைவா = வாழி + தலைவா = வாழிதலைவா

வாழிய + பெரியோர் = வாழி + பெரியோர் = வாழிபெரியோர்

**வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்**

**ஏகலும் உரித்து அ.ஃ.து ஏகினும் இயல்பே (நன் : 168)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**சாவ**

சாவ எனப்படும் செய எனும் வாய்ப்பாட்டு வினையெச்சச் சொல் நிலைமொழியாக நின்று வருமொழியோடு சேரும் போது ஈற்று வகர உயிர்மெய் கெட்டு வல்லினம் மிகும்.

எ.கா - சாவ + குத்தினான் = சா + குத்தினான் = சாக்குத்தினான்.

**சாவஎன் மொழிஈற்று உயிர்மெய்சா தலும்விதி (நன் : 169)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**பல,சில**

பல, சில எனும் இரு பெயர்களும் தமக்கு முன்னர்த் தாம் வந்து புணருமிடத்து இயல்பாகும். வருமொழியின் முதலெழுத்து மிகும். நிலைமொழி இறுதியிலுள்ள அகரம் கெட்டு லகரம் றகரமாகத் திரியும். இவ்விரு பெயர்களின் முன்னர் வேறு சொற்கள் வந்து புணருமிடத்து அகரம் கெடாது இயல்பாதலும் கெடுதலுமாக உறழ்ச்சியடையும்.

எ.கா - பல + பல = பல பல சில + சில = சில சில - இயல்பு

பல + பல = பலப்பல சில + சில = சிலச்சில - மிகுதல்

பல + பல = பல் + பல = பற்பல

சில + சில = சில் + சில = சிற்சில - அகரம் கெட்டு லகரம் றகரமாகல்

பல + கலை = பலகலை, பல்கலை

சில + வளை = சிலவளை, சில்வளை

பல + நாள் = பலநாள், பன்னாள்

சில + நாள் = சிலநாள், சின்னாள்

பல + ஆயம் = பலவாயம், ப.ஃ.றாழிசை

அகரம் கெடாமலும் கெட்டும் உறழ்தல்

பல + தாழிசை = பல் + தாழிசை = ப∴ + றாழிசை = ப∴றாழிசை

சில + தாழிசை = சில் + தாழிசை = சி∴ + றாழிசை = சி∴றாழிசை என புணரும்.

**பலசில எனும்இவை தம்முன் தாம்வரின்**

**இயல்பும் மிகலும் அகரம் ஏக**

**லகரம் றகரம் ஆகலும் பிறவிரின்**

**அகரம் விகற்பம் ஆகலும் உளபிற (நன் : 170)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஆகார ஈற்றுப் புணர்ச்சி**

நிலைமொழியின் இறுதியில் 'ஆ' என்னும் உயிர் எழுத்து வந்து வருமொழியோடு புணர்வது ஆகார ஈற்றுப் புணர்ச்சி ஆகும்.

**சில சொற்களின் முன் இயல்பு புணர்ச்சி**

அல்வழிப் புணர்ச்சியில் ஆ, மா, எனும் இரு பெயர்களுக்கும் மியா எனும் முன்னிலை அசை இடைச் சொல்லுக்கும் ஆகார ஈற்று எதிர்மறைப்பலவின்பால் வினைமுற்றுக்கும் முன்னே வரும் வல்லெழுத்துக்கள் மிகாமல் இயல்பாகும்.

எ.கா - ஆ + குறிது = ஆகுறிது, ஆ + சிறியது = ஆசிறியது, ஆ + போயிற்று = ஆபோயிற்று

மா + குறிது = மாகுறிது, மா + சிறியது = மாசிறியது, மா + தின்றது = மாதின்றது

கேண்மியா + தேவா = கேண்மியாதேவா, கேண்மியா + கொற்றா = கேண்மியா கொற்றா

உண்ணா + குதிரைகள் = உண்ணாகுதிரைகள், தின்னா + குதிரைகள் = தின்னா குதிரைகள்,

ஆமா ( காட்டுப்பசு) என்ற சொல்லின் புணர்ச்சியையும் இரட்டுற மொழிதல் எனும் உத்தியால் கொள்ளலாம்.

எ.கா – ஆமா + குறிது = ஆமாகுறிது

ஆமா + பெரிது = ஆமாபெரிது

**அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா (நன் : 171)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**செய்யுட்புணர்ச்சி – குறில் அடுத்த ஆகாரம்**

குற்றெழுத்தின் பின் வந்த ஆகாரநெடிலும் அகரமாகக் குறுகும். உகரம் பெறும். தன் இயல்பாகவும் நிற்கும் என்னும் மூன்று விதிகளையும் செய்யுளில் பெறுவது செய்யுட்புணர்ச்சி ஆகும்.

எ.கா - நிலா + விரி → நிலவிரி - அகரமாதல்

நிலா + விரி → நிலவுவிரி - உகரம்பெறல்

நிலா + விரி → நிலா விரி - இயல்பாதல்

**குறியதன் கீழ்ஆக் குறுகலும்அதனோடு**
**உகரம் ஏற்றலும் இயல்பும்ஆம் தூக்கின் (நன் : 172)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**இகர ஈற்று சிறப்பு விதிகள்**

**செய்யுட்புணர்ச்சி – அன்றி, இன்றி**

அன்றி, இன்றி எனும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களின் ஈற்றிலுள்ள இகரம் செய்யுளில் உகரமாகத் திரிந்து வந்தால் வரும் வல்லெழுத்துக்கள் மிகாமல் இயல்பாகும். நிலை மொழியின் இறுதியில் ‘இ’ என்னும் உயிர் எழுத்து நின்று வருமொழியோடு புணர்வது இகர ஈற்றுப் புணர்ச்சி ஆகும்.

எ.கா – நாளன்று போகி (அன்றி என்பது அன்று என வந்துள்ளது)

உப்பின்று புற்கை உண்க (இன்றி என்பது இன்று என வந்துள்ளது)

அவனன்று அணுவும் ( அன்றி என்பது அன்று என வந்துள்ளது)

உகரமாகத் திரியாவிடில் அன்றிப் போகி, இன்றிப்புற்கை என வல்லெழுத்து மிகுந்து வரும்.

**அன்றி இன்றிஎன் வினைஎஞ்சு இகரம்**
**தொடர்பினுள் உகர மாய்வரின் இயல்பே (நன் : 173)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**நாழி உரி**

நாழி என்னும் அளவைப் பெயருடன் உரி என்னும் அளவைப் பெயர் வந்து சேரும் பொழுது ஈற்று உயிர்மெய் ஆகிய ழி கெட்டு டகர மெய் தோன்றும். உரி என்பதுடன் தொடர்புடைய வருமொழிகள் சேருமிடத்து அதன் பின்னர் யகர உயிர்மெய் தோன்றும்.

எ.கா – நாழி + உரி = நா + உரி = நாட் + உரி = நாடுரி

உரி + உப்பு = உரி + ய + உப்பு = உரியவுப்பு

உரி + பயறு = உரி + ய + பயறு = உரியபயறு

உரியுடன் புணரும் எல்லா வருமொழிகளுக்கும் இவ்விதி ஏற்புடையது அல்ல. எனவே ஏற்பன வரின் என நன்னூலார் குறிப்பிடுகிறார். இவ்விதியை ஏற்காதவை வரும்பொழுது

உரி + அரிசி = உரியரிசி, உரி + ஆழாக்கு = உரியாழாக்கு என புணரும்.

(உரி என்பது அரைநாழியைக் குறிக்குமு).

**உரிவரின் நாழியின் ஈற்றுஉயிர் மெய்கெட**

**மருவும் டகரம் உரியின் வழியே**

**யகர உயிமெய்ஆம் ஏற்பன வரினே (நன் : 174).**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**சுவைப்புளி**

சுவையை உணர்த்தும் புளி எனும் பெயருக்கு முன் வல்லினம் புணர்ந்தால் அவ்வல்லினம் மிகுதல் அன்றி அதற்கு இனமாகிய மெல்லினம் மிகுந்து வரும்.

புளி + கறி = புளிங்கறி, புளி + சோறு = புளிஞ்சோறு

புளி + தயிர் = புளிந்தயிர், புளி + பழம் = புளிம்பழம்

**சுவைப்புளி முன் இன மென்மையும் தோன்றும் (நன் : 175)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**இகர, ஐகார ஈற்றுச் சிறப்பு விதி**

அல்வழிப் புணர்ச்சியில் நிலைமொழி ஈற்றிலுள்ள இகர ஐகாரங்களுக்கு முன் வல்லெழுத்துக்கள் புணர்ந்தால் இயல்பாகும். வல்லெழுத்து மிகும். இயல்பும் மிகுதலுமாகி உறழும்.

எ.கா - செடி + கொடி = செடிகொடி

புலி + சீறுகிறது = புலி சீறுகிறது

யானை + தின்றது = யானைதின்றது — இயல்பாதல்

பனை + பெரியது = பனைபெரியது

உரை + கல் = உரைகல்

மார்கழி + திங்கள் = மார்கழித் திங்கள்

சித்திரை + திங்கள் = சித்திரைத் திங்கள் — வலி மிகுதல்

கிளி + குறிது = கிளிகுறிது, கிளிக்குறிது

கடி + கமலம் = கடிகமலம், கடிக்கமலம்

தினை + சிறிது = தினைசிறிது, தினைச்சிறிது — உறழ்தல்

தினை + பெரிது = தினைபெரிது, தினைப்பெரிது

**அல்வழி இஜம் முன்னர் ஆயின்**

**இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும்.** **(நன் : 176)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஈகார ஈற்றுச் சிறப்பு விதிகள்**

**ஆப்பீ**

அல்வழி, வேற்றுமை எனும் இருவகைப் புணர்ச்சியிலும் ஆப்பீ எனும் பெயருக்கு முன் நாற்கணமும் வந்தால், இறுதியிலுள்ள ஈகாரம் இகரமாகக் குறுகும். அல்வழியில் வருமொழியிலுள்ள வல்லினம் முந்தைய நூற்பா விதிகளில் ஒன்றாகிய இயல்பு ஆகும்.

வேற்றுமையில் ஆப்பீ என்பது இறுதி குருகி வருமொழி முதலிலுள்ள வல்லெழுத்து மிகும். அல்வழியில் ஆப்பீ என்பது இறுதி குறுகி இயல்பாகும்.

எ.கா – ஆப்பீ + அரிது = ஆப்பீயரிது

ஆப்பீ + குறிது = ஆப்பீகுறிது - அல்வழி வல்லினம் இயல்பாதல்

ஆப்பீ + நன்று = ஆப்பீநன்று

ஆப்பீ + வலிது = ஆப்பீவலிது

ஆப்பீ + அருமை = ஆப்பீயருமை
ஆப்பீ + குளிர்ச்சி = ஆப்பீகுளிர்ச்சி - வேற்றுமையில் வல்லினம் மிகுதல்
ஆப்பீ + நாற்றம் = ஆப்பீநாற்றம்
ஆப்பீ + வன்மை = ஆப்பீவன்மை

ஆப்பீ + ஆவின்பீ என்பது பசுஞ்சாணத்தைக் குறிக்கும்

**ஆமுன் பகரஈ அனைத்தும்வரக் குறுக்கும்**

**மேலன அல்வழி இயல்பு கும்மே (நன் : 177)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**பீ, நீ, மீ**

அல்வழிப் புணர்ச்சியில் பீ, நீ, மீ எனும் பெயர்களுக்கு முன்வரும் வல்லெழுத்துக்கள் இயல்பாகும். மீ என்பதற்கு முன்னர் வல்லெழுத்தும் இனமெல்லெழுத்தும் மிகுந்து வரும்.

பீயும் நீயும் வல்லெழுத்து இயல்பாதலையும் மீ என்பது புணர்ச்சியில் இயல்பு, வலிமிகல், இனமெலிமிகல் எனும் மூன்றையும் பெறும்.

எ.கா – பீ + குறியது = பீ குறியது, பீ + பெரியது = பீபெரியது
நீ + சிறியவன் = நீசிரியவன், நீ + தீயன் = நீதியன் - இயல்பு
மீ + செவி = மீசெவி, மீ + கண் = மீகண்
மீ + கூற்று = மீக்கூற்று – வல்லெழுத்து மிகுதல்
மீ + தோல் = மீந்தோல் - மெல்லெழுத்து மிகுதல்

பீ என்பது இடக்கர்ப்பெயர், நீ என்பது முன்னிலை ஒருமைப் பெயர்
மீ என்பது மேன்மைக்குணம் மற்றும் மேலான இடப்பொருளை உணர்த்துவது ஆகும்.

**பவ்வீ நீமீ முன்னர் அல்வழி**

**இயல்புஆம் வலிமெலி மிகலும்ஆம் மிக்கே (நன் : 178)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விளக்குகிறது.

# உயிரீற்றுப் புணரியல் - தொடர்ச்சி

**உயிரீற்றுப் புணரியல் தொடர்ச்சி**

முற்பகுதியில் கூறப்பட்ட ஈகார இறுதிச் சொற்களை அடுத்து வரும் உயிரீற்றுப் புணர்ச்சி இலக்கணம் இப்பகுதியில் கூறப்படுகிறது. உயரீற்றுப் புணர்ச்சியில் இன்றியமையாதவையாக விளங்கும் குற்றியலுகரப் புணர்ச்சி இப்பகுதியில் விவரிக்கப்படுகிறது. அன்றாட மொழி வழக்கில் பெரிதும் பயின்று வரும் திசைப் பெயர். எண்ணுப்பெயர் முதலிய சொற்களின் புணர்ச்சி இலக்கணம் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

**உகர ஈற்றுப் புணர்ச்சி (முற்றியலுகரப் புணர்ச்சி)**

**இயல்பாதல்**

ஒடு என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு, அது என்னும் ஆறாம் வேற்றுமை உருபு எண்ணுப் பெயர்கள், வினைத்தொகை, சுட்டுப் பெயர்கள் ஆகிய நிலைமொழியின் இறுதியில் உள்ள உகரத்திற்கு முன்னர் வல்லெழுத்து வந்தால் அது இயல்பாகப் புணரும். இதுவே உகர ஈற்றுப் புணா.ச்சி ஆகும்.

குற்றியலுகரச் சொற்கள், திசைப் பெயர்கள், எண்ணுப் பெயர்கள், மரப்பெயர்கள் முதலியன உகர ஈற்றுப் புணர்ச்சியில் இடம் பெறுகின்றன.

எ.கா – அவனொடு + சென்றான் = அவனொடு சென்றான்

சேரனது + கை = சேரனதுகை

ஏழு + தலை = ஏழுதலை

ஒரு + புறம் = ஒருபுறம்

சுடு + சோறு = சுடுசோறு

அது + கண்டான் = அதுகண்டான்

(மேலுள்ளவை – வேற்றுமைப் புணர்ச்சி)

இது + சிறியது = இதுசிறியது – அல்வழிப் புணர்ச்சி

உது + போனது = உதுபோனது

ஏழுஇயல்பு எண்ணுப்பெயர் ஒருவிகார எண்ணுப்பெயர்

**மூன்றுஆ றுஉருபுஎண் வினைத் தொகை**
**ஆகும் உகரம் முன்னர் இயல்பு ஆகும்** (நன் : 179)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**செய்யுட் புணர்ச்சி - அது**

அது எனும் சுட்டுப் பெயருக்கு முன்வரும் அன்று எனும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று செய்யுளில் ஆன்று என ஆகும்.

எ.கா - அது + அன்று = அதான்று (அத் +ஆன்று)

**அது முன் வரும் அன்று ஆன்றுஆம் தூக்கின் (நன் : 180)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**குற்றியலுகர ஈற்றுச் சிறப்பு விதிகள்**

**இயல்பாதல்**

வன்றொடர்க் குற்றியலுகரம் நீங்கிய ஐந்து வகைக் குற்றியலுகரங்களுக்கும் முன்னர் வருகின்ற வல்லெழுத்துக்கள் அல்வழிப் புணர்ச்சியில் மிகாமல் இயல்பாகும்.

எ.கா –

1. நெடிற்றொடர்க் குற்றியலுகரம் - காசு + கொடு = காசுகொடு
2. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் - எ.்.கு + சிறியது = எ.்.குசிறியது
3. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் - அரசு + தீது = அரசுதீது
4. மென்றொடர்க் குற்றியலுகரம் - குரங்கு + சென்றது = குரங்கு சென்றது
5. இடைத் தொடர்க் குற்றியலுகரம் - செய்து + பார் = செய்துபார்

வன்றொடர் குற்றியலுகரத்திற்கு அல்வழியிலும் வேற்றுமையிலும் வரும் வல்லெழுத்துக்கள் மிகும்.

எ.கா – எடுத்து + சென்றான் = எடுத்துச்சென்றான் - அல்வழி

கொக்கு + கால் = கொக்குகால் - வேற்றுமை

**வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி (நன் : 181)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

இடைத்தொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம், ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ஒற்று இடையே மிகாத உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனும் நான்கன் முன்னும் வரும் வல்லெழுத்துக்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் மிகாமல் இயல்பாகும்.

எ.கா - இடைத் தொடர்க் குற்றியலுகரம் - மார்பு + கட்டி = மார்புகட்டி

ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் - எ்கு + கூர்மை = எ்குகூர்மை

ஒற்றிடைமிகா நெடிற்றொடர்க் குற்றியலுகரம் - நாகு + சிறுமை = நாகுசிறுமை

ஒற்றிடைமிகா உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் - உருபு + புணரியல் = உருபுபுணரியல்

நெடிற்றொடரிலும் உயிர்த்தொடரிலும் புணர்ச்சியின் போது ஒற்று மிகுவன, ஒற்று மிகாதன என இருவகை உள்ளது. இவ்விரண்டிலும் டு, று என்பன வரின் இவ்வீற்று ட, ற ஒற்றுக்கள் மிகுந்து புணரும். கு, சு, து, பு என்னும் எழுத்துக்களின் ஈற்றுச் சொற்கள் மிகாது.

எ.கா- நாடு + பற்று = நாட்டு + பற்று = நாட்டுப்பற்று

ஆறு + மீன் = ஆற்று + மீன் = ஆற்று மீன்

ஆறு + வெள்ளம் = ஆற்று + வெள்ளம = ஆற்றுவெள்ளம்

இங்கு நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களின் வல்லெழுத்துக்கள் மிகுந்தன.

முரடு + காளை = முரட்டு + க் + காளை = முரட்டுக்காளை

குருடு + பையன் = குருட்டுப் + ப் + பையன் = குரட்டுப்பெயன்

கயிறு + நீளம் = கயிற்று + நீளம் = கயிற்று நீளம்

வயிறு + வலி = வயிற்று + வலி = வயிற்றுவலி

இங்கு உயிர்த்தொடர் குற்றியலுகரங்களில் வல்லெழுத்துக்கள் மிகுந்து வந்துள்ளன.

ஒற்று மிகுந்த நிலையில் நெடிற்றொடர்க் குற்றியலுகரமும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் வன்றொடர்க் குற்றியலுகரமாக மாறும்.

எ.கா - நாடு – நாட்டு, முரடு – முரட்டு, வயிறு – வயிற்று,

சோறு – சோற்று, வீடு – வீட்டு. ஆறு – ஆற்று

இவற்றுக்கு முன்னர் வல்லெழுத்துக்கள் புணருங்கால் அவ்வல்லெழுத்துக்கள் மிகும்.

எ.கா - ஆட்டுகால், கயிற்றுக் கட்டில்

**இடைத்தொடர் ஆய்தத் தொடர்ஒற்று இடையில்**

**மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை (நன் : 182)**

என்னும் நூற்பா இதனை விளக்குகிறது.

**ட ற இரட்டித்தல்**

வேற்றுமைப் புணர்ச்சியில் நெடில் தொடர் குற்றியலுகரம், உயிர்த் தொடர் குறிறியலுகரம் ஆகியவற்றில் குற்றியலுகரம் ஏறி நின்ற டகர றகர மெய்கள் இரட்டிக்கும். அவற்றிற்கு முன்வரும் வல்லெழுத்துக்கள் மிகுந்து வரும். எ.கா -

ஆடு + கால் = ஆட்டு + கால் = ஆட்டுக்கால்

சோறு + சுவை = சோற்று + சுவை = சோற்றுசுவை

நாடு + தந்தை = நாட்டு + தந்தை = நாட்டுத்தந்தை

ஆறு + பாலம் = ஆற்று + பாலம் = ஆற்றுப்பாலம்

நெடில் தொடரில் ட, ற ஒற்றுக்கள் இரட்டித்து வல்லினம் மிகுந்தன

வகிடு + தலை = வகிட்டு + தலை = வகிட்டுத்தலை

தவிடு + சிவப்பு = தவிட்டு + சிவப்பு = தவிட்டுச் சிவப்பு

கயிறு + தொட்டில் = கயிற்று +தொட்டில் = கயிற்றுத்தொட்டில்

வயிறு + பசி = வயிற்று + பசி = வயிற்றுப் பசி

உயிர்த் தொடரில் ட,ற இரட்டித்து வல்லினம் மிகுந்தன

**நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்**

**டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே (நன் : 183)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விளக்குகிறது.

**வன் தொடர்க் குற்றியலுகரம்**

வேற்றுமைப் புணர்ச்சியில் சில மென்றொடர்க் குற்றியலுகரச் சொற்கள் தமக்கு இனமாகிய வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்களாகத் திரிவதில்லை. சில திரிவதில்லை என்று கூறியதால் திரியும் சொற்களும் உள்ளன என்பது அறியத்தக்கது.

எ.கா - பந்து + வீச்சு = பந்துவீச்சு

வண்டு + கால் = வண்டுக்கால்

நண்டு + ஓடு = நண்டோடு

நுங்கு + சுவை = நுங்குச்சுவை

இவை வன்நொடறாகத் திரியாதன ஆகும்.

மருந்து + பை = மருந்துப்பை

இரும்பு + பாதை = இருப்புப் பாதை

கன்று + ஆ = கற்றா

கன்று + குட்டி = கன்றுக்குட்டி

இவை வன்றொடராகத் திரிந்தன ஆகும்.

குரங்கு + மனம் = குரங்கு மனம்

நஞ்சு + அரவம் = நச்சரவம்

வன்றொடராகத் திரிவன உறழ்தலும் உண்டு.

எ.கா – மருந்துப்பை - மருத்துப்பை, குரங்குமனம் - குரக்குமனம்,

இரும்புப்பாதை - இருப்புப்பாதை, கரும்புச்சாறு - கருப்பஞ்சாறு

**மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்**

**தம்இன வன்றொடர் ஆகா மன்னே** **(நன் : 184)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஐகார ஈற்றுக் குற்றியலுகரம்**

ஐகாரச் சாரியினை இறுதியில் உடைய குற்றியலுகரச் சொற்களும் உள்ளன. புணர்ச்சியின் போது ஐகாரச் சாரியை சொல்லின் ஈறாக அமையும்.

எ.கா – ஆண்டு + சென்றான் = ஆண்டைச் சென்றான்
பண்டு + காலம் = பண்டைக்காலம்
இன்று + நாள் = இற்றைநாள்
} - அல்வழி

அன்று + திங்கள் = அற்றைத் திங்கள்
முந்து + வளம் = முந்தைவளம்
நேற்று + கூலி = நேற்றைக் கூலி
} - வேற்றுமை

**ஐஈற்று உடைக்குற் றுகரமும் உளவே** **(நன் : 185)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**திசைப் பெயர்**

திசைப் பெயருக்கு முன்னர்த் திசைப் பெயரும் வேறு பெயர்களும் வந்து புணருமிடத்து நிலைமொழியாகிய திசைப் பெயரின் இறுதியிலுள்ள குகர உயிர்மெய், ககர மெய் கெடுதலும் றகர மெய் னகர லகர மெய்யாகத் திரிதலும் ஆகும்.

எ.கா -

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு - உயிர் மெய்யும் ககர மெய்யும் கெட்டன. – திசைப்பெயர்

தெற்கு + மேற்கு = தென்மேற்கு - உயிர்மெய் கெட்டது; ற் ன் ஆனது - முன்னர்த் திசைப்பெயர்.

மேற்கு + வானம் = மேல்வானம் - உயிர் மெய் கெட்டது ற் ல் ஆனது

கிழக்கு + திசை = கீழ்த்திசை – உயிர்மெய், ககரமெய்,அகரம் கெட்டன முதல் நீண்டது

குணக்கு + திசை = குணதிசை – திசைப்பெயர் முன்னர்

வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, குணக்கு, குடக்கு எனும் திசைப்பெயர்களில் க்கு ஈற்று உயிர்மெய்யுடன் முந்தைய ககர ஒற்று நீங்கும். தெற்கு என்பதில் குகரம் நீங்கி. றகரம் னகரமாகும். மேற்கு என்பதில் குகரம் நீங்கி, றகரம் லகரமாகும் .

இந்நூற்பாவில் பிற என்ற சொல் மிகையாக வருவதனால். கிழக்கு என்பதில் முதல் நீண்டு ழகரத்தின் அகரம் கெடும். (கிழக்கு – கீழ்) என்பதும் கிழக்கு, மேற்கு என்பனவற்றில் மேற்கூறிய விதிகளோடு ஐகாரம் மிகும் என்பதும் திசைச்சொற்கள் திரியாமல் இயல்பாகப் புணரும் என்பதும் உணர்த்தப்படுகின்றன.

எ.கா –

கிழக்கு +நாடு = கிழ +நாடு = கீழ் +நாடு =கீழ்நாடு –முதல் நீண்டு ழகரத்திலுள்ள அகரம் கெட்டது.

கிழக்கு + நாடு = கிழ + நாடு = கீழ் + நாடு = கீழை +நாடு = கீழைநாடு – முதல் நீண்டு அகரம் கெட்டு ஐகாரம் மிகுந்தது.

மேற்கு +நாடு = மேற் +நாடு = மேல் +நாடு = மேலை +நாடு =மேலைநாடு –ஐகாரம் மிகுந்தது.

வடக்கு + தெற்கு = வடக்குத்தெற்கு
கிழக்கு + மேற்கு = கிழக்குமேற்கு
வடக்கு + ஊர் = வடக்கூர்
தெற்கு + ஊர் = தெற்கூர்
} - இயல்பாயின

**திசையொடு திசையும் பிறவும் சேரின்**
**நிலைஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்**
**றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற (நன் : 186)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**தெங்கு**

காய் என்னும் சொல் வந்து புணருமிடத்து தெங்கு எனும் மரப்பெயரின் முதல் நீண்டு இறுதியிலுள்ள குகர உயிர்மெய் கெடும்

எ.கா – தெங்கு + காய் = தேங் + காய் = தேங்காய்

**தெங்குநீண்டு ஈற்றுஉயிர் மெய்கெடும் காய்வரின் (நன் : 187)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி**

ஒன்று, முதல் பத்து வரை உள்ள எண்ணுப் பெயர்களும் ஏழு தவிர்த்த பிற யாவும் குற்றியலுகரச் சொற்களே ஆகும். எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்கும். எண்ணுப்பெயர்முன் எண், நிறை, அளவு, பிற பெயர்கள் முதலியன வரும். அத்தகைய எண்ணுப் பெயர்கள் நிலைமொழியாக நிற்க வருமொழியில் எண்ணுப் பெயர்களோ, பிற சொற்களோ வந்து சேரும்போது நிகழும் மாற்றங்களைக் விளங்கிக் கொள்வது அவசியம்.

ஒன்று முதல் எட்டு ஈறாக உள்ள எண்ணுப் பெயர்களுக்கு முன்னர் எண்ணுப்பெயர் நிறுத்தலளவுப்பெயர் முதலிய பிற அளவுப் பெயர்கள் மற்றும் பிற பெயர்களும் வந்து புணருமிடத்து நிலைமொழி எண்ணுப்பெயர்கள் விகாரமடையும். அவற்றுள் ஒன்று, இரண்டு எனும் இரு பெயர்களிலும் முதலெழுத்து நீளும் (ஒ –ஓ, இ-ஈ ) மூன்று, ஆறு, ஏழு எனும் மூன்று பெயர்களிலும் முதலெழுத்து குறுகும். (மூ-மு, ஆ-அ, ஏ-எ) ஒன்று இரண்டு மூன்று. நான்கு, ஐந்து, எட்டு எனும் ஆறு பெயர்களிலும் இறுதியிலுள்ள உயிர்மெய் (று, டு, மு, கு, து) கெடும். ஏழு என்பதன் இறுதியிலுள்ள உகரம் கெடும். இவ்விகாரங்களை எண்ணுப் பெயர்கள் ஏற்புடைய இடங்களில் கொள்ளும். இதனை அட்டவணை வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

| நிலை மொழி + வருமொழி | மாற்றம் | விளக்கம் |
|---|---|---|
| ஒன்று + ஆயிரம் | ஓராயிரம் | முதல் நீண்டது |
| இரண்டு + ஆயிரம் | ஈராயிரம் | முதல் நீண்டது |
| மூன்று + தமிழ் | முத்தமிழ் | முதல் குறுகியது |
| ஆறு + சுவை | அறுசுவை | முதல் குறுகியது |
| ஏழு + நிலை | எழுநிலை | முதல் குறுகியது |
| மூன்று + உலகு | மூவுலகு | முதல் குறுகாமல் பிற கெட்டன |
| நான்கு + ஆயிரம் | நாலாயிரம் | ‘கு’ கெட்டு ன் > ல் ஆனது |
| நான்கு + கவி | நாற்கவி | ‘கு’ கெட்டு ன் > ற் ஆனது |

| | | |
|---|---|---|
| நான்கு + மணி | நான்மணி | ‘கு’ கெட்டு ‘ன்’ - இயல்பானது |
| ஐந்து + பால் | ஐம்பால் | ‘து’ கெட்டு ‘ந்’ -வருமொழிக்கேற்ப மெல்லினமானது |
| எட்டு + வகை | எண்வகை | ‘டு’ கெட்டு ‘ட் – ண்’ ஆனது |
| பத்து ஒன்று | பதினொன்று | ‘து’ கெட்டு ‘இன் சாரியை ஆனது |
| பத்து இரண்டு | பன்னிரண்டு | ‘து’ கெட்டு ‘த்’ – ‘ன்’ ஆன்து |

ஏற்புடைய இடங்களில் என்றதனால் இவ்விகாரங்களில் ஒன்றையோ பலவற்றையோ எண்ணுப் பெயர்கள் அடையும். ஏற்புடைய இடங்களில் என்பதைப் பின்வரும் சிறப்பு விதிகளுக்கும் கொள்ளலாம். எண்ணுப் பெயர்கள் வருமொழியோடு புணருமிடத்து விகாரமுற்று நிற்கும். இதனை எடுத்துக்காட்டுகள் வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

ஒன்று – ஒன். ஓன் இரண்டு - ஈரண், இரண்

மூன்று – முன், மூன் நான்கு – நான்

ஐந்து – ஐந் ஆறு – அறு

ஏழு - எழு. ஏழு எட்டு – எட்

இக்கருத்து நிலைமொழி எண்ணுப் பெயர் அடையும் விகாரமாகிய பொது விதியை விவரிக்கிறது. இதன் முடிவுகளைப் பின்வரும் சிறப்பு விதிகளும் ஏற்கும். ஆறு, ஏழு எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி முடிவு இங்கு முற்றுப் பெறாததால் அவற்றிற்கான எடுத்துக்காட்டினைப் பின்வரும் சிறப்பு விதிகளில் காணலாம்.

எ.கா-

ஆறு + பத்து = அறுபது, ஆறு + நூறு = அறுநூறு, ஆறு + நாழி = அறுநாழி, ஆறு + கழஞ்சு = அறுகழஞ்சு, ஆறு + சாண் = அறுசாண், ஆறு + வகை = அறுவகை, ஆறு + கை = அறுகை

ஏழு + பத்து = எழுபது, ஏழு + நூறு = எழுநூறு, ஏழு + ஆயிரம் = ஏழாயிரம், ஏழு + கழஞ்சு = எழுகழஞ்சு, ஏழு + நாழி = எழுநாழி, ஏழு + சாண் = எழுசாண், ஏழு + அடி = ஏழடி, ஏழு + வகை = எழுவகை, ஏழு + கடல் = எழுகடல்

எண்ணுப் பெயர், நிறையளவுப் பெயர், பிற அளவுப் பெயர்கள் (முகத்தல், நீட்டல்) முதலிய பிற பெயர்கள் வந்து புணருமிடத்து ஆறு, ஏழு ஆகிய எண்ணுப் பெயர்கள் விகாரம் (திரிபு) அடைந்தன.

வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் நிலைமொழி முதலிலுள்ள நெடில் குறுகாமையை ஏழடி என்பதில் காணலாம். இவ்வாறே ஏழாயிரம், ஆறாயிரம் என்பனவும் வரும். பிற எண்களிலும் இதனைக் காணலாம். எனவே வருமொழி முதலில் உயிர்வரின் நிலைமொழி நெடில் குறுகாது என்றும் மெய்வரின் நெடில் குறுகும் என்றும் கொள்ளலாம்.

**எண்நிறை அளவு பிறவும் எய்தின்**

**ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ணுள்**

**முதல்ஈர் எண்முதல் நீளும் மூன்றுஆறு**

**ஏழு குறுகும்ஆறு ஏழ்அல் லவற்றின்**

**ஈற்றுஉயிர் மெய்யும் ஏழன் உயிரும்**

**ஏகும் ஏற்புழி என்மனார் புலவர் (நன் : 188)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**சிறப்பு விதிகள் ( நிலைமொழி விகாரம்)**

**ஒன்று, இரண்டு**

(பொது விதி முடிவுடன்) ஒன்று எனும் பெயரின் னகரம் ரகரமாகும். இரண்டு என்பதன் ணகரமும் அகரமும் கெடும். அவ்விரு எண்களின் ரகர ஒற்றுடன் உகரம் வரும். உகரம் வருமிடத்து எண்ணுப் பெயர்களின் முதல் குறிலாகவும், உகரம் வராதவிடத்து முதல் நெடிலாகவும் அமையும். இவ்விதிப்படி ஒன்றும் இரண்டும்

ஒன்று – ஒன், ஓர், ஒன், ஒரு

இரண்டு - ஈரண், ஈர், இரண், இரு

எனத் திரிந்து வரும்.

எ.கா - ஒன் + பத்து = ஒன் + பது = ஒரு + பது = ஒருபது

ஒன்று + ஆயிரம் = ஒன் + ஆயிரம் = ஓர் + ஆயிரம் = ஓராயிரம்

ஒன்று + கழஞ்சு = ஒன் + கழஞ்சு = ஒரு + கழஞ்சு = ஒருகழஞ்சு

ஒன்று + நாழி = ஒன் + நாழி = ஒரு + நாழி = ஒருநாழி

ஒன்று + ஆழாக்கு = ஒன் + ஆழாக்கு = ஓர் + ஆழாக்கு = ஓராழாக்கு

ஒன்று + அடி = ஒன் + அடி = ஓர் + அடி = ஓரடி

ஒன்று + நாடு = ஒன் + நாடு = ஒரு + நாடு = ஒருநாடு

இரண்டு + நூறு = இரண் + நூறு = இரு + நூறு = இருநூறு

இரண்டு + ஆயிரம் = ஈரண் + ஆயிரம் = ஈர் + ஆயிரம் = ஈராயிரம்

இரண்டு + கழஞ்சு = இரண் + கழஞ்சு = இரு + கழஞ்சு = இருகழஞ்சு

இரண்டு + நாழி = இரண் + நாழி = இரு + நாழி = இருநாழி

இரண்டு + உழக்கு = ஈரண் + உழக்கு = ஈர் + உழக்கு = ஈருழக்கு

ஒன்று இரண்டு என்பனவற்றின் முன்னர் எண்ணுப்பெயர். நிறைப்பெயர், அளவுப் பெயர்கள் மற்றும் பிற பெயர்கள் புணர்ந்தன. ஓர், ஈர் என்பன உயிர் முதல் மொழிக்கும் ஒரு, இரு என்பன மெய்ம் முதல் மொழிக்கும் நிலைமொழியாயின.

**ஒன்றன் புள்ளி ரகரம் ஆக**

**இரண்டன் ஒற்றுஉயிர் ஏகஉவ் வருமே (நன் : 189)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**மூன்று**

(பொது விதி முடிவுடன் ) மூன்று எனும் எண்ணுப் பெயரின் னகரம் கெடும். வருமொழி முதல் மெய்யாகத் தெரியும்.

மூன்று முன் - மு, மு + வருமொழி முதல் மெய்

மூன் - மூ

எ.கா - மூன்று + பத்து = முன் + பது = மு + ப்து = முப்பது

மூன்று + ஆயிரம் = மூன் + ஆயிரம் = மூ + ஆயிரம் = மூவாயிரம்

மூன்று + நூறு = முன் + நூறு = முந்நூறு

மூன்று + குறுணி = முன் + குறுணி = மு + குறுணி = முக்குறுணி

மூன்று + வராகன் = முன் + வராகன் = மு + வராகன் = முவ்வராகன்

மூன்று + அடி = மூன் + அடி = மூ + அடி = மூவடி

மூன்று + ஆண்டு = மூன் + ஆண்டு = மூ + ஆண்டு = மூவாண்டு

மூன்று + வட்டி = முன் + வட்டி = முவ்வட்டி

மூன்று என்பதன் முன்னர் எண்ணுப் பெயர், நிறைப்பெயர், பிற அளவுப்பெயர் மற்றும் பிறபெயர் ஆகியன புணர்ந்தன.

உயிர் முதல்வர மூ என நெடிலாகவும் மெய்ம் முதல்வர மு எனக் குறிலாகவும் மூன்று ஆனது.

**மூன்றன் உறுப்புஅழிவும் வந்தது ஆகும். (நன் : 190)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**நான்கு**

(பொது விதி முடிவுடன் ) நான்கு எனும் எண்ணுப் பெயரின் னகர மெய் லகரமாகவும் றகரமாகவும் திரியும்.

நான்கு – நான், நால், நாள்

எ.கா - நான்கு + பத்து = நான் + பத்து = நாற்பது

நான்கு + ஆயிரம் = நான் + ஆயிரம் = நால் + ஆயிரம் = நாலாயிரம்

நான்கு + கழஞ்சு = நான் + கழஞ்சு = நாற்கழஞ்சு

நான்கு + உழக்கு = நான் + உழக்கு = நால் + உழக்கு = நாலுழக்கு

நான்கு + அடி = நான் + அடி = நால் + அடி = நாலடி

நான்கு + மணி = நான் + மணி = நான்மணி

நான்கு + வகை = நான் + வகை = நால்வகை

மெல்லெழுத்து வந்து புணருமிடத்து நான்கின் மெய்திரியாது நின்றது. எனவே மெல்லெழுத்துவரின் திரியாது எனக் கொள்ளலாம். நான்கின் முன்னர் எண்ணுப்பெயர் முதலியன புணர்ந்தமையை மேற்குறித்த எடுத்துக் காட்டு மூலம் அறியலாம்.

உயிரும் இடையினமும், வருமிடத்து நான்கு என்பது நால் என்றும், வல்லெழுத்து வருமிடத்து நான் என்றும் திரிவதைக் காணலாம்.

**நான்கண் மெய்யே வறஆ கும்மே (நன் : 191)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஐந்து**

(பொதுவிதி முடிவுடன்) ஐந்து எனும் எண்ணுப் பெயரின் நகரம் வருமொழி முதலில் உள்ள மெய்யாகத் திரியும். அது வருமொழி முதலில் உள்ள வல்லினத்திற்கு இனமெல்லினமாகத் திரியும். நகரம் கெடும்.

அடைவது என்பது வருமொழி முதலாக வருவது ஆகும்.

ஐந்து – ஐந் - ஐ + மெலி - ஐ

எ.கா – ஐந்து + மூன்று = ஐந் + மூன்று = ஐம்மூன்று

ஐந்து + கழஞ்சு = ஐந் + கழஞ்சு = ஐங்கழஞ்சு

ஐந்து + ஆழாக்கு = ஐந் + ஆழாக்கு = ஐயாழாக்கு

ஐந்து + ஆறு = ஐந் + ஆறு = ஐ + ஆறு = ஐயாறு

ஐந்து + வழி = ஐந் + வழி = ஐ + வழி = ஐவழி

இங்கு நகரம் வருமொழி முதலாகத் திரிதல், வருமொழி இனமாகத் திரிதல், கெடுதல் ஆகிய விகாரங்களை அடைந்தது. ஐந்தன் முன்னர் எண்ணுப்பெயர் முதலியன புணர்ந்தன.

மேற்கண்ட சான்றுகளிலிருந்து ஐந்து என்பது மெல்லினம் வந்து புணருங்கால் மெல்லினமாகவும் வல்லினம் புணருங்கால் வல்லினத்திற்கு இன மெல்லினமாகவும் திரிந்து உயிரும் இடையினமும் வந்து புணருங்கால் கெட்டும் விகாரமடையும்.

**ஐந்தன்ஒற்று அடைவதும் இனமும் கெடும்** **(நன் : 192)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**எட்டு**

(பொதுவிதி முடிவுடன்) எட்டு எனும் எண்ணின் டகரமெய் ணகர மெய்யாகத் திரியும்.

எட்டு – எட் - எண்

எ.கா – எட்டு + இரண்டு = எட் + இரண்டு = எண் + இரண்டு = எண்ணிரண்டு

எட்டு + கழஞ்சு = எட் + கழஞ்சு = எண் + கழஞ்சு = எண்கழஞ்சு

எட்டு + நாழி = எட் + நாழி = எண் + நாழி = எண்ணாழி

எட்டு + வடை = எட் + வடை = எண் + வடை = எண்வடை

இங்கு எட்டன் முன்னர் எண்ணுப்பெயர் முதலியன புணர்ந்துள்ளன.

**எட்டன் உடம்பு ணவ்வாகும் என்ப** **(நன் : 193)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தொண்ணூறு, தொள்ளாயிரம்**

ஒன்பது எனும் எண்ணுப்பெயருடன் பத்து, நூறு ஆகிய எண்ணுப் பெயர்கள் புணரும் அவ்வமயம், பத்து எனும் பெயர் நூறு எனவும், நூறு எனும் பெயர் ஆயிரம் எனவும் மாறும்.

ஒன்பது எனும் பெயருக்கு முன்னே தகர மெய் வந்து, பது என்பது கெடும். ஒன்பதிலுள்ள னகர மெய், பத்து வருமொழியாக வருமிடத்து ணகரமாகவும் நூறு வருமொழியாக வருமிடத்து ளகரமாகவும் திரியும்.

ஒன்பது + பத்து = ஒன்பது நூறு = த்ஒன்பது + நூறு = த்ஒன் + நூறு = த்ஒண் + நூறு = தொண்ணூறு

ஒன்பது + நூறு = ஒன்பது + ஆயிரம் = த்ஒன்பது + ஆயிரம் = த்ஒன் + ஆயிரம் = த்ஒண் + ஆயிரம் = த்ஒள் + ஆயிரம் = தொள்ளாயிரம்

ப∴து என்பது பத்து ஆகும். உயிர் வருமொழியாக வருவதால் ப∴து என நூற்பா குறிப்பிடுகின்றது.

**ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின்**

**முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு**

**தகரம் நிறீஇப் ப∴துஅகற்றி னவ்வை**

**நிரலே ணளவாத் திரிப்பது நெறியே (நன் : 194)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**எண்ணுப்பெயர் முன் பத்து**

ஒன்று முதல் எட்டு ஈறாக உள்ள எண்ணுப் பெயர்களுக்கு முன்னர்ப் பத்து எண்ணுப் பெயர் புணருமிடத்து பத்து என்பதன் இடையிலுள்ள தகரமெய் கெடுதலும் தகரமெய் ஆய்தமாகத் திரிதலும் ஆகும்.

பத்து என்பது பது, ப∴து எனவும் குறிப்பிடப்படும்.

எ.கா – ஒன்று + பத்து = ஒருவது, ஒருப∴து

இரண்டு + பத்து = இருபது, இருப∴து

மூன்று + பத்து = முப்பது, முப்ப∴து

நான்கு + பத்து = நாற்பது, நாற்ப∴து

ஐந்து + பத்து = ஐம்பது, ஐம்ப∴து

ஆறு + பத்து = அறுப∴து

ஏழு + பத்து = எழுபது, எழுப∴து

எட்டு + பத்து = எண்பது, எண்ப∴து

மேற்குறித்த இருவிதிகளையும் ஒரு சொல்லே ஏற்பதால் இது ஓர் உறழ்ச்சி (விகற்பம்) முடிவாகும். நிலைமொழி எண்கள் ஒரு, இரு எனத் திரிவதற்கு முன்னர் இவ்விதிகள் கூறப்பட்டன. முதலிரு நான்காம் எண். முதலிலுள்ள ஒன்று முதலான எட்டு எண்கள் ஆகும்.

**முதல்இரு நான்காம் எண்முனர்ப் பத்தின்**

**இடைஒற்று ஏகல் ஆய்தம் ஆகல்**

**எனஇரு விதியும் ஏற்கும் என்ப (நன் : 195)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ப∴து முன் எண்ணுப்பெயர்.**

ஒருப∴து முதலிய எண்ணுப்பெயர்களுக்கு முன்னர் எண்ணுப் பெயரும் எண்ணுப்பெயரை அடுத்து வரும் பிற பெயர்களும் புணரும். அவை புணருமிடத்து, ப∴து என்பதன் ஆய்தம் கெட்டு தகர மெய்வரும்.

ப∴து என்பது பத்து ஆகும்.

எ.கா – ஒருப∴து + இரண்டு = ஒருபத்து + இரண்டு = ஒருபத்திரண்டு

ஒருப∴து + மூன்றுமணி = ஒருபத்து + மூன்றுமணி = ஒருபத்துமூன்றுமணி

இருப∴து + நான்கு = இருபத்து + நான்கு = இருபத்துநான்கு

இருப∴து + நான்குவீடு = இருபத்து + நான்குவீடு = இருபத்துநான்குவீடு

முப்ப∴து + ஐந்து = முப்பத்து +ஐந்து = முப்பத்தைந்து

முப்ப∴து + ஐந்துகனி = முப்பத்து + ஐந்துகனி = முப்பத்தைந்துகனி

நாற்ப∴து + ஆறு = நாற்பத்து + ஆறு = நாற்பத்தாறு

நாற்ப∴து + ஆறுசெடி = நாற்பத்து + ஆறுசெடி = நாற்பத்தாறுசெடி

ஐம்ப∴து + ஏழு = ஐம்பத்து + ஏழு = ஐம்பத்தேழு

ஐம்ப∴து + ஏழுதலை = ஐம்பத்து + ஏழுதலை = ஐம்பத்தேழுதலை

அறுப∴து + எட்டு = அறுபத்து + எட்டு = அறுபத்தெட்டு

அறுப∴து + எட்டுநாடு = அறுபத்து + எட்டுநாடு = அறுபத்தெட்டுநாடு

எழுப∴து + ஒன்பது = எழுபத்து + ஒன்பது = எழுபத்தொன்பது

எழுப.ஃ.து + ஒன்பதுநாள் = எழுபத்து + ஒன்பதுநாள் = எழுபத்தொன்பதுநாள்

எண்ப.ஃ.து + ஒன்று = எண்பத்து + ஒன்று = எண்பத்தொன்று

எண்ப.ஃ.து + ஒன்றுகுறள் = எண்பத்து + ஒன்றுகுறள் = எண்பத்தொன்றுகுறள்

**ஒருப.ஃ.து ஆதிமுன் ஒன்றுமுதல் ஒன்பான்**

**எண்ணும் அவைஊர் பிறவும் எய்தின்**

**ஆய்தம் அழியஆண்டு ஆகும் தவ்வே (நன் : 196)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**பத்து, ஒன்பது**

பத்து என்னும் எண்ணுப்பெயருக்கு முன்னர் ஒன்றுமுதல் பத்து ஈறாக உள்ள எண்ணுப் பெயர்களும் ஆயிரம், கோடி எனும் எண்ணுப் பெயர்களும் நிறைப்பெயர். அளவுப் பெயர், மற்றும் பிற பெயர்களும் புணரும். அந்நிலையில் பத்து என்பதன் இறுதியிலுள்ள உயிர்மெய்யாகிய துகரம் கெட்டு இன் அல்லது இற்றுச் சாரியைகளுள் பொருத்தமானது வரும். ஒன்பது எனும் பெயரும் அவ்வாறே ஆகும். ஒன்பதும் இன் அல்லது இற்று பெற்று வரும்.

பத்து என்பது பதின் (பத் + இன்), பதிற்று (பத் + இற்று) என வரும்.

ஒன்பது என்பது ஒன்பதின் (ஒன்பது + இன்), ஒன்பதிற்று (ஒன்பது + இற்று) என வரும்.

எ.கா – பத்து + ஒன்று = பத் + ஒன்று = பத் + இன் + ஒன்று = பதினொன்று

பத்து + பத்து = பத் + பத்து = பத் + இற்று + ஒன்று = பதிற்றொன்று

பத்து + பத்து = பத் + பத்து = பத் + இற்று + பத்து = பதிற்றுப்பத்து

பத்து + ஆயிரம் = பத் + ஆயிரம் = பத் + இன் + ஆயிரம் = பதினாயிரம்

பத்து + கோடி = பத் + கோடி = பத் + இற்று + கோடி = பதிற்றுக்கோடி

பத்து + கழஞ்சு = பத் + கழஞ்சு = பத் + இன் + கழஞ்சு = பதின்கழஞ்சு

பத்து + நாழி = பத் + நாழி = பத் + இன் + நாழி = பதினாழி

பத்து + மடங்கு = பத் + மடங்கு = பத் + இன் + மடங்கு = பதின்மடங்கு

ஒன்பது + ஆயிரம் = ஒன்பது + இன் + ஆயிரம் = ஒன்பதினாயிரம்

ஒன்பது + கலம் = ஒன்பது + இற்று + கலம் = ஒன்பதிற்றுக்கலம்

ஒன்பது + மடங்கு = ஒன்பது + இன் + மடங்கு = ஒன்பதின்மடங்கு

**ஒன்பதுமுதல் ஈரைந்து ஆயிரம்கோடி**

**எண்நிறை அளவும் பிறவரின் பத்தின்**

**ஈற்றுஉயிர் மெய்கெடுத்து இன்னும்இற்றும்**

**ஏற்பது ஏற்கும் ஒன்பதும் இனைத்தே (நன் : 197)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விளக்குகிறது.

**பத்து முன் இரண்டு**

பத்து என்பதற்கு முன்னர் இரண்டு எனும் பெயர் புணருமிடத்துப் பத்தின் ஈற்று உயிர்மெய்யாகிய துகரம் கெட்டுத் தகரமெய் னகரமெய்யாகத் திரியும்.

பத்து என்பது பத் - பன் என வரும்.

எ.கா - பத்து + இரண்டு = பத் + இரண்டு = பன் + இரண்டு = பன்னிரண்டு

**இரண்டு முன்வரின் பத்தின்ஈற்று உயிர்மெய்**

**காந்திட ஒற்றுள ஆகும் என்ப (நன் : 198)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**எண்கள் இரட்டித்தல்**

ஒன்பது அல்லாத ஒன்று முதல் பத்து ஈறாகிய ஒன்பது எண்ணுப் பெயர்களும் தமக்கு முன்னர்த் தாம் வந்து புணருமிடத்து (இரட்டிக்குமிடத்து) நிலைமொழி எண்ணின் முதலெழுத்து அல்லாத எழுத்துக்கள் யாவும் கெடும். பின்னர் வருமொழி உயிராயின் வகரமும் மெய்யாயின் புணரும் மெய்யும் மிகும்.

எ.கா – ஒன்று + ஒன்று = ஒ + ஒன்று = ஒ + வ் + ஒன்று = ஒவ்வொன்று

இரண்டு + இரண்டு = இ + இரண்டு = இ + வ் + இரண்டு = இவ்விரண்டு

மூன்று + மூன்று = மூ + மூன்று = மு + ம் + மூன்று = மும்மூன்று

நான்கு + நான்கு = ந + நான்கு = ந + ந் + நான்கு = நந்நான்கு

ஐந்து + ஐந்து = ஐ + ஐந்து = ஐ + வ் + ஐந்து = ஐவைந்து

ஆறு + ஆறு = அ + ஆறு = அ + வ் + ஆறு = அவ்வாறு

ஏழு + ஏழு = எ + ஏழு = எ + வ் + ஏழு = எவ்வேழு

எட்டு + எட்டு = எ + எட்டு = எ + வ் + எட்டு = எவ்வெட்டு

பத்து + பத்து = ப + பத்து = ப + ப் + பத்து = பப்பத்து

மூன்று, நான்கு, ஆறு, ஏழு ஆகியவற்றின் முதலெழுத்துக்கள் குறுகி வரும்.

**ஒன்பது ஒழித்தஎண் ஒன்பதும் இரட்டின்**
**முன்னதின் முன்அல ஓட உயிர்வரின்**
**வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல்நெறி** **(நன் : 199)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஊகார ஈற்றுச் சிறப்பு விதி**

பூ என்னும் பெயர்ச் சொல்லுக்கு முன்னர் வந்து புணரும் வல்லினத்திற்கு இனமான மெல்லின எழுத்து மிகும்.

எ.கா – பூ + கொடி = பூங்கொடி, பூ + செடி = பூஞ்செடி

பூ + தோட்டம் = பூந்தோட்டம் , பூ + பொழில் = பூம்பொழில்

பூக்கொடி, பூச்செடி, பூத்தோட்டம், பூப்பெட்டி என வல்லினம் மிகுதல் பொதுவிதியாகும் என்பது அறியத் தக்கது.

**பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்** **(நன் : 200)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஏகார. ஓகார ஈற்றுச் சிறப்பு விதிகள்**

ஏகார, ஓகார இடைச்சொற்களுக்கு முன்னர் வல்லெழுத்து வந்தால் இயல்பாகப் புணரும்.

எ.கா – அவனே + கண்டான் = அவனே கண்டான்

அவனோ + தந்தான் = அவனோ தந்தான்

**இடைச்சொல் ஏஓ முன்வரின் இயல்பே** **(நன் : 201)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஐகார ஈற்றுச் சிறப்பு விதிகள்**

வேற்றுமைப் புணர்ச்சியில் இறுதி (ஐ) கெட்டு, அம் சாரியை பெறும் ஐகார ஈற்றுச் சொற்களும் உள்ளன. அவற்றை சான்றுகாட்டி விளக்கலாம்.

எ.கா - தாழை + பூ = தாழ் + அம் + பூ = தாழம்பூ

எலுமிச்சை + பழம் = எழுமிச்ச + அம் + பழம் = எலுமிச்சம்பழம்

வழுதுணை + காய் = வழுதுண் + அம் + காய் = வழுதுணங்காய்

இவற்றில் இறுதி கெட்டு அம்சாரியை பெற்று வந்துள்ளன.

இறுதி கெடாமலும் அம் சாரியை பெறாமலும் புணரும் சொற்களும் உண்டு என்பது பொது விதி.

எ.கா - முல்லை + பூ = முல்லைப்பூ, தாமரை + கொடி = தாமரைக்கொடி

**வேற்றுமை ஆயினும் ஐகான் இறுமொழி**

**ஈற்றுஅழி வோடும் அம்ஏற்பவும் உள்ளே (நன் : 202)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**பனை**

வேற்றுமைப் புணர்ச்சியில் பனை எனும் மரப்பெயருக்கு முன்னர், கொடி என்பது புணருமிடத்துக் ககரம் மிகும். வல்லெழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்கள் புணருமிடத்துப் பனை எனும் சொல்லில் ஐகாரம் கெட்டு அம்சாரியை வரும். திரள் எனும் சொல் புணருமிடத்துத் தகரமெய் வருதலும் பனை எனும் சொல்லில் ஐகாரம் கெட்டு அம் சாரியை வருதலுமாக உறழும். அட்டு என்பது புணருமிடத்துப் பனை எனும் சொல்லின் ஐகாரம் கெட்டு அட்டு என்பதன் அகரம் ஆகாரமாகி நீளும்.

எ.கா – பனை + கொடி = பனைக்கொடி

பனை + காய் = பன் + அம் + காய் = பனம் + காய் = பனங்காய்

பனை + பழம் = பன் + அம் + பழம் = பனம்பழம்

பனை + திரள் = பன் + அம் + திரள் = பனந்திரள்

பனை + அட்டு = பன் + ஆட்டு = பனாட்டு

**பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்**

**ஐபோய் அம்முன் திரள்வரின் உறழ்வும்**

**அட்டுஉறின் ஐகெட்டுஅ நீள்வும்ஆம் வேற்றுமை (நன் : 203)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

# அலகு - 4

## மெய்யீற்றுப் புணரியல்

மெய்யீற்றுச் சொற்கள் புணரும் இலக்கணம் மெய்யீற்றுப் புணரியலில் இடம் பெற்றுள்ளது.

இங்கு மெய்யீற்றுச் சொற்களின் பொதுமையான புணர்ச்சி கூறப்பட்ட பின்னர் ணகர, னகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியும் விளக்கப்படுகின்றன.

தனிக்குறிலை அடுத்துள்ள மெய்யெழுத்து உயிர்வரும்போது இரட்டிக்கும் என்பது புணர்ச்சி விதிகளுள் குறிக்கத் தக்கது. அன்றியும் மெய்களை இறுதியில் உடைய தொழிற்பெயர்களின் புணர்ச்சியும், ணகர, னகர மெய்யீற்றுப் புணர்ச்சியும் இங்கு இடம் பெற்றுள்ளன. பிழையின்றி எழுதுவார்க்கும் தமிழை அறிய முயல்வார்க்கும் பழைய இலக்கியங்களைச் சுவைப்போருக்கும் ணகர. னகர ஈற்றுப் புணர்ச்சி விதிகள் அவசியமானவை.

வல்லினம் 6, மெல்லினம் 6, இடையினம் 6, மூவகைப்பட்ட 18 மெய் எழுத்துக்களில் மொழி இறுதியில் இடம் பெறுபவை 11 மெய்களே.

1. வல்லினம் - மொழி இறுதியில் இடம் பெறாது.
2. மெல்லினம் -ஞ்,ண், ந், ம், ன் என்னும் 5 எழுத்துக்களும் மொழி இறுதியில் இடம் பெறும்.
3. இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள் ஆறும் இறுதியில் இடம் பெறும்.

அவ்வாறு இறுதியில் இடம் பெறும் 11 மெய்களின் புணர்ச்சி மாற்றங்களை அறிந்து கொள்வது அவசியம்.

### மெய்யீற்றுப் புணரியல்

நிலைமொழி இறுதியில் மெய்யெழுத்து நின்று வருமொழியோடு சேர்வது. மெய்யீற்றுப் புணர்ச்சி எனப்படும். தனித்தனி மெய்யீறுகளின் புணர்ச்சி விரிவாக விளக்கப்படுகிறது. முன்னதாகச் சில பொது விதிகளும் சிறப்பு விதிகளும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன.

### மெய்யீற்றின் முன் உயிர்

### பொதுவிதி

### இயல்பு புணர்ச்சி

நிலை மொழி இறுதியில் உள்ள மெய்யெழுத்தோடு வருமொழி முதலில் உள்ள உயிரெழுத்து இணைவது இயல்பானது.

எ.கா - தமிழ் + இனியது = தமிழினியது – அல்வழிப் புணர்ச்சி

ஆல் + இலை = ஆலிலை – வேற்றுமைப் புணர்ச்சி

மெய்யும் உயிரும் இணைந்து உயிர்மெய்யாக மாறுவதும் இயல்பு புணர்ச்சி ஆகும்.

**உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே (நன் : 204)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தனிக்குறில்முன் மெய் இரட்டுதல்**

நிலைமொழியில் தனிக்குறிலின் பின் ஒற்றெழுத்து நிற்க – வருமொழி முதலில் உயிர் எழுத்து வருமானால், நிலைமொழியில் உள்ள ஒற்று இரட்டும் ( இரண்டுமுறை வரும்)

எ.கா - பொய் + இல்லை = பொய்ய் + இல்லை = பொய்யில்லை – அல்வழிப் புணர்ச்சி

கள் +உண்ணாதே = கள்ள் + உண்ணாதே = கள்ளுண்ணாதே – வேற்றுமைப் புணர்ச்சி

**தனிக் குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (நன் : 205)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**மெய்யீற்றின் முன் மெய்**

**பொது விதி**

யகரம் தவிர்த்த ஞ, ண, ந, ம, ன, ர, ல, வ, ழ, ள பத்து மெய்களையும் இறுதியில் உடைய நிலைமொழிகளோடு யகரத்தை முதலில் உடைய வருமொழிகள் புணருமிடத்து இடையில் இகரம் வரும்.

பிற மெய்களோடு யகரம் வந்து புணருமிடத்து இகரம் இடையில் தோன்றுவதும் உண்டு.

எ.கா – அவன் + யார் = அவன் + இ + யார் = அவனியார்

வேள் + யாவன் = வேள் + இ + யாவன் = வேளியாவன்

இரண்டாம் + யாண்டு = இரண்டாம் + இ + யாண்டு = இரண்டாயியாண்டு – அல்வழி

செந்நீர் + யாறு = செந்நீர் + இ + யாறு = செந்நீரியாறு

பொன் + யாழ் = பொன் + இ + யாழ் = பொன்னியாழ் - வேற்றுமை

செய்யுள் + யாப்பு = செய்யுள் + இ + யாப்பு = செய்யுளியாப்பு

**தன்ஒழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்**

துன்னும் என்று துணிநரும் உளரே (நன் : 206)

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**முதனிலைத் தொழிற்பெயரும் ஏவல் வினையும் உகரச்சாரியை பெறல்**

ஞ, ண, ந, ம, ல, வ, ள, ன எட்டு மெய்களையும் இறுதியாக உடைய முதனிலைத் தொழிற்பெயர்களுக்கும் ஏவல் வினைகளுக்கும் முன்னர் யகரம் அல்லாத க, ச, த, ப, ஞ, ந, ம, வ எனும் எட்டு மெய்களும் வந்து புணருமிடத்து நிலைமொழி ஈற்றுடன் உகரச் சாரியைச் பெரும்பான்மையும் பொருந்தாது.

எ.கா – உரிஞ் + கடிது = உரிஞ் + உ + கடிது = உறிஞு + க் + கடிது = உறிஞுக்கடிது

மண் + சிறிது = மண் + உ + சிறிது = மண்ணூ + ச் + சிறிது = மண்ணூச் சிறிது

பொருந் + தீது = பொருந் + உ + தீது = பொறு + த் + தீது = பொருநுத்தீது

திரும் + பெரிது = திரும் + உ + பெரிது = திருமு + ப் + பெரிது = திருமுப்பெரிது

புல் + ஞான்றது = புல் + உ + ஞான்றது = புல்லுஞான்றது

தெவ் + நீண்டது = தெவ் + உ + நீண்டது = தெவ்வுநீண்டது

துள் + மாண்டது = துள் + உ + மாண்டது = துள்ளுமாண்டது

துன் + வலிது = துன் + உ +வலிது = துன்னுவலிது

இவை அல்வழியில் தெரிழற்பெயர்கள் உகரம் பெற்று வந்துள்ளன.

உரிஞ் + கடுமை = உரிஞ் + உ + கடுமை = உரிஞு + க் + கடுமை = உரிஞுக்கடுமை

மண் + சிறுமை = மண் + உ + சிறுமை = மண்ணு + ச் + சிறுமை = மண்ணுச்சிறுமை

பொருந் + தீமை = பொருந் + உ + தீமை = பொருநு + த் + தீமை = பொருநுத்தீமை

திரும் + பெருமை =திரும் + உ + பெருமை = திருமு + ப் + பெருமை =திருமுப்பெருமை

புல் + ஞாற்சி = புல் + உ + ஞாற்சி = புல்லுஞாற்சி

தெவ் + நீட்சி = தெவ் + உ + நீட்சி = தெவ்வுநீட்சி

துள் + மாட்சி = துள் + உ + மாட்சி = துள்ளுமாட்சி

துன் + வலிமை = துன் + உ +வலிமை = துன்னுவலிமை

இவை வேற்றுமையில் தொழிற் பெயர்கள் உகரம் பெற்று வந்துள்ளன. மேலும்

விகுதி பெற்ற தொழிற்பெயர்கள் சாரியை பெறா.

உரிஞ் + கந்தா = உரிஞ் + உ + கந்தா = உரிஞுகந்தா

உண் + சேரா = உண் + உ + சேரா = உண்ணுசேரா

பொருந் + தேவா = பொருந் + உ + தேவா = பொருநுதேவா

திரும் + பூதா = திரும் + உ + பூதா = திருமுபூதா

வெல் + ஞொள்ளா = வெல் + உ+ ஞொள்ளா = வெல்லுஞொள்ளா

வவ் + நண்பா = வவ் + உ + நண்பா = வவ்வுநண்பா

துள் + மாதவா = துள் + உ + மாதவா = துள்ளுமாதவா

தின் + வேலா = தின் + உ + வேலா = தின்னுவேலா

**ஞணநம லவளன ஒற்றுஇறு தொழிற்பெயர்**

**ஏவல் வினைநனி யவ்அல் மெய்வரின்**

**உவ்வுறும் ஏவல் உறாசில சில்வழி (நன் : 207)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**நகர ஈற்றுத்தொழிற்பெயர் அகரச்சாரியை பெறுதல்**

நகரத்தை இறுதியாக உடைய முதனிலைத் தொழிற்பெயருக்கு வேற்றுமைப் புணர்ச்சியில் உகரச் சாரியை மட்டுமன்றி அகரச்சாரியையும் வரும்.

எ.கா –

பொருந் + கடுமை = பொருந் + அ + கடுமை = பொருந + க் + கடுமை = பொருநக்கடுமை

பொருந் + பொருநுதல் என்பது ஒருவர் போன்று வேடம் கொள்ளுதல் அதாவது ஒத்திருத்தலைக் குறிக்கும்.

**நவ் இறு தொழிற்பெயர்க்கு அவ்வும்ஆம் வேற்றுமை (நன் : 208)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ணகர னகர ஈறுகள்**

**பொதுவிதி**

வேற்றுமைப் புணர்ச்சியில் ணகர, னகர வல்லினம் வந்து புணருமிடத்து முறையே டகரமும் றகரமும் ஆகத் திரியும். மெல்லினமும் இடையினமும் வந்து புணருமிடத்தும் அல்வழிப் புணர்ச்சியில் எல்லா மெய்களும் வந்து புணருமிடத்தும் இயல்பாகும். இதனை ஓர் அட்டவணை வாயிலாக விளங்கிக் கொள்ளலாம்.

| பொருள் | நிலை மொழி | வருமொழி | நிலைமொழி மாற்றம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|---|
| வேற்றுமைப் | ண் | வல்லினம் வரும் | ட் ஆகும் | மண்+குடம் =மட்குடம் |

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளில் | | | | கண் + சிறை = கட்சிறை<br>மண் + தாழி = மட்தாழி |
| | ன் | வல்லினம் வரும் | ற் ஆகும் | பொன் + குடம் = பொற்குடம்<br>பொன் + சிலை = பொற்சிலை<br>பொன் + பொடி = பொற்பொடி |
| | ண் / ன் | மெல்லினமும் இடையினமும் வரும் | இயல்பாகும் | மண் + மலை =மண்மலை மண் + யாப்பு = மண்யாப்பு<br>பொன் + மாடு = பொன்மாடு<br>பொன் + வட்டு = பொன்வட்டு |
| அல்வழிப் பொருளில் | ண் / ன் | வல்லினம், மெல்லினம், இடையினம் | இயல்பாகும் | மண் + பெரிது = மண்பெரிது<br>பெண்+மெலிந்தாள் =பெண்மெலிந்தாள்<br>பெண்+யார் = பெண்யார்<br>பொன் + பெரிது = பொன்பெரிது<br>பொன் +மறைந்தது =பொன்மறைந்தது<br>பொன் + வலிது =பொன்வலிது |

**ணன வல்லினம் வர டற வும் பிறவரின்**

**இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு அல்வழி**

**அனைத்து மெய்வரினும் இயல்பாகும்மே** **(நன் : 209)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தனிக்குறிலைச் சாரா ணகர னகரங்களின் முன் நகரம்**

தனிக்குறிலைச் சாராமல் பிற எழுத்துக்களைச் சார்ந்து வரும் ணகரமும் னகரமும் வருமொழி முதலிலுள்ள நகரம் திரிந்துவிடத்துக் கெடும். வருமொழி முதலிலுள்ள நகரம் ணகரத்திற்கு முன்னர் ணகரமாகவும் னகரத்திற்கு முன்னர் னகரமாகவும் திரியும். அவ்விடத்து நிலைமொழியிலுள்ள ணகரமும் னகரமும் கெடும்.

எ.கா –

தூண் + நீண்டது = தூண் + ணீண்டது = தூ + ணீண்டது = தூணிண்டது

பசுமண் + நல்லது = பசுமண் + ணல்லது = பசும + ணல்லது = பசுமணல்லது

அவன் + நல்லவன் = அவன் + னல்லவன் = அவ + னல்லவன் = அவனல்லவன்

கோன் + நல்லவன் = கோன் + னல்லவன் = கோ + னல்லவன் = கோனல்லவன்

இவை அல்வழியில் ண, ன கெட்டமைக்குச் சான்றுகள் ஆகின..

தூண் + நீட்டம் = தூண் + ணீட்டம் = தூ + ணீட்டம் = தூணீட்டம்

பசுமண் + நன்மை = பசுமண் + னன்மை = பசும + ணன்மை = பசுமணன்மை

வலியன் + நன்மை = வலியன் + னன்மை = வலிய + னன்மை = வலியனன்மை

கோன் + நாடு = கோன் + னாடு = கோ + னாடு = கோனாடு

**குறில் அணைவு இல்லா ணனக்கள் வந்த**

**நகரம் திரிந்து நண்ணும் கேடே (நன் : 210)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**சிறப்பு விதிகள்**

**சாதி, குழு, பரண், கவண் பெயர்கள்**

சாதிப் பெயர்கள், குழுப்பெயர்கள், பரண், கவண் ஆகியவற்றின் இறுதியிலுள்ள ணகரம் வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லினம் வந்து புணருமிடத்து இயல்பாகும். உணவுப் பொருளாகிய எண் என்பதிலும் நீட்டலளவுப் பெயராகிய சாண் என்பதிலும் உள்ள ணகரம் அல்வழிப் புணர்ச்சியில் டகரமாகத் திரியும்.

எ.கா - பாண் + குடி = பாண்குடி, பாண் + சாதி = பாண்சாதி

உமண் + குடி = உமண்குடி, உமண் + பெருமை = உமண்பெருமை (சாதி)

அமண் + சேரி = அமண்சேரி. அமண் + தேயம் = அமண்தேயம் (குழு )

பரண் + கால் = பரண்கால், கவண் + கல் = கவண்கல்

இவை அல்வழியிலும் திரிந்தமைக்கு சான்றுகளாகும்.

எண் + செடி = எட்செடி , சாண் + கோல் = சாட்கோல்

அல்வழியில் ணகரம் டகரமாகத் திரிந்துள்ளன.

எண் + கடது = எண்கடிது, சாண் + கோல் = சாண்கோல்

இவ்வாறு இயல்பாக வருதலே பெருவழக்காகும். எண் என்பது எள்ளைக் குறிக்கும். மேலும் பிற என மிகையாகக் குறிப்பிட்டமையால் சாதிப் பெயர்களும் குழுப்பெயர்களும் அகரச்சாரியை பெற்று வருதலும் உண்டு எனக் கொள்ளலாம்.

எ.கா - பாண் + குடி = பாண் +அ + குடி = பாணக்குடி,

அமண்+சேரி = அமண் + அ + சேரி = அமணச்சேரி

**சாதி குமூஉப் பரண்கவண் பெயர்இறுதி**

**இயல்பு வேற்றுமைக்கு உணவுஎண் சாண்பிற**

**டஆ கலும்ஆம் அல்வழி யும்மே (நன் : 211)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**னகர ஈற்றுச் சாதிப் பெயர்கள்**

வேற்றுமைப் புணர்ச்சியில் சாதிப் பெயர்களின் இறுதியிலுள்ள னகரம் இயல்பாகவும் அகரச்சாரியை பெற்றும் புணரும்.

எ.கா – எயின் + குடி = எயின்குடி, எயின் + அ + குடி = எயினக்குடி

எயின் + சேரி = எயின்சேரி, எயின் + அ + சேரி = எயினச்சேரி

எயின் + தாய் = எயின்தாய், எயின் + அ + தாய் = எயினத்தாய்

எயின் + பெருமை = எயின்பெருமை, எயின் + அ + பெருமை = எயினப்பெருமை

எயின் + மரபு = எயின் மரபு , எயின் + அ + மரபு = எயினமரபு

எயின் + வாழ்வு = எயின்வாழ்வு, எயின் + அ + வாழ்வு = எயினவாழ்வு

எயின் + அணி = எயின்அணி, எயின் + அ + அணி = எயினவணி

எயின் எனும் சாதிப் பெயர் முன்னர் நாற்குணமும் வர, அகரச்சாரியை வந்தது. வல்லினம் வர இயல்பாகவும் புணர்ந்தது. கிளைப்பெயர் என்பது சாதிப்பெயர் ஆகும்.

**ன்.்.கான் கிளைப்பெயர் இயல்பும் அ.்.கான்**

**அடைவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கே (நன் : 212)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**மீன்**

மீன் என்னும் பெயர்ச் சொல்லிலுள்ள னகரம் வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாகவும் றகரமாகத் திரிந்தும் உறழும்.

எ.கா - மீன் + கண் = மீன்கண், மீற்கண்

மீன் + செதில் = மீன்செதில், மீற்செதில்

மீன் + தலை = மீன்தலை, மீற்தலை

மீன் + தோல் = மீன்தோல், மீற்றோல்

**மீன் றவ்வொடு பொரூ உம் வேற்றுமை வழியே** **(நன் : 213)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தேன்**

அல்வழி வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் தேன் எனும் சொல் மூவின மெய்களும் வந்து புணருமிடத்து இயல்பாகும். மெல்லினம் வந்து புணரும்போது இயல்பாதல் மட்டுமன்றி இறுதியிலுள்ள னகரம் கெடும். வல்லினம் வந்து புணரும்போது இயல்பாதல் மட்டும் அன்றி னகரம் கெட்டு வரம் வல்லினத்திற்கு இனமான மெல்லினம் வரும்.

| எ.கா - அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தேன் + கசிந்தது = தேன்கசிந்தது | தேன் + குடம் = தேன்குடம் |
| தேன் + மொழி = தேன்மொழி | தேன் + மலர் = தேன்மலர் |
| தேன் + வாங்கி = தேன்வாங்கி | தேன் +வண்டு = தேன்வண்டு |

இவை மூவின மெய்களும்வர னகரம் இயல்பாகப் புணர்ந்தமைக்குச் சான்றுகளாகும்.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தேன் + மொழி = தேமொழி. தேன்மொழி, | தேன் + மலர் = தேன்மலர் |

இவற்றில் மெல்லினம் வர னகரம் இயல்பும் கெடுதலும் ஆனது.

தேன் + குழம்பு =தேன் குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு – அல்வழி

தேன் + குடம் = தேன்குடம், தேக்குடம், தேங்குடம் - வேற்றுமை

இவற்றில் வல்லினம் வர இயல்பும் வல்லினம் மெல்லினம் மிகுதலும் ஆயின.

**தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை**
**மேவின் இறுதி அழிவும் மிகலும் வலிவரின்**
**ஈறுபோய் வலிமெலி மிகலும் ஆம் இருவழி** **(நன் : 214)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**எகின்**

மரத்தை உணர்த்தாத எகின் என்னும் சொல் அல்வழி வேற்றுமை ஆகிய இருவகைப் புணர்டச்சியிலும் இயல்பாகவும் அகரச்சாரியை மிகுந்து வர வல்லினமாவது இனமெல்லினமாவது மிகுதலும் ஆகும்.

மரம் அல்லாத எகின் என்பது அன்னம், நாய், கவரிமான் ஆகியவற்றைக் குறிக்கும்.

எ.கா - எகின் +பறவை = எகின் + அ + பறவை = எகினப்பறவை, எகினும் பறவை

எகின் + புள் = எகின் + அ + புள் = எகினப்புள், எகினம்புள்

இவை அல்வழிப் புணர்ச்சிக்கு சான்றாகும்.

எகின் + கால் = எகின் + அ +கால் = எகினக்கால் , எகினங்கால்

எகின் + தலை = எகின் + அ + தலை =எகினத்தலை, எகினந்தலை

இவை வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சான்றாகும்.

**மரம்அல் எகின்மொழி இயல்பும் அகரம்**
**மருவ வலிமெலி மிகலும்ஆகும் (நன் : 215)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**குயின், ஊன்**

குயின், ஊன் எனும் இரு பெயர்களும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் இயல்பே ஆகும்.

எ.கா – குயின் + குழாம் = குயின்குழாம்

குயின் + சீற்றம் = குயின்சீற்றம்

ஊன் + குறைவு = ஊன்குறைவு

ஊன் + தீமை = ஊன்தீமை

இருபெயர்களும் எவ்விதத் திரிபுமின்றி இயல்பாயின. குயின் என்பது மேகத்தைக் குறிக்கும்.

**குயின் ஊன் வேற்றுமைக் கண்ணும் இயல்பே (நன் : 216)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**மின், பின், பன், கன்**

மின், பின், பன், கன் எனும் நான்கு சொற்களும் தொழிற்பெயர்களைப் போன்று உகரச் சாரியை பெறும். அவற்றுள், கன் எனும் சொல் உகரச்சாரியையே அன்றி, அகரச் சாரியையும் பெற்று வந்து புணரும் வல்லெழுத்தாவது அதற்கு இனமான வல்லெழுத்தாவது மிகுந்து உறழும்.

எ.கா – மின் + கொடியது = மின்னுக்கொடியது
பின் + சிறியது = பின்னுச் சிறியது
பன் + நன்று = பன்னுநன்று
கன் + வலிது = கன்னுவலிது
} அல்வழியில் உகரச்சாரியை பெற்றன

மின் + கொடுமை = மின்னுக்கொடுமை
பின் + சிறுமை = பின்னுச்சிறுமை
பன் + நன்மை = பன்னுநன்மை
கன் + வலிமை = கன்னுவலிமை
} வேற்றுமையில் உகரச்சாரியை பெற்றன

கன் + தட்டு =கன்னத்தட்டு, கன்னந்தட்டு – அல்வழியில் கன் அகரச்சாரியை பெற்று உறழ்ந்தது.

கன் +தூக்கு = கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு – வேற்றுமையில் கன் அகரச்சாரியை பெற்று உறழ்ந்தது.

பன் என்பது ஒருவகைப்புல்லையும் கன் என்பது சிறுதராசுத்தட்டையும் குறிக்கும்.

**மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய**
**கன்அ ஏற்று மென்மையோட உறழும்** **(நன் : 217)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தன், என், நின்**

தன், என், நின் எனும் சொற்களின் இறுதியிலுள்ள னகரம் வல்லினம் வந்து புணருமிடத்து இயல்பாகியும் றகரமாகத் திரிந்து உறழும். நின் எனும் சொல்லின் இறுதியிலுள்ள னகரம் இயல்பாகவே புணரும்.

எ.கா – தன் + கை = தன்கை, தற்கை
தன் + பகை = தன்பகை, தற்பகை
என் + கை = என்கை, எற்கை
என் + பகை = என்பகை, எற்பகை
} தன் என் இரண்டும் உறழ்ந்தன

நின் + கை = நின்கை
நின் + பகை =நின்பகை
} - நின் இயல்பாயிற்று

தன், என், நின் என்பன முறையே தான், யான், நீ என்பனவற்றின் வேற்றுமை வடிவங்களாகும்.

**தன்என் என்பவற்றின் ஈற்றுனல் வன்மையோடு**

**உறழும் நின்றுஈறு இயல்புஆம் உறவே (நன் : 218)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

### மெய்யீற்றுப் புணரியல் தொடர்ச்சி

மெய்யீற்றுப் புணரியலில் எஞ்சியுள்ளவை இப்பகுதியில் விளக்கப்படுகின்றன. இங்கு விளக்கப்படும் இலக்கண விதிகளுள் ம், ல், ள் ஆகிய மூன்றையும் இறுதியில் கொணட சொற்களுக்கானவையும் அடங்கும். இவற்றுள் அங்கை, கஃறீது, வேடீயன், வேணாடு, பொற்றாலி (முதலிய தொடர்கள் இடம் பெற்றுள்ளன.) இவை தமிழ் மொழி கற்கும் மாணாக்கா்க்கு அவசியமானவை ஆகும்.

**மகர ஈறு**

**பொது விதி**

நிலைமொழி இறுதியில் மகரம் நாற்கணங்களும் வந்து புணருமிடத்துக் கெட்டு உயிா் ஈறு போலப் புணரும், வல்லினம் வந்து புணருமிடத்து அதற்கு இனமான மெல்லினமாகத் திரியும்.

உயிரீறு போல் புணா்தல் மகரம் கெட்டவிடத்து உயிரீற்றுச் சொல்லாக நின்று உயிா் வந்து புணருமிடத்து உடம்படு மெய்யும் வல்லினம் வந்து புணருமிடத்து வல்லினம் மிகுதலும் மெல்லினமும் இடையினமும் புணருமிடத்து இயல்பாகி புணா்கிறது.

எ.கா - வட்டம் + ஆழி = வட்ட + வ் + ஆழி = வட்டவாழி

வட்டம் + கல் = வட்ட + க் + கல் = வட்டக்கல் - அல்வழி

வட்டம் + முரசு = வட்டமுரசு

வட்டம் + வீடு = வட்டவீடு

மரம் + அடி = மரவடி

மரம் + கிளை = மர + க் + கிளை = மரக்கிளை - வேற்றுமை

மரம் + நாா் = மரநாா்

மரம் + வோ் = மரவோ் - மகரம் கெட்டும் உயிா் ஈறு போன்று புணா்ந்துள்ளது.

மரம் + செடி = மரஞ்செடி – அல்வழியில் வல்லினம் புணா்தல்

நம் + தேயம் = நந்தேயம் - வேற்றுமையில் இனமெல்லினமாகத் திரிதல்

**மவ்வீ றுஒற்று அழிந்து உயிா்ஈறு ஒப்பவும்**

**வன்மைக்கு இனமாகத் திரிபவும் ஆகும் (நன் : 219)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**சிறப்பு விதிகள்**

வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வந்து புணருமிடத்து நிலைமொழி இறுதியிலுள்ள மகரம் கெட்டு வல்லினமாவது அதற்கு இனமான மெல்லினமாவது மிகுந்து உரமும். அல்வழிப் புணர்ச்சியில் உயிரும் இடையினமும் வந்து புணருமிடத்து மகரம் கெடாமல் இயல்பாகும்.

எ.கா - குளம் + கரை = குள + கரை = குளக்கரை
குளம் + கரை = குள + கரை = குளங்கரை
} வேற்றுமையில் மகரம் கெட்டு வல்லினமும் மெல்லினம் உறழ்ந்தன

குளம் + அகன்றது = குளமகன்றது
குளம் + விரிந்தது = குளம்விரிந்தது
} அல்வழியில் இயல்பானது

**வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்**
**அல்வழி உயிர்இடை வரின்இயல் பும்உள (நன் : 220)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**நும், தம், எம், நம்**

நும், தம், எம், நம் என்பனவற்றின் ஈறாகிய மகரம் ஞ, ந எனும் இரண்டும் வந்து புணருமிடத்து ஞகரமாகவும், நகரமாகவும் திரியும்.

எ.கா – நும் + ஞாண் = நுஞ்ஞாண், தம் + ஞாண் = தஞ்ஞாண்
எம் + ஞாண் = எஞ்ஞாண், நம் + ஞாண் = நஞ்ஞாண்
நும் + நூல் = நுந்நூல், தம் + நூல் = தந்நூல்
எம் + நூல் = எந்நூல் நம் + நூல் = நந்நூல்

நும், தம், நம் என்பன முறையே நீர், தாம், யாம், நாம் என்பனவற்றின் வேற்றுமை வடிவங்களாகும்.

**நும்தம்**
**எம்தம் ஈறாம் மவ்வரு ஞநவே (நன் : 221)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**அகம்**

அகம் எனும் சொல்லின் முன்னர்ச் செவி கை என்பன வந்து புணருமிடத்து அகம் என்பதன் மகரம் இனமெல்லினமாகத் திரிவதோடு இடையிலுள்ள ககரமும் அகரமும் கெடும்.

எ.கா - அகம் + செவி = அகஞ் + செவி = அஞ்செவி

அகம் + கை = அகங் + கை = அங்கை

**அகம் முன்னர்ச் செவிகை வரின் இடையன கெடும் (நன் : 222)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**ஈம், கம், உரும்**

ஈம், கம், உரும் எனும் மூன்று சொற்களும் அல்வழிப் புணர்ச்சியிலும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் தொழிற்பெயர்ப் புணர்ச்சியைப் போன்ற உகரச் சாரியை பெறும். ஈம், கம் ஆகிய இரண்டும் வேற்றுமைப் புணர்ச்சியில் உகரச் சாரியையே அன்றி அகரச் சாரியையும் பெறும்.

எ.கா –

ஈம் + கொடிது = ஈம் + உ + கொடிது = ஈமுக்கொடிது

ஈம் + நீண்டது = ஈம் + உ + நீண்டது = ஈமுநீண்டது

ஈம் + வலிது = ஈம் + உ + வலிது = ஈமுவலிது

கம் + கொடிது = கம் + உ + கொடிது = கம்முக்கொடிது

கம் + நீண்டது = கம் + உ + நீண்டது = கம்முநீண்டது

கம் + வலிது = கம் + உ + வலிது = கம்முவலிது

உரும் + கொடிது = உரும் + உ + கொடிது = உருமுக்கொடிது

உரும் + நீண்டது = உரும் + உ + நீண்டது = உருமுநீண்டது

உரும் + வலிது = உரும் + உ + வலிது = உருமுவலிது

} அல்வழிப் புணர்ச்சியில் உகரச்சாரியை பெற்றன

ஈம் + கொடுமை = ஈம் + உ + கொடுமை = ஈமுக்கொடுமை

ஈம் + நீட்சி = ஈம் + உ + நீட்சி = ஈமுநீட்சி

ஈம் + வன்மை = ஈம் + உ + வன்மை = ஈமுவன்மை

கம் + கொடுமை = கம் + உ + கொடுமை = கம்முக்கொடுமை

கம் + நீட்சி = கம் + உ + நீட்சி = கம்முநீட்சி

கம் + வன்மை = கம் + உ + வன்மை = கம்முவன்மை

உரும் + கொடுமை = உரும் + உ + கொடுமை = உருமுக்கொடுமை

} வேற்றுமை புணர்ச்சியில் உகரச்சாரியை பெற்றன

உரும் + நீட்சி = உரும் + உ + நீட்சி = உருமுநீட்சி

உரும் + வன்மை = உரும் + உ + வன்மை = உருமுவன்மை

ஈம் + குடம் = ஈம் + அ + குடம் = ஈமக்குடம்

கம் + குடம் = கம் + அ + குடம் = கம்மக்குடம் - வேற்றுமையில் அகரச் சாரியை பெற்றன.

முதலன என்பது முதலில் உள்ளன என்பதாகும். ஈம் என்பது சுடுகாடு ஆகும். கம் என்பது கம்மியர் தொழில் ஆகும். உரும் என்பது இடி ஆகும்.

**ஈமும்**

**கம்மும் உருமு தொழிற்பெயர் மானும்**

**முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறுமே (நன் : 223)**

என்னும் நூற்பா இதனை விளக்குகிறது.

**யகர ரகர ழகர ஈறுகள்**

**பொது விதி**

ய, ர, ழ என்பனவற்றின் முன்னர்க் க, ச, த, ப ஆகியன வந்து புணருமிடத்து அல்வழிப் புணர்ச்சியில் இயல்பும் வல்லினம் மிகுதலும் ஆகும். வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் மிகுதலும் வல்லினமாவது மெல்லினமாவது மிகுந்து உறழ்தலும் ஆகும்.

எ.கா - நாய் + கடிக்கும் = நாய்கடிக்கும்

வேர் + சிறிது = வேர்சிறிது

ஊழ் + தீயது = ஊழ்தீயது

ஊழ் + பெரியது = ஊழ்பெரியது

மெய் + கீர்த்தி = மெய்கீர்த்தி

- அல்வழியில் இயல்பாயின

பொய் + செய்தி = பொய்ச்செய்தி

கார் + பருவம் = கார்ப்பருவம்

யாழ் + கருவி = யாழ்க்கருவி

நாய் + செவி = நாய்ச்செவி

தேர் + தட்டு = தேர்த்தட்டு

ஊழ் + பயன் = ஊழ்ப்பயன்

தாய் + பாசம் = தாய்ப்பாசம்

- அல்வழியில் வல்லினம் மிகுந்தது

வேய் + குழல் = வேய்க்குழல், வேய்ங்குழல்

ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு

குமிழ் + கோடு = குமிழ்க்கோடு, குமிழ்ங்கோடு

} வேற்றுமையில் வல்லினம மெல்லினம் உறழ்ந்தன.

ஆர், குமிழ் என்பவை தாவரவகைகள் ஆகும். கோடு என்பது கிளை ஆகும்.

**யரழ முன்னர்க் கசதப அல்வழி**

**இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை**

**மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதிமேல் (நன் : 224)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தமிழ் - தாழ்**

தமிழ் எனும் சொல் நாற்கணங்களும் வந்து புணருமிடத்து வேற்றுமைப் புணர்ச்சியில் அகரச்சாரியை மிகுதலையும் பெறும். தாழ் எனும் சொல் முன்னர்க் கோல் என்பது வந்து புணருமிடத்து அகரச்சாரியைப் பெறும். தாழ் என்பதற்கு வருமொழி கோல் என்று சுட்டியமையால் தமிழ்க்கு நாற்கணங்களும் என்பது கொள்ளப்பட்டது.

எ.கா – தமிழ் + அரசன் = தமிழ் + அ + அரசன் = தமிழவரசன்

தமிழ் + பிள்ளை = தமிழ் + அ + பிள்ளை = தமிழப்பிள்ளை

தமிழ் + நாகன் = தமிழ் + அ + நாகன் = தமிழநாகன்

தமிழ் + வளவன் = தமிழ் + அ + வளவன் = தமிழவளவன்

தாழ் + கோல் = தாழ் + அ + கோல் = தாழக்கோல்

**தமிழ்அவ் உறவும் பெறும்வேற் றுமைக்கே**

**தாழும் கோல்வந்து உறுமேல் அற்றே (நன் : 225)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**கீழ்**

கீழ் என்னும் சொல்லுக்கு முன் வல்லினம் வந்து புணருமிடத்து இயல்பும் மிகுதலும்ஆகி உறழ்தலையும் அடையும்.

எ.கா - கீழ் + கணக்கு = கீழ்கணக்கு, கீழ்க் கணக்கு

கீழ் + குலம் = கீழ்குலம், கீழ்க்குலம்

கீழ் + சாதி = கீழ்சாதி, கீழ்ச்சாதி

**கீழின் முன் வண்மை விகற்பமும் ஆகும் (நன் : 226)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**லகர ளகர ஈறுகள்**

நிலைமொழி இறுதியிலுள்ள வகரமும் ளகரமும் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வந்து புணருமிடத்து முறையே றகரமாகவும் டகரமாகவும் திரியும். அல்வழிப் புணர்ச்சியில் றகர, டகரங்களாகத் திரிந்தும் திரியாமலுமாகி உறழும். வேற்றுமை , அல்வழி எனும் இருவகைப் புணர்ச்சியிலும் மெல்லினம் வந்து புணருமிடத்து முறையே னகரமாகவும், ணகரமாகவும் திரியும். இடையினம் வந்து புணருமிடத்து இயல்பாகும்.

எ.கா – கால் + குறை = காற்குறை

முள் + குறை = முட்குறை – வேற்றுமையில் வல்லினம் வர, றகர, டகரங்களாயின.

கால் + சிறிது = கால் சிறிது, காற் சிறிது

முள் + சிறிது = முள்சிறிது , முட்சிறிது –அல்வழியில் வல்லினம் வர றகர, டகரங்களாயின

கல் + நீண்டது = கண்ணீண்டது
வாள் + மழுங்கும் = வாண்மழுங்கும் - அல்வழி
கல் + மலை = கன்மலை
வாள் + மாட்சி = வாண்மாட்சி - வேற்றுமை
} இருவகைப் புணர்ச்சியிலும் மெல்லினம் வர னகர, ணகரங்களாயின.

கால் + யாது = கால்யாது
முள் + வலியது = முள்வலியது - அல்வழி
கல் + யானை = கல்யானை
தோள் + வலிமை = தோள்வலிமை - வேற்றுமை
} இருவகைப் புணர்ச்சியிலும் இடையினம் வர இயல்பாயின

**வளவே ற்றுமையில் றடவும் அல்வழி**
**அவற்றோடு உறழ்வும் வலிவரின் ஆம்மெலி**
**மேவின் னணவும், இடைவரின் இயல்பும்**

**ஆகும் இருவழியானும் என்ப (நன் : 227)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**சிறப்பு விதிகள்**

**ஆய்தக் குறுக்கம்**

அல்வழிப் புணர்ச்சியில் தனிக்குறிலின் பின்னே நின்ற லகரமும் ளகரமும் தகரம் வந்து புணருமிடத்து ஆய்தமாகத் திரியும்.

எ.கா - கல் + தீது – கஃறீது, முள் + தீது – முஃடீது

பொது விதிப்படி லகரம் றகரமாகவும் ளகரம் டகரமாகவும் திரியும்

கல் + தீது = கற்றீது, முள் + தீது = முற்றீது

இதுவே எழுத்தியலில் (நன் : சூ. 97) ஆய்தக் குறுக்கம் என கூறப்பட்டுள்ள.

**குறில்வழி ளத்த அணையின் ஆய்தம்**
**ஆகவும் பெறூஉம் அவ்வழி யானே (நன் : 228)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**லகர ளகரங்கள் கெடுதல்**

தனிக்குறிலைச் சாராத லகரமும் ளகரமும் அல்வழிப்புணர்ச்சியில் வருமொழி முதலில் உள்ள தகரம் முறையே றகரமாகவும், டகரமாகவும் திரிந்த பின்னர்க் கெடும். அல்வழிப் புணர்ச்சியிலும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் வருமொழி முதலில் உள்ள நகரம் னகரமாகவும் ணகரமாகவும் திரிந்து பின்னர்க் கெடும். வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகவும் திரிந்தும் புணரும். வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாகப் புணரும்.

எ.கா –

தோன்றல் + தீயன் = தோன்றல் + றீயன் = தோன்ற + றியன் = தோன்றறீயன்

பால் + திரிந்தது = பால் + றிரிந்தது = பா + றிரிந்தது = பாறிரிந்தது

திங்கள் + தீயது = திங்கள் + டீயது = திங்கட் + டீயது = திங்கடீயது

வேள் + தீயன் = வேள் + டீயன் = வே + டீயன் = வேடீயன்

இவை அல்வழியில் தகரம் திரிய ல, ள கெட்டன.

தோன்றல் +நல்லவன் = தோன்றல் +னல்லவன் =தோன்ற +னல்லவன் = தோன்றனல்லவன்

பால் + நல்லது = பால் + னல்லது = பா + னல்லது = பானல்லது

திங்கள் + நல்லது = திங்கள் + ணல்லது = திங்க + ணல்லது = திங்கணல்லது

வேள் + நல்லவன் = வேள் + ணல்லவன் = வே + ணல்லவன் = வேணல்லவன்

இவை அல்வழியில் நகரம் திரிய ல, ள கெட்டன

ஆழ் + நிழல் = ஆல் + னிழல் = ஆ + னிழல் = ஆனிழல்

தோன்றல் + நாடு = தோன்றல் + னாடு = தோன்ற + னாடு = தோன்றனாடு

வேள் + நாடு = வேள் + ணாடு = வே + ணாடு = வேணாடு

இவை வேற்றுமையில் நகரம் திரிய ல, ள கெட்டன

கால் + சிறியது = கால்சிறியது

கோள் + பெரியது = கோள்பெரியது

வேல் + படை = வேற்படை

வாள் + படை = வாள்படை

இவை அல்வழியில் வல்லினம் வர, ல, ள இயல்பும் திரிபுமாயின.

கால் + குதித்து = கால்குதித்து

வாள் + போழ்ந்து = வாள்போழ்ந்து

இவை வேற்றுமையில் வல்லினம்வர. ல, ள இயல்பாயின

**குறில்செறி யாலள அல்வழி வந்த**

**தகரம் திரிந்தபின் கேடும்ஈர் இடத்தும்**

**வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்**

**இயல்பும் திரிபும் ஆவன உளபிற (நன் : 229)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தொழிற் பெயர்**

லகரத்தையும் ளகரத்தையும் இறுதியில் உடைய தொழிற்பெயர்கள் அல்வழிப் புணர்ச்சியிலும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் உகரச் சாரியை பெறாமல் புணரும். வல்லினம் வந்து புணருமிடத்து அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகப் புணரும் சில தொழிற்பெயர்களும் உள்ளன.

எ.கா – பாடல் + சிறந்தது = பாடல் சிறந்தது
ஆடல் + நல்லது = ஆடல் நல்லது
கோள் + பெரியது = கோள் பெரியது

அல்வழியில் உகரச் சாரியை பெறாமல் புணர்ந்தன

ஆடல் + சிறப்பு = ஆடற்சிறப்பு
பாடல் + மாண்பு = பாடன்மாண்பு
கோள் +கோடுமை = கோட்கொடுமை

வேற்றுமையில் உகரச்சாரியை பெறாமல் புணர்ந்தன

நடத்தல் + கடிது = நடத்தல்கடிது
கோள + பெரியது = கோள்பெரியது

- அல்வழியில் வல்லினம் வர இயல்பாயின

**லாஇறு தொழிற்பெயர் ஈர்இடத்தும் உவ்வுறா**
**வலிவரின் அவ்வழி இயல்பும்ஆ வன உள** **(நன் : 230)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வல் எனும் பெயர்**

வல் என்பது சூதாடு கருவியினைக் குறிக்கும் சொல். வல் எனும் பெயர் அல்வழி வேற்றுமையாகிய இருவகைப் புணர்ச்சியிலும் தொழிற்பெயர் போன்று உகரச் சாரியை பெறும். பலகை, நாய் எனும் பெயர்கள் வருமொழியாக வந்தாலும் வேற்றுமைப் புணர்ச்சியில் உகரச் சாரியையே அன்றி. அகரச் சாரியையும் பெறும்.

எ.கா - வல் + சிறிது = வல் + உ + சிறிது = வல்லுச்சிறிது
வல் + நன்று = வல் + உ + நன்று = வல்லுநன்று
வல் + வலிது = வல் + உ + வலிது = வல்லுவலிது

இவை அல்வழியில் உகரச்சாரியை பெற்று வந்துள்ளது.

வல் + கடுமை = வல் + உ + கடுமை =வல்லுக்கடுமை
வல் + நன்மை = வல் + உ + நன்மை = வல்லுநன்மை
வல் + வலிமை = வல் + உ + வலிமை = வல்லுவலிமை

இவை வெற்றுமையில் உகரச்சாரியை பெற்று வந்துள்ளது.

வல் + பலகை = வல் + உ + பலகை = வல்லுப்பலகை
= வல் + அ + பலகை = வல்லப்பலகை

வல் + நாய் = வல் + உ + நாய் = வல்லு நாய்

= வல் + அ + நாய் = வல்ல நாய்

வேற்றுமையில் பலகை, நாய் வந்தாலும் உகர, அகரச் சாரியைப் பெற்றது.

“பலகை நாய் வரினும” என்றமையால் பிற பெயர்கள் வந்தாலும் இவ்விதி பொருந்தும்.

வல் + புலி = வல் + உ + புலி = வல்லுப்புலி

= வல் + அ + புலி = வல்லப்புலி

வல் + குதிரை = வல் + உ + குதிரை = வல்லுக்குதிரை

= வல் + அ + குதிரை = வல்லக்குதிரை

**வல்வே தொழிற்பெயர் அற்றுஇரு வழியும்**

**பலகை நாய்வரினும் வேற்றுமைக்கு அவ்வும்ஆம் (நன் : 231)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**நெல், செல், கொல், சொல்**

நெல், செல், கொல், சொல் எனும் நான்கு சொற்களிலும் இறுதியிலுள்ள லகரம் அல்வழிப்புணர்ச்சியிலும் றகரமாகத் திரியும்.

எ.கா - நெல் + கடிது = நெற்கடிது

செல் + சிறிது = செற்சிறிது

கொல் + தீது = கொற்றீது

சொல் + பெரிது = சொற்பெரிது

செல் என்பது மேகம், கொல் என்பது கொல்லனின் தொழில் ஆகும்.

**நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்**

**அல்வழி யானும் றகரம் ஆகும். ( நன் : 232)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**இல எனும் சொல்**

இனமைப் பண்பை உணர்த்தும் இல் எனும் சொல் புணர்ச்சியில் ஐகாரச் சாரியை மிகுந்து வருமொழி முதலிலுள்ள வல்லினம் மிகுதலும் மிகாமையுமாகி உறழும். ஆகாரச் சாரியை மிகுந்து வல்லினம் மிகும். எந்தச் சாரியையும் பெறாமல் இயல்பாகப் புணரும்.

எ.கா - இல் + பொருள் = இல் + ஐ + பொருள் = இல்லைப் பொருள், இல்லை பொருள்

இல் + பொருள் = இல் + ஆ + பொருள் = இல்லாப் பொருள், இல்லா பொருள்

மெல்லினமும் இடையினமும் வந்து புணருமிடத்தும் ஐகார, அகரச் சாரியைகள் மிகுந்து வரும்.

**இல்என் இன்மைச் சொற்கு ஐஅடைய**

**வன்மை விகற்பமும் ஆகா ரத்தோடு**

**வன்மை ஆகலு இயல்பும் ஆகும். (நன் : 233)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**புள், வள்**

புள், வள் எனும் பெயர்கள் தொழிற்பெயர் போன்று உகரச் சாரியை பெற்று புணரும்.

எ.கா - புள் + கடிது = புள் + உ + கடிது = புள்ளுக் கடிது

புள் + நன்று = புள் + உ + நன்று = புள்ளுநன்று

புள் + வலிது = புள் + உ + வலிது = புள்ளுவலிது

வள் + கடிது = வள் + உ + கடிது = வள்ளுக் கடிது - அல்வழி

வள் + நன்று = வள் + உ + நன்று = வள்ளுநன்று

வள் + வலிது = வள் + உ + வலிது = வள்ளுவலிது

புள் + கடுமை = புள் + உ + கடுமை = புள்ளுக்கடுமை

புள் + நன்மை = புள் + உ + நன்மை = புள்ளுநன்மை

புள் + வன்மை = புள் + உ + வன்மை = புள்ளுவன்மை - வேற்றுமை

வள் + கடுமை = வள் + உ + கடுமை = வள்ளுக்கடுமை

வள் + நன்மை = வள் + உ + நன்மை = வள்ளுநன்மை

வள் + வன்மை = வள் + உ + வன்மை = வள்ளுவன்மை

கள் என்பது கடிவாளம் படுக்கை எனும் பொருள்படும்,

**புள்ளும் வள்ளும் தொழிற் பெயர் மாறும் (நன் : 234)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வகர ஈறு (வ்)**

**சுட்டுப் பெயர்கள்**

சுட்டுப் பெயர்களின் இறுதியிலுள்ள வகரம் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவை வந்து புணருமிடத்து முறையே ஆய்தமும் இயல்பும் மெல்லினம் ஆகும். அவ், இவ், உவ் என்னும் சுட்டுப் பெயர்கள் நிலைமொழியாக நிற்கும்

எ.கா - அவ் + கடிய = அகடிய, அஃடிய

அவ் + ஞானம் = அஞ்ஞானம்

அவ் + யாளி = அவ்யாளி

இவ், உவ் ஆகியவற்றிற்கும் இவ்வாறு எடுத்துக்காட்டுகள் அமைத்துக் கொள்வது அவசியம்.

**சுட்டு வகரம்மூ வினம்உற முறையே**

**ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும். (நன் : 235)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**தெவ்**

தெவ் என்னும் சொல் புணர்ச்சியில் தொழிற்பெயர் போன்று உகரச் சாரியை பெறும். மகரம் (ம்) வந்து புணருமிடத்து உகரச் சாரியை பெறுதலேயன்றி, பெறாமல் வகரம் மகரமாகத் திரியும்.

எ.கா - தெவ் + கடிது = தெவ் + உ + கடிது =தெவ்வுக் கடிது

தெவ் + நன்று = தெவ் + உ + நன்று = தெவ்வுநன்று – அல்வழி

தெவ் + வலிது = தெவ் + உ + வலிது = தெவ்வுவலிது

தெவ் + கடுமை = தெவ் + உ + கடுமை = தெவ்வுக்கடுமை

தெவ் + நன்மை = தெவ் + உ + நன்மை = தெவ்வுநன்மை - வேற்றுமை

தெவ் + வலிமை = தெவ் + உ + வலிமை =தெவ்வுவலிமை

தெவ் + மன்னர் = தெம்மன்னர்

தெவ் + நன்று = தெந்நன்று - அல்வழி

தெவ் + பகைமை = தெம்பகைமை

**தெல்என் மொழியே தொழிற்பெயர் அற்றே**

**மவ்வரின் வ.்.கான் மவ்வும் ஆகும்** **(நன் : 236)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**வருமொழி திரிபு - சிறப்பு விதி**

**தகரமும் நகரமும் திரிதல்**

வருமொழி முதலில் உள்ள தகரமும் நகரமும் னகர, லகரங்களுக்கு முன்னர் வருமிடத்து முறையே றகரமாகவும், னகரமாகவும் திரியும். ணகர ளகரங்களுக்கு முன்னர் வருமிடத்து முறையே டகரமாகவும் ணகரமாகவும் திரியும்.

எ.கா – பொன் + தீது = பொன்றீது -அல்வழி

பொன் + தாலி = பொற்றாலி - வேற்றுமை

பொன் + நன்று = பொன்னன்று - அல்வழி

பொன் + நான் = பொன்னாண் - வேற்றுமை

கல் + தீது = கற்றீது - அல்வழி

கல் + தாழி = கற்றாழி - வேற்றுமை

கல் + நன்று =கன்னன்று - அல்வழி

கல் + நாய் = கன்னாய் - வேற்றுமை

மண் + தீது = மண்டீது - அல்வழி

மண் + தாழி = மண்டாழி - வேற்றுமை

மண் + நன்று = மண்ணன்று - அல்வழி

மண் + நாய் = மண்ணாய் - அல்வழி

முள் + தீமை = முட்டீமை - வேற்றுமை

முள் + நன்று = முண்ணன்று - அல்வழி

முள் + நன்மை = முண்ணன்மை - வேற்றுமை

**னலமுன் றனவும் ணளமுன் டணவும்**

**ஆகும் தநக்கள் ஆயுங் காலே** **(நன் : 237)**

என்னும் நூற்பா வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**வேற்றுமைப் புணர்ச்சியும் உருபு புணர்ச்சியும்**

உருபு புணரியலில் கூறப்படும் வேற்றுமை உருபு புணர்ச்சியின் முடிவுகள் அவ்வுருபுகள் தொக்கி நின்று அவ்வேற்றுமைப் பொருள் தோன்றப் புணரும் சொற்புணர்ச்சியிலும் ஒத்து முடியும்.

எல்லாம் என்பது உருபு புணர்ச்சியில் அற்றுச் சாரியை பெறும். இது உருபு புணரியலில் கூறப்படும் செய்தி ஆகும்

எ.கா - எல்லாம் + ஐ = எல்லாம் + அற்று + ஐ = எல்லாவற்றையும்

இம்முடிபு சொற்புணர்ச்சிக்கும் ஒத்து முடியும்.

எல்லாம் + கிளை = எல்லாம் + அற்று + கிளை = எல்லாவற்றுக் கிளை

சொற்புணர்ச்சி ( பதப்புணர்ச்சி) உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப் புணரியல் எனும் இரு இயல்களிலும் விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வியல்களில் வேற்றுமைப் புணர்ச்சி என சுட்டப்படுவன அனைத்தும் வேற்றுமை உருபுநோக்கி வேற்றுமைப் பொருள் தோன்றநிற்கும் வேற்றுமைத் தொகைத் தொடர்களுக்கு உரியனவாகும்.

**உருபின் முடிபை ஒக்கும்அப் பொளினும் (நன் : 238)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை விவரிக்கின்றது.

**புணரியல்களுக்குப் புறனடை**

இடைச்சொல், உரிச்சொல், வடசொல் ஆகிய சொற்களுள் உயிரீற்றுப் புணரியலிலும் மெய்யீற்றுப் புணரியலிலும் கூறப்பட்ட புணர்ச்சி இலக்கணங்கள் பொருந்தாமல் வேறுபட்டு வருவனவும் இலக்கணப் போலிச் சொற்கள். மரூஉ மொழிகள் ஆகியனவும் உலக வழக்கு. செய்யுள் வழக்கு எனும் இருவகை வழக்குகளிலும் நடக்கும் முறைமைக்குப் பொருந்தும்படி புணர்ச்சி முடிபுகளை அமைத்துக்கொள்ளுதல் யாவருக்கும் ஏற்புடைய முறையாகும்.

எ.கா – வண்டு + கால் = வண்டு + இன் + கால் = வண்டின்கால்

வேற்றுமைப் புணர்ச்சியில் இன் எனும் சாரியை இடைச் சொல்லின் னகரம் இயல்பாயிற்று.

மழ + களிறு = மழகளிறு

தட + தோள் = தடந்தோள் -

உரிச் சொல்லின் ஈற்று உயிர்முன் வல்லினம் வர இயல்பாயும் மெல்லினம் மிகுந்தும் வந்தன.

அளி + குலம் = அளிகுலம்

பாத + கமலம் = பாதகமலம்

வட சொல்லின் ஈற்று உயிர்முன் வல்லினம் வர இயல்பாயின

இல் + முன் = முன்றில் ,

பொது + இல் = பொதியில்

வேட்கை + அவா =வேணவா

இலக்கணப்போலி மொழிகள், முன்னர்க் கூறப்பட்ட விதிகளை ஏற்காமல் தமக்கு ஏற்றவாறு விகாரமாயின.

அருமருந்து + அன்ன = அருமருந்த

குணக்கு + உள்ளது = குணாது,

சோழன் + நாடு = சோணாடு

வடுகன் + தந்தை = வடுகந்தை

மலையமான் + நாடு = மலாடு

மரூஉ மொழிகள் முன்னர்க் கூறப்பட்ட விதிகளை ஏற்காமல் தமக்கு ஏற்றவாறு விகாரமாயின.

**இடைவரி வடசொல்லின் இயம்பிய கொளாதவும்**

**போலியும் மரூஉம் பொருந்திய ஆற்றிற்கு**

**இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே (நன் : 239)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

## அலகு – 5

# உருபு புணரியல்

சொல்லுடன் சொல் புணர்தலாகிய பதப்புணர்ச்சி இலக்கணம் புறப்புணர்ச்சி எனப்படும். இப்பகுதி நன்னூல் எழுத்ததிகாரத்தில் இறுதி இயலான 'உருபு புணரியலில்' இடம் பெற்ற செய்திகளை விளக்குவதாக அமைகிறது. உருபுகளின் எண்ணிக்கை, அவை வரும் முறை, பெயரும் உருபும் சேரும் போது நிகழும் மாற்றங்கள். உருபுப் புணர்ச்சியில் இடையில் இடம் பெறும் சாரியைகள், உருபுடன் சேரும் சில பெயர்ச் சொற்களுக்கான சிறப்பு விதிகள் முதலான இலக்கணப் பகுதிகள் ஆகியவை விவரிக்கப்படுகின்றன. பெயர்ச்சொல்லுடன் வேற்றுமை உருபுகள் புணரும் இலக்கணம் உருபுப் புணரியல் ஆகும். உருபுகள் பகுபதத்தின் ஓர் உருப்பாகக் கொள்ளப்படுவதால் ஒரு சொல்லுக்குள் இடம்பெறும் புணர்ச்சி என இதனைக்கருதி அகப்புணர்ச்சி எனக்குறிப்பிடுவர்.

வேற்றுமைஉருபுகள் புணருமிடத்து சாரியைகள் பெரும்பான்மையும் பெயர்ச்சொல்லை அடுத்து வரும். எனவே உருபுப்புணரியலில் சாரியைகள் புணர்ச்சியில் பெரும் இடம் பெரிதும் விவரிக்கப்படுகின்றது.

**உருபு புணரியல்**

பெயர்ச் சொற்களுக்கு முன்னர் வேற்றுமை உருபுகள் புணர்வதை விவரிக்கும் இயல் உருபுப் புணரியல் ஆகும்.

**வேற்றுமை உறுபுகள்**

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐவகைப்பாலுடன் தொடர்புடைய பெயர்களோடு எழுவாய் முதல் விளி ஈறாக உள்ள எட்டு வேற்றுமைகளையும் பெருக்கிட வேற்றுமை உருபுகள் நாற்பதாகும். வேற்றுமை எட்டு வகைப்படும்.

முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. எஞ்சிய 2 முதல் 7 வேற்றுமைகளுக்கே உருபுகள் உள்ளன.

**பெயர் வகை 5 × வேற்றுமைவகை 8 = 40 உருபுகள்**

எ.கா – சேரன், சேரனை, சேரனோடு, சேரனுக்கு, - ஆண்பால்பெயருடன் உருபு
சேரனின், சேரனது, சேரன்கண், சேரா

சீதை, சீதையை, சீதையோடு, சீதைக்கு - பெண்பால்பெயருடன் உருபு

சீதையின், சீதையது, சீதைகண், சீதா

அவர், அவரை, அவரொடு, அவருக்கு - பலர்பால் பெயருடன் உருபு

அவரின், அவரது, அவர்கண், அவரே

குயில், குயிலை, குயிடிலொடு, குயிலுக்கு - ஒன்றன்பால் பெயருடன் உருபு

குயிலின், குயிலது, குயிலின்கண், குயிலே

முயல்கள், முயல்களை, முயல்களொடு, முயல்களுக்கு - பலவின்பால் பெயருடன் உருபு

முயல்களின், முயல்களது, முயல்களின்கண், முயல்களே,

**ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என**

**வருபெயர் ஐந்தொடு – பெயர் முதல் இருநான்கு**

**உருபும் உறழ்தர நாற்பதுஆம் உருபே (நன் : 240)**

என்னும் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**உருபுகள் வரும் இடம்**

வேற்றுமை உருபுகள் தமக்குரிய வேற்றுமைப் பொருளைத் தருதற்குப் பெயர்ச் சொற்களின் பின்னர் வரும்.

உருபுகள் பெயர்ச் சொற்களுக்குப் பின்னர் வரும் என்பது கருத்து.

வேற்றுமைப் பொருள் என்பது எழுவாய், செயப்படுபொருள் போல்வன ஆகும்.

எ.கா – நம்பி. நம்பி + ஐ, நம்பி + கு, நம்பி + இன், நம்பி + அது, நம்பி + கண், நம்பி + ஏ

எழுவாய் வேற்றுமைக்குப் பெயர்ச்சொல்லே உருபு ஆகும்.

**பெயர் வழித் தம் பொருள் தர வரும் உருபே (நன் : 241)**

என்னும் நூற்பா இதனை விளக்குகிறது.

**உருபு புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி முடிபு பெறும்**

உயிரையும் மெய்யையும் முதலாகவும் இறுதியாகவும் கொண்ட வேற்றுமை உருபுகள் நிலைமொழியோடும் வருமொழியோடும் புணரும். அவ்வமயம் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல் ஆகிய இரு இயல்களிலும் (பதப்புணர்ச்சியில்) பெயர்ச் சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் பெறும் புணர்ச்சி முடிபுகளை வேற்றுமை உருபுகளும் பெரும்பான்மையும் ஏற்கும்.

பெயர்ச் சொற்களின் புணர்ச்சி முடிபுகளுள் பெரும்பான்மையானவற்றை வேற்றுமை உருபுகள் பெறும்.

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே வேற்றுமை உருபுகள் வருதலால் அவ்விருவகை மொழிகளோடும் உருபுகள் புணரும்.

வேற்றுமை உருபுகள் இடைச்சொற்கள் பெயர், வினைச் சொற்களை நிலைமொழியாகக் கொண்டு பெரும்பான்மையும் புணர்ச்சி இலக்கணம் முந்தைய இயல்களில் கூறப்பட்டதால் இங்கு இவ்விதி சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றது.

எ.கா – நம்பி + கண் + வாழ்வு = நம்பிக்கண் வாழ்வு

**ஆவி யரமுன் வன்மை மிகா (நன் : 159)**

**ணனவல்லினம் வரட்டறவும் பிறவரின் இயல்பும் ஆகும். வேற்றுமைக்கு (நன் : 209)**

எனும் விதிகளின்படி கண் உருபின் முதலும் ஈறும் நிலைமொழியோடும் வருமொழியோடும் இயல்பாகிப் புணர்ந்தன.

உறி + கண் + பால் = உறிக்கம்பால்

**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் (நன் : 165)**

**ணன வல்லினம் வரட் டறவும் (நன் : 20)**

எனும் விதிகளின்படி கண் உருபின் முதலும் ஈறும் விகாரமாகிப் புணர்ந்தன. இதனை,

**ஒற்றுஉயிர் முதல்ஈற்று உருபுகள் புணர்ச்சியின்**
**ஒக்கும்மன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே (நன் : 242)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக அறியலாம்.

**புணர்ச்சியின் சாரியை வருதல்**

பதத்தின் முன்னர் விகுதியாவது, பதமாவது, உருபாவது புணரும். புணருமிடத்து அவற்றிற்கு இடையே ஒரு சாரியையோ பல சாரியைகளோ வரும். அல்லது சாரியை வராது. அல்லது சாரியை வருதலும் வராமையும் ஆகிய உறழ்ச்சியாகி வரும்.

வருமொழியின் அடிப்படையில் புணர்ச்சி மூவகைப்படும்.

1. விகுதிப் புணர்ச்சி = பதம் + விகுதி (ஒரு சொல்லினுள் அமைவது)

உறுப்பிலக்கணத்தில் சாரியை இடம் பெறும்

எ.கா - செய் + க = செய்க, செய் + த் + ஆன் = செய்தான்

செய் + த் + அன் + அன் = செய்தனன்

2. பதப்புணர்ச்சி = பதம் + பதம் (சொற்களுக்கு இடையில் தொடரில் அமைவது)

பதப்புணர்ச்சியில் சாரியை இடம் பெறும்

எ.கா - புளி + பழம் = புளி + அம் + பழம் = புளியம்பழம்

புளி + க் + கறி = புளிக்கறி ,

குளம் + கரை = குளக்கரை, குளம் + அத்து + அம் + கரை = குளத்தங்கரை

குளம் + கரை = குள + கரை = குளக்கரை

3. உருபு புணர்ச்சி = பதம் + வேற்றுமை உருபு சொல்லுடன், உருபு புணருதல்

எ.கா - அவை + ஐ = அவை + அற்து + ஐ = அவற்றை

கிளி + ஐ = கிளியை, கிளி + ஐ = கிளி + இன் + ஐ = கிளியினை

மூவகைப் புணர்ச்சியிலும் சாரியை வராமலும் வருதலும் உறழ்தலும் அமைந்துள்ளன.

விகுதிப் புணர்ச்சியும ் உருபு புணர்ச்சியும் அமைந்த வடிவம் ஒரு சொல்லாகக் கருதப்படுவதால் இவ்விரு புணர்ச்சிகளையும் அகப்புணர்ச்சி (Internal sandhi) ஒரு சொல்லுக்குள் புணர்ச்சி என்றும் பதப்புணர்ச்சி இரு சொற்கட்கு இடையில் இடம் பெறுவதால் புறச்சந்தி (external sandhi) என்றும் கூறப்படும்.

**பதம்முன் விகுதியும் பதமும் உருபும்**

**புணர்விழி ஒன்றும் பலவும் சாரியை**

**வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும். (நன் : 243)**

என்னும் நூற்பா இதனை விவரிக்கின்றது.

**சாரியைகள்**

அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன ஆகிய பதினேழும் அவை போன்ற பிறவும் சாரியைகளாகும். இச்சாரியைகள் விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி, உருபுப் புணர்ச்சி எனும் மூவகைப் புணர்ச்சிகளுக்கும் பொதுவானவையாகும்.

எ.கா –

அன் - பார் + த் + த் + அன் + அ = பார்த்தன

ஒன்று + கூட்டம் = ஒன்று + அன் + கூட்டம் = ஒன்றன் கூட்டம்,

ஒன்று + ஐ + ஒன் + அன் + ஐ = ஒன்றனை

ஆன் - பரணி + கொண்டான் = பரணி + ஆன் + கொண்டான் = பரணியாற்கொண்டான்

ஒருபது + ஐ = ஒருபது + ஆன் + ஐ = ஒருபானை

இன் - வண்டு + கால் = வண்டு + இன் + கால் = வண்டின்கால்

வண்டு + ஐ = வண்டு + இன் + ஐ = வண்டினை

அல் - தொடை + அல் = தொடையல்

அற்று – பல + கோடு = பல + அற்று + கோடு = பலவற்றுக்கோடு

பல + ஐ = பல + அற்று + ஐ = பலவற்றை

இற்று - பத்து + பத்து = பத்து + இற்று + பத்து = பதிற்றுப் பத்து

அத்து – மரம் + கிளை = மரம் + அத்து + கிளை = மரத்துக்கிளை

மரம் + ஐ = மரம் + அத்து + ஐ = மரத்தை

அம் - பனை + காய் = பனை + அம் + காய் = பனங்காய்

தம் - எல்லாரும் + கை = எல்லாரும் + தம் + கை = எல்லார்த்தங்கையும்

எல்லாரும் + ஐ = எல்லாரும் + தம் + ஐ = எல்லார்த்தையும்

நம் - எல்லாம் + கை = எல்லாம் + நம் + கை = எல்லார்நங்கையும்

எல்லாம் + ஐ = எல்லீரும் + நும் + ஐ = எல்லீம்நும்மையும்

ஏ – ஒன்று + கால் = ஒன்று + ஏ + கால் = ஒன்றேகால்

அ – செய் + த் + அ + து = செய்தது ,

குன்று + கூகை = குன்று + அ + கூகை = குன்றக்கூகை

உ – சேரன் + கு = சேரன் + உ + கு = சேரனுக்கு

ஐ – ஒன்று + கொம்பு = ஒன்று + ஐ + கொம்பு = ஒற்றைக்கொம்பு

ன் - கோ + முடி = கோ + ன் + முடி = கோன்முடி

கோ + ஐ = கோ + ன் + ஐ = கோனை

இவை போன்ற பிற சாரியைகள்ஆன தன், தான், தாம், ஆம் முதலியனவும் வரும்.

எ.கா – அவன் + ஐ = அவன் + தன் + ஐ = அவன்றனை, அவன்தாம், அவர்தாம்,

மண் + கட்டி = மண் + ஆம் + கை + கட்டி = மண்ணாங்கட்டி

**அன்ஆன் இன்அல் அற்றுஇற்று அத்துஅம்**

**தம்நம் நும்ஏ அஉ ஐகுன**

**இன்ன பிறவும் பொதுச்சாரியையே (நன் : 244)**

என்னும் நன்னூல் நூற்பா இதனை விவரிக்கின்றது. இதன்படி 17 பொதுச் சாரியைகள் இடம்பெற்றுள்ளன.

**எல்லாம்**

அஃறிணையில் வரும் எல்லாம் எனும் பெயருடன் வேற்றுமை உருபுகள் புணருமிடத்து எல்லாம் என்பதன் இடையில் அற்றுச்சாரியையும் உருபுகளும் நிற்க. ஈற்றில் உம் வரும். அப்பெயர் உயர்திணையாயின், இடையில் நம் சாரியையும் உருபுகளும், ஈற்றில் உம்மும் வரும்.

எ.கா -எல்லாம் + ஒடு = எல்லா + அற்று + ஒடு + உம் = எல்லாவற்றோடும் - அஃறிணை

எல்லாம் + ஒடு = எல்லாம் + நம் + ஒடு + உம் = எல்லாநம்மொடும். -உயர்திணை

**எல்லாம் என்பது இழிதிணை ஆயின்**

**அற்றொடு உருபின் மேல்உம் உறுமே**

**அற்றேல் நம்இடை அடைந்துஅற்ற ஆகம் (நன் : 245)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**எல்லாரும் - எல்லீரும்**

எல்லாரும் - எல்லீரும் எனும் பெயர்களுடன் வேற்றுமை உருபுகள் புணருமிடத்து அவ்விரு பெயர்களும் உள்ள உம் விலகி இறுதியில் நிற்க இடையே முறையே தம் - நும் என்னும் சாரியைகளும் உருபுகளும் பெற்று வரும்.

எல்லார் + ஐ = எல்லார் + தம் + ஐ + உம் = எல்லார் தம்மையும்

எல்லீர் + ஐ = எல்லீர் + நும் + ஐ + உம் = எல்லீர் நும்மையும்

**எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை**

**தள்ளி நிரலே தம்நும் சாரப்**

**புல்லும் உரிபின் பின்னர் உம்மே (நன் : 246)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**மூவிடப் பெயர்கள் (தான், தாம். நாம்)**

தான், தாம். நாம் என்னும் மூன்று பெயர்களும் உருபுகளுடன் புணருமிடத்து முதலிலுள்ள நெடில் குறுகி தன், தம், நம் என ஆகும். யான், யாம், நீ, நீர் என்பன முறையே என், எம், நின், நும் என ஆகும். நான்காம் வேற்றுமை உருபான கு புணருமிடத்து இடையில் அகரச்சாரியை வரும். கு, அது எனும் உருபுகள் புணருமிடத்து நிலைமொழி இறுதியிலுள்ள மெய்யெழுத்து இரட்டிப்பாகாது.

எ.கா -

தான்+ஐ = தன்னை, தான்+ஓடு = தன் +ஓடு = தன்னோடு, தான்+ கு = தன் +அ +கு = தனக்கு

தான்+இன் =தன்+இன் =தன்னின், தான்+அது= தன்+அது= தனது, தான்+கண்= தன்+கண்= தங்கண்

தாம்+ஐ = தம்+ஐ = தம்மை, தாம்+ஆல்= தம்+ஆல்= தம்மால், தாம்+கு = தாம்+அ+கு = தமக்கு

தாம்+இன் = தம்+இன்= தம்மின், தாம்+அது = தம்+அது =தமது, தாம்+கண்= தம்+கண் =தங்கண்

நாம் +ஐ =நம் +ஐ =நம்மை, நாம் +ஓடு =நம் +ஓடு =நம்மோடு, நாம் +கு =நம் +அ +கு =நமக்கு

நாம்+அது =நம் +அது =நமது, நாம்+இன் =நம் +இன் =நம்மின், நாம் +கண் =நம் +கண் =நங்கண்

யான் +ஐ=என் +ஐ=என்னை, யான் +ஆல்=என் +ஆல் =என்னால்யான் +கு=என் +அ +கு = எனக்கு

யான்+ இன் = என் + இன் = என்னின், யான் +அது = என் + அது = எனது, யான் + கண்= என் +கண் = என்கண்

யாம் + ஐ = எம் + ஐ = எம்மை, யாம் + ஆல் = எம் + ஆல் = எம்மால்,
யாம் + கு = எம் + அ + கு = எமக்கு

யாம்+ ன் =எம் +இன் =எம்மின், யாம் + அது = எம் + அது = எனது, யாம் + கண் = எம் + கண் = எம்கண்,

நீ +ஐ = நின்+ஐ =நின்னை, நீ +ஆல் = நின்+ஆல் = நின்னால், நீ +கு =நின் +அ +கு= நினக்கு

நீ +இன் =நின்+இன் =நின்னின், நீ+அது =நின் +அது =நினது, நீ +கு =நின் +அ +கு =நினக்கு

நீ + கண் = நின் + கண் = நின்கண்,

நீர் +ஐ =நும் +ஐ =நும்மை, நீர் +ஆல் =நும் +ஆல் =நும்மால், நீர் +கு =நும் +அ +கு =நுமக்கு

நீர் +இன் =நும் +இன் =நம்மின், நீர் +அது =நும் +அது =நுமது, நீர் +கண் =நும் +கண் =நுங்கண்

நான்காம் உருபும் ஆறாம் உருபும் சேரும்பொழுது அகர உயிர் வந்தபோதிலும் நிலைமொழியான குறிலொற்று இரட்டவில்லை.

யான், யாம் என்பது தன்மை, நீ, நீர் என்பது முன்னிலை., தான், தாம் என்பது படர்க்கை

**தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்**

**நீநீர் என்எம் நின்நும் ஆம்பிற**

**குல்வின் அல்லரும் நான்கு ஆறு இரட்டல் (நன் : 247)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**ஆ, மா, கோ**

ஆ, மா, கோ எனும் மூன்று ஓரெழுத்து பெயர்களுடன் வேற்றுமை உருபுகள் புணரும்பொழுது இடையில் நகரச் சாரியை இணையவும் பெரும்.

எ.கா - ஆ + ஐ = ஆ + ன் + ஐ = ஆனை

மா + ஐ = மா + ன் + ஐ = மானை

கோ + ஐ = கோ + ன் + ஐ = கோனை

ஆ + ஐ = ஆவை, மா + ஐ = மாவை, கோ + ஐ = கோவை

இவ்வாறு பிற உயிர்களுக்கும் எடுத்துக்காட்டுகளை அமைத்துக்கொள்வது அவசியம். அணையவும் என்ற உம்மை சாரியை வராமலும் புணரும்.

**ஆமா கோன அணையவும் பெறுமே (நன் : 248)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**ஒருபது முதலியன**

ஒன்று முதல் எட்டு ஈறாக உள்ள எண்களோடு சேர்த்து வரும் பத்து அதாவது ஒருபது, இருபது என வரும் எண்ணுப் பெயர்களின் பின் உருபுகள் சேரும் போது இடையில் 'ஆன்' சாரியை வந்தால் பத்து என்பதன் பகர மெய் ஒழிந்த எல்லா எழுத்துக்களும் கெடும். ஒன்பது எனும் பெயரும் இவ்வாறே புணரும்.

எ.கா - ஒருபது + ஐ = ஒருபது + ஆன் + ஐ = ஒருப் + ஆன் + ஐ = ஒருபானை

இருபது + ஐ = இருபது + ஆன் + ஐ = இருப் + ஆன் + ஐ = இருபானை

முப்பது + ஐ = முப்பது + ஆன் + ஐ = முப்ப + ஆன் + ஐ = முப்பானை

நாற்பது + ஐ = நாற்பது + ஆன் + ஐ = நாற்ப் + ஆன் + ஐ = நாற்பானை

ஐமபது + ஐ = ஐம்பது + ஆன் + ஐ = ஐம்ப் + ஆன் + ஐ = ஐம்பானை

அறுபது + ஐ = அறுபது + ஆன் + ஐ = அறுப் + ஆன் + ஐ = அறுபானை

எழுபது + ஐ = எழுபது + ஆன் + ஐ = எழுப் + ஆன் + ஐ = எழுபானை

எண்பது + ஐ = எண்பது + ஆன் + ஐ = எண்ப் + ஆன் + ஐ = எண்பானை

ஒன்பது + ஐ = ஒன்பது + ஆன் + ஐ = ஒன்ப் + ஆன் + ஐ = ஒன்பானை

இங்குப் பது என்பதில் உள்ள அது கெட்டு பகரமெய் நின்றது. பிற உருபுகளுக்கும் இவ்வாறே அமைத்துக் கொள்ளலாம்.

**ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ஊர்**
**பத்தின்முன் ஆன்வரின் பவ்வொற்று ஒழியமேல்**
**எல்லாம் ஓடும் ஒன்பதும் இற்றே (நன் : 249)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**சுட்டுப்பெயர்**

**அவ், இவ், உவ்**

வகர ஈற்றுச் சுட்டுப் பெயராகிய அவ், இவ், உவ், என்பவற்றிற்கு முன்னர் வேற்றுமை உருபுகள் புணருமிடத்து இடையில் அற்றுச் சாரியை வரும்.

எ.கா - அவ் + ஐ = அவ் + அற்று + ஐ = அவற்றை

இவ் + ஐ = இவ் + அற்று + ஐ = இவற்றை

உவ் + ஐ = உவ் + அற்று + ஐ = உவற்றை

பிற உருபுகளுக்கும் இவ்வாறு சான்று அமைத்துக் கொள்வது அவசியம். இவை பன்மைச் சுட்டுப் பெயர்கள் ஆகும்.

**வவ்இறு சுட்டிற்கு அற்று உறல் வழியே (நன் : 250)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**அ.்.து இ.்.து உ.்.து**

அ.்.து, இ.்.து, உ.்.து முதலான சுட்டுப் பெயர்களோடு வேற்றுமை உருபுகள் புணருமிடத்து இடையில் அன் சாரியை வந்தால் சுட்டுப் பெயர்களிலுள்ள ஆய்த எழுத்து மறையும்.

எ.கா - அ.்.து + ஐ = அ.்.து + அன் + ஐ = அது + அன் + ஐ = அதனை

இ.்.து + ஐ = இ.்.து + அன் + ஐ = இது + அன் + ஐ = இதனை

உ.்.து + ஐ = உ.்.து + அன் + ஐ = உது + அன் + ஐ = உதனை

இவை ஒருமைச் சுட்டுப் பெயர்கள் ஆகும். அன்சாரியை வந்தால் ஆய்தம் கெடும் என்றமையால் வராமலிருந்தால் ஆய்தம் கெடாது என கொள்ள வேண்டும்.

எ.கா - அ.்.து + ஐ = அ.்.தை, இ.்.து + ஐ = இ.்.தை, உ.்.து + ஐ = உ.்.தை

பிற உருபுகளுக்கும் இவ்வாறு சான்று அமைத்துக் கொள்வது அவசியம்.

**சுட்டின் முன் ஆய்தம் அன்வரின் கெடுமே (நன் : 251)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**அத்துச் சாரியை**

நிலைமொழி இறுதியிலுள்ள அகரத்தின் முன்ன வரும் அத்துச்சாரியையின் அகரம் கெடும். எ.கா –

மக(ம்) + ஐ = மகம் + அத்து + ஐ = மக + அத்து + ஐ = மக + த்து + ஐ = மகத்தை

மர(ம்) + ஐ = மரம் + அத்து + ஐ = மர + அத்து + ஐ = மர + த்து + ஐ = மரத்தை

குள(ம்) + நீர் = குளம் + அத்து +நீர் = குள +அத்து + நீர் = குள + த்து +நீர் = குளத்துநீர

**அத்தின் அகரம் அகரமுனை இல்லை (நன் : 252)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**புறனடை**

**சாரியைகளை அறிதல்**

விகுதிப் புணர்ச்சி. பதப்புணர்ச்சி, உருபுப் புணர்ச்சி எனும் மூன்றிலும் இதற்கு இதுவே சாரியை என வரையறுத்தற்கு ஓர் அளவு இல்லை. எனவே இம்மூவகைப் புணர்ச்சிகளையும் பிரித்து, இடையில் வரும் எழுத்து, பதம் ஆகியவற்றைச் சாரியை என்று கொள்ளுதலும் அவற்றின் இயல்பினைத் தெளிவாக அறிவித்தலும் அறிஞர்கள் வகுக்கும் இலக்கணமாகும். இச்சாரியை

1. எழுத்துச்சாரியை
2. பதச்சாரியை

என இருவகைப்படும். ஓரெழுத்து உடையது எழுத்துச்சாரியை, பல எழுத்துக்கள் கொண்டு சொல்லாக வருவது பதச்சாரியை ஆகும்.

எ.கா – எழுத்துச்சாரியைகள் அ, உ, ஏ, ஐ போல்வன

பதச்சாரியைகள் அன், இன், அம் போல்வன

| | | | |
|---|---|---|---|
| எ.கா – | பார் + த் + த் + அ + து | - அ | விகுதி, உருபு |
| | பொன் + உ + க் + கு | - உ | பதப்புணர்ச்சிகளில் |
| | ஒன்று + ஏ + முக்கால் | - ஏ | எழுத்துச்சாரியைகள் |
| | பார்த் + த் + அன் + அன் | - அன் | விகுதி, உருபு |
| | அவ் + அற்று + ஐ | - அற்று | பதப்புணர்ச்சிகளில் |
| | புளி + அம் + காய் | - அம் | பதச்சாரியைகள் |

**இதற்குஇது சாரியை எனின்அளவு இன்மையின்**
**விகுதியும் பதமும் உருபும் பகுத்துஇடை**
**நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்**
**ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே** **(நன் : 252)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனைஅறியலாம்

**புறனடை - பொருந்ததும் விதி கொள்க**

விகுதிப் புணர்ச்சி, பதப்புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி, உருபு புணர்ச்சி ஆகியவற்றில் பொதுப்படக் கூறப்பட்ட விதிகளை ஆராய்ந்தரிந்து எதற்கு எவ்விதி பொருந்துமோ அவ்விதியையே அதற்கு ஏற்றதாகக் கொள்ள வேண்டும்.

விகுதிப் புணர்ச்சியில் **றவ்வொடு உகர உம்மை நிகழ்பல்லவும் (நன்:145)** என பொதுப்படக் கூறப்பட்டது. எனினும் 'சென்று' எனும் சொல்லில் றுகரம் இறந்த காலத்திற்கும் 'சேறு' எனும் சொல்லில் றுகரம் எதிர்காலத்திற்கும் பொருந்தும.

பதப்புணர்ச்சியில் **அல்வழி இஐம் முன்னராயின், இயல்பும் மிகலும் விகற்பமும்' ஆகும்** (நன் : 176) என பொதுப்படக் கூறப்பட்டது. எனினும் ''யானைக் குதிரைகள்'' என உம்மைத் தொகை இயல்பாகியும் ''ஆடித்திங்கள்'' எனப் பண்புத் தொகையில் வல்லெழுத்து மிகுந்தும் ''கிளிக்குறிது'' எனச் சில எழுவாய்த் தொடர்களில் உறழ்ந்தும் வரும்.

சாரியைப் புணர்ச்சியில் **பதம் முன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை, வருதலும், தவிர்தலும் விகற்பமும் ஆகும்** (நன் : 243) என பொதுப்படக் கூறப்பட்டது. எனினும் ''நாட்டின் கண் வாழ்ந்தான்'' என்பதில் கண் உருபிற்கு இன்சாரியை வரும் எனவும் ''காட்டின் நீங்கினான்'' என்பதில் இன வேற்றுமை உருபிற்குப் பெரும்பான்மையும் இன்சாரியை வராது எனவும் கொள்ளலாம்.

உருபு புணர்ச்சியில் '' **ஒற்று உயிர் முதல் ஈற்று உருபுகள் புணர்ச்சியின், ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்பே** (நன் : 242) என பொதுப்படக் கூறப்பட்டது. எனினும் ''நம்பிகண்'' எனக் கண் உருபுவரின் வல்லினம் மிகாது எனவும் ''நம்பிக்கு'' எனக் குவ்வுருபு வரின் மிகும் எனவும் கொள்ளலாம்.

**விகுதி பதம்சா ரியைஉருபு அனைத்திலும்**
**உரைத்த விதியின் ஓர்ந்து ஒப்பன கொளலே. (நன் : 254)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி**

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி பொது விதிப்படி முடியும். அதோடு பொதுவிதியில் இயல்பு என கூறப்பட்டதில் விகாரமாகியும் விகாரம் என கூறப்பட்டதில் இயல்பாகியும் முடியும். மேலும் உயர்திணை, விரவுத் திணை எனும் இருவகைப் பெயர்களுடன் உருபு வெளிப்பட்டும் மறைந்தும் வரும். அவை போன்ற பிற வேறுபட்ட புணர்ச்சி விதிகளும் வரும்.

எ.கா - நின் + புறம்காப்ப = நிற்புறக் காப்ப - இதில் நின் என்பது விகாரமாயிற்று. **நின் என்பதன் னகரம் இயல்பாகும் (நன் : 218)** என்பது பொது விதி ஆகும்.

மண் + சுமந்தான் = மண்சுமந்தான், பொன் + கொடுத்தான் = பொன்கொடுத்தான்.

ணகரம் டகரமாகவும் னகரம் றகரமாகவும் விகாரமடையும் என்பது பொது விதி ( நன் : 209) ஆனால் இங்கு ணகரமும் னகரமும் இயல்பாயின.

நம்பி + ஐ + கண்டான் = நம்பியைக் கண்டான் - உயர்திணையில் உருபு வெளிப்பட்டது.

மகன் + பெற்றாள் = மகற்பெற்றாள் - உயர்திணையில் உருபு மறைந்தது.

சாத்தன் + ஐ + கண்டான் = சாத்தனைக் கண்டான் - விரவுத் திணையில் உருபு வெளிப்பட்டது.

ஆண் + பெற்றாள் = ஆண் பெற்றாள் - விரவுத் திணையில் உருபு மறைந்தது.

**இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்**

**உயர்திணை இடத்து விரிந்தும் தொக்கும்**

**விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்**

**அன்ன பிறவும் ஆகும் ஐஉருபே (நன் : 255)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சி**

மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியில் உயிரையும் மெய்யையும் இறுதியாகக் கொண்ட நிலைமொழி முன்னர்க் கருத்தாவாலாகிய தொழிலைக் குறிக்கின்ற வல்லினத்தை முதலாக உடைய வினைச் சொற்கள் வந்தால், அவ்வல்லினம் மிகாமையும் மிகுதலுமாகிய உறழ்ச்சியும் இயல்பு ஆகும்.

கருத்தாவால் ஆகிய தொழிலைக் குறிக்கும் வினைச் சொற்கள் செயப்பாட்டு வினைச்சொற்கள் ஆகும்.

எ.கா – புலி + கோட்பட்டான் = புலி கோட்பட்டான், புலிக்கோட்பட்டான்

சூர் + கோட்பட்டான் = சூர் கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான் - உறழ்ச்சி

புலி + கடிக்கப்பட்டான் = புலி கடிக்கப்பட்டான்

நாய் + கடிக்கப்பட்டான் = நாய் கடிக்கப்பட்டான் - இயல்பு

இப்புணர்ச்சி மூன்றாம் வேற்றுமைத் தொகையில் அமைந்துவரும்.

**புள்ளியும் உயிரும் ஆய்இறு சொல்முன்**

**தம்மின் ஆகிய தொழில்மொழி வரினே**

**வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும். (நன் : 256)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்

**எழுத்ததிகாரப் புறனடை**

இதற்கு இதுவே இலக்கணம் என்று எல்லாவற்றிற்கும் குறைவின்றி இலக்கணம் கூறுதல் இயலாது. ஆதலால் இவ்வதிகாரத்தில் கூறப்பட்ட விதிகளைக் கொண்டு கூறப்படாதவற்றிற்கும் விதிகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**இதற்குஇது முடிபுஎன்று எஞ்சாது யாவும்**

**விதிப்பு அளவு இன்மையின் விதித்தவற்று இயலான்**

**வகுத்துஉரை யாதனவும் வகுத்தனர் கொளலே (நன் : 257)**

என்னும் நன்னூல் நூற்பா வாயிலாக இதனை அறியலாம்.

**டாக்டர் கு. கதிரேசன்** M.A., M.A. (yoga), M.Phil., Ph.D.
தமிழ்த்துறை, ஆதித்தனார் கலை அறிவியல் கல்லூரி
திருச்செந்தூர் - 628 216.